
புதிய சமுதாயம்

KDN 10657 ஆசிரியர்: முருகு சுப்பிரமணியன் 10-6-1977





அன்றும் இன்றும்



பேராசிரியர்
தமிழ்க்குடிமகன்

அன்று...

ஓங்கி வளர்ந்தோம்; உயரவே பறந்தோம்
ஒருவரும் நிகரில்லை-புகழ்
தாங்கி இருந்தோம்; தலைமையும் கொண்டோம்
தவறுகள் செய்யவில்லை-நாம்
வாங்குவ தில்லை; வாரிக் கொடுத்தோம்
வள்ளலாய் வாழ்ந்திருந்தோம்-பிறர்
ஏங்கிடு மாறும் எரிந்திடு மாறும்
என்றும் நடந்ததில்லை!

சங்கம் அமைத்தோம்; தமிழை வளர்த்தோம்
தனிச்சுவை கண்டிருந்தோம்-உலகு
எங்கணும் தமிழர் இனத்தினுக் கென்றே
இடமும் பெற்றிருந்தோம்-பலர்
தங்கள் உயிராம் தமிழைப் போற்றலே
தலைப்பணி என்றிருந்தார்-ஒரு
மங்கலும் இல்லை; மயக்கமும் இல்லை
மலைமேல் விளக்கானோம்!

இன்று...

வாய்மையும் இல்லை; வளமையு மில்லை
வறுமை வாட்டுதடா-உளத்
தாய்மையும் இல்லை; துணிவுமே இல்லை
துன்பம் சேருதடா-நம்
தாய்மொழி காக்கும் தன்னுணர் வுள்ள
தமிழரைக் காணவில்லை-பல
பேய்களின் ஆட்டம் பெருத்தத னாலே
பேசவும் நாவில்லை!

உச்சமாம் புகழில் உயர்ந்திடும் போது
ஓரிடி தலையில்விழ-நாம்
"நச்"சென வீழ்ந்தோம்; நரம்பு தளர்ந்தோம்
நாடி ஒடுங்கியது-இனி
எச்சமாம் நாளை எண்ணிடப் போந்தோம்
இறுதி நெருங்கியதால்-சற்று
மிச்சமாய் உள்ள மேன்மையும் கொன்று
வீழ்வோம்; வாழ்வெதற்கு?

அட்டைப்படம்: மாயன்

NA-8.

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு — குறள்

புதிய சமுதாயம்

திருவள்ளுவர் ஆண்டு 2008 வைகாசி 28
கம்பம் 1 ஃ (10-6-1977) ஃ குடும்பம் 6

மாணவர்களின் மயக்கம்

நாட்டின் பல்வேறு மருத்துவமனைகளிலும் கடந்த மூன்றுண்டுகளில் போதைப் பொருள் பழக்கத்தால் பீடிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றவர்களில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதி அதாவது 3676 பேர் மாணவர்கள் என்பது அதிர்ச்சியூட்டும் தகவலாகும்.

மத்திய போதைப் பொருள் நிலையத்தின் இயக்குநர் இஞ்சே முகம்மட் ஜார்ஜிஸ் அண்மையில் கருத்தரங்கு ஒன்றில் வெளியிட்டிருக்கும் கீழ்க்காணும் புள்ளி விவரங்கள் பொதுவாக நமது மக்களின் தீவிர சிந்தனைக்கு உரியவையாகும்.

1973க்கும் 1976க்கும் இடையில் மருத்துவமனைகளில் போதைப் பழக்கத்திற்காகச் சிகிச்சை பெற்றவர்கள் மொத்தம் 11,549 பேர். அவர்களில் 31.8 சதவிகிதம் அதாவது 3,676 பேர், மாணவர்கள்.

மொத்தம் சிகிச்சை பெற்றவர்களில் 85.2 சதவிகிதம் பேர் 15 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்.

பினங்கிலும், சிலாங்கூரிலும் 1975ல் 16,166 மாணவர்கள் பேட்டி காணப்பட்டனர். அவர்களில் 11.5 சதவிகிதம் அதாவது 1,816 பேர், போதைப் பொருளை உபயோகித்தவர்கள் என்பது தெரிய வந்தது.

போதைப் பொருள் குற்றத்திற்காகச் சென்ற ஆண்டு கைது செய்யப்பட்ட 5,128 பேரில் 76.5 சதவிகிதம் அதாவது 3,923 பேர் 17 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்.

மேற்கண்ட புள்ளி விவரங்கள் நமது மாணவர்களும் இளவட்டங்களும் எந்த அளவுக்குப் போதைப் பொருளுக்கு அடிமைப்பட்டுள்ளனர் என்பதைப் பயங்கரமான முறையில் புலப்படுத்துகின்றன.

குறிப்பாக மாணவர் உலகத்தை இந்தப் போதை மயக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டியது நாடு எதிர் நோக்கி நிற்கும் மிகப்பெரிய சவால் என்பதில் ஐயம் இல்லை.

அரசாங்கம் போதைப் பொருள் குற்றவாளிகளைப் பிடிப்பதிலும், தண்டிப்பதிலும் கடுமையான சட்டங்களின் துணையோடு செயல்பட்டு வருகிறதென்பது உண்

புதிய சமுதாயத்தின் முகவரி

131, ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மான், [2ஆவது மாடி] கோலாலம்பூர் 01-08. தொலைபேசி:80839

மையே என்றாலும் இந்தப் பொறுப்பை அரசாங்க இலாக்காக்களிடம் மட்டும் விட்டு விடுவது எதிர்பார்க்கின்ற அளவுக்குப் பலனைத் தராது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் போதைப்பொருள் பழக்கம் தீண்டாமல் கண்ணும் கருத்துமாகக் கண்காணிப்பது மிக முக்கியமாகும்.

பள்ளிக்கூடத்திற்குச் சென்று வருகிற பிள்ளைகளின் போக்கில் மாற்றம் ஏதும் ஏற்படுகிறதா என்பதைத் தாய் தந்தையர் கவனித்து வந்தால் குழந்தைகள் வழிதவறிச் சென்றுவிடாதபடி பார்த்துக்கொள்ள முடியும். அதுபோலவே பள்ளிக்கூடங்களிலும் தலைமையாசிரியர்களும், வகுப்பு ஆசிரியர்களும் மாணவர்களோடு நடமாடுகிற தீய சக்திகளை இனம் கண்டுபிடித்து உடனுக்குடன் அகற்றுவதற்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். பள்ளிக்கூடச் சிற்றுண்டிக் கடைகளைக்கூடக்கொலை பாதகத்திற்கு அஞ்சாத போதைப் பொருள் வியாபாரிகள் தங்கள் நோக்கத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளக்கூடும். பள்ளிக்கூடங்களைச் சுற்றிலும் வியாபாரம் நடத்தும் அங்காடிக்காரர்கள் மற்றும் சில்லறைக் கடைகள் ஆகியவற்றையும் தலைமையாசிரியர்கள் அடிக்கடி கண்ணோட்டமிடுவது நன்மையாக இருக்கும்.

மாணவர்களில் ஒரு சிலரையுங்கூட தங்கள் கையாட்களாகப் போதை வியாபாரிகள் பயன்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆகவே எல்லாவகையிலும் பள்ளிக்கூட ஆசிரியர்கள் எச்சரிக்கையாக இருந்தால்தான் பள்ளிக் குழந்தைகளைப் போதைப் பொருள் பீடையிலிருந்து பாதுகாக்க முடியும்.

மிக வேகமாகவும், எளிதாகவும் போதைப் பழக்கத்திற்கும் மயக்கத்திற்கும் பலியாகிக்கொண்டிருக்கும் நமது மாணவர்களையும், இளவட்டங்களையும் அந்தச் சனியனிலிருந்து மீட்பதும், பாதுகாப்பதும் பெற்றோர்கள், ஆசிரியர்கள், அரசாங்க இலாக்காக்கள் ஆகியவர்களின் கூட்டுப் பொறுப்பு என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

ஒரே அணி போதும்

ம.இ.கா. தேசியத்தலைவர் டான்ஸ்ரீ வெ.மாணிக்கவாசகம் ஜோகூர் மாநில ம. இ. கா. மாநாட்டில் ஆற்றிய சிறப்புரையில் வெளியிட்டிருக்கும் கீழ்க்காணும் சீரிய கருத்துக்களை ம. இ. கா. உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

"அணி என்ற சொல்லை எல்லோரும் விட்டுவிடுங்கள். ம.இ.கா. வில் ஒரே அணிதான் உண்டு. இப்படிக் கூறுவதால் பதவிகளுக்குப் போட்டியிடக்கூடாது என்பது பொருளல்ல. அணி சேர்க்காது போட்டியிடுங்கள். அணி சேர்ப்போரை நம்ப முடியவில்லை. ஏனெனில் எந்த அணில் எந்த மரத்தில் ஏறுமென்று தெரியவில்லை."

டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் வெளியிட்டிருக்கும் இந்தக் கருத்துக்கள் மாநிலத் தேர்தல்களில் அணிவகுத்துப் பறைமுழக்கி ஆர்ப்பரித்த கோஷ்டி மனப்பான்மைக்கு முற்றுப்புள்ளி வைக்க உதவுமென்றும் நம்புகிறோம். பெரும்பாலான மாநிலங்களில் எந்த அணியும் முழுமையாக நூற்றுக்கு நூறு பங்கு வெற்றியடையவில்லை. சிலாங்கூரைப் போலவே மற்ற மாநிலங்களிலும் பேராளர்கள் "கலப்பு" நிர்வாகத்தையே தேர்ந்தெடுத்து அணிகளின் அமைப்பை முறியடித்திருக்கிறார்கள். எதிர்காலத்தில் அணிகளை அமைக்கக் கருதுகிறவர்களுக்கு நடந்து முடிந்திருக்கிற மாநிலத் தேர்தல்கள் நல்ல படிப்பினையாக அமையுமென்று எதிர்பார்க்கலாம்.

பெர்மிமா கூட்டுறவு

பெர்மிமா என்னும் பெயரில் கூட்டுறவு இயக்கம் ஒன்று புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டிருப்பது சமுதாயத்தில் கூட்டுறவு இயக்கத்தின் மீது நம்பிக்கை வலுவடைந்து வருவதைக் காட்டும் மற்றோர் அறிகுறியாகும். இந்திய முஸ்லிம்களின் சமுக வளர்ச்சிக்கும், மறுமலர்ச்சிக்கும் பாடுபடவேண்டுமென்ற உயரிய நோக்கத்தோடு பெர்மிமா கூட்டுறவு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்திய முஸ்லிம்கள் மலேசியாவின் வர்த்தகத் தொழில்துறை வளர்ச்சிக்கு முன்னோடியாக இருந்து சிறப்பான சாதனைகளைப் புரிந்திருக்கிறார்கள். வர்த்தகத் துறையில் அவர்கள் நாட்டுக்கு ஆற்றிவருகிற பணி, புதிதாக உதயமாகி உள்ள பெர்மிமா கூட்டுறவு மூலம் மேலும் பன்மடங்கு பெருகிப் பிரகாசிக்கும் என்று நம்புகிறோம்.

ஏற்கனவே தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கம், நேசா கூட்டுறவுச் சங்கம், தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பல நோக்குக் கூட்டுறவுக் கழகம் ஆகியவை இந்திய சமுகத்தில் கூட்டுறவு முயற்சிகள் வலுவடைவதற்கு உரமான தூண்களாக நின்று செயல்பட்டு வருவது தெரிந்த செய்தி. இந்த மூன்று கூட்டுறவுச் சங்கங்களும் இந்திய சமூகத்தின் பொருளியல் முன்னேற்றத்திற்கு அடித்தளமாகப் பல சாதனைகளைப்புரிந்திருப்பதையும் இங்கு நினைவுகூர்வது அவசியமாகும். அதுபோல பெர்மிமா கூட்டுறவும் குறிப்பிடத்தக்க சாதனைகளை நிகழ்த்துகின்ற நிறுவனமாக வளர்ந்தோங்க வாழ்த்துகிறோம்.

தமிழ் இளைஞர் மணிமன்றங்கள் உருவாக்கியிருக்கும் மாஜுஜயா என்னும் கூட்டுறவு இயக்கமும் விரைவில் தனது திட்டங்களை வகுத்துச் செயல்பட்டு மேலே குறிப்பிட்ட சகோதரக் கூட்டுறவு இயக்கங்களோடு சமுதாய வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் என்றும் எதிர்பார்க்கிறோம்.

மலிவு விற்பனை

அன்றாடம் அவர் கள் குடிக்கிறார்.
வயதானவர், குடித்துவிட்டுப் போகட்டும்.
அனுதினமும் வம்பு சண்டைதான்;
பரவாயில்லை! தொலையட்டும்;
மாதம் முடிந்து வெறுங் கையுடன்
வீட்டிற்கு வருகிறார்.
அதைக்கூட பொறுத்துக்கொள்ளலாம்.
ஆனால்;
ஆயிரம் வீட்டுக்காகும் அகத்திக்கீரை
வீட்டுத் தோட்டத்தில் இருக்கும்போது
மலிவாகக் கிடைத்ததென்று
கட்டுக் கட்டாய் அகத்தியைக்
கள்ளுக்கடையிலிருந்து வாங்கிவருகிறாரே,
அதைத்தான் மன்னிக்கமுடியவில்லை.

மு. அன்புச்செல்வன்

நையாண்டி மேளம்

வெட்டிக் கதைகள்

'ஆவன்னா'



காகமும் வடையும்

வடையொன்றை அலகில் கௌவியபடி மரக்கிளையிலிருந்தது ஒரு காகம். அவ்வழியே வந்த நரி, வடையைப் பார்த்துவிட்டது. அதை அபகரிக்கத் திட்டம் போட்டது.

"காகமே! ஒரு பாட்டுப் பாடேன்! உன் பாட்டைக் கேட்க எனக்கு வெகு நாளாக ஆவல்!" என்றது நரி.

உடனே அலகைத் திறந்து "கா, கா" என்று கத்தியது காகம். வடை கீழே விழுந்தது.

"அட முட்டாளே! உன் குரல் இருக்கும் இலட்சணத்தில் பாட்டு ஒரு கேடா? ஏமாறிப் போய் வடையைப் போட்டுவிட்டாயே!" என்று நரி எக்களித்தது.

"நான் ஒன்றும் முட்டாளில்லை! அது ஊசிப்போன வடை; தெரியாமல் எடுத்து வந்துவிட்டேன்! அதனால்தான் கீழே போட்டேன்!" என்று சிரித்தது காகம்.



உருத்திராக்கப் பூனை

ஒரு பூனை; கிழடு தட்டிப் போய் விட்டதனால் ஓடியாடி எலிகளைப் பிடிக்க அதனால் முடியவில்லை. சுலபமாக எலிகளைப் பிடித்துத் தின்ன அது எண்ணியது.

ஓர் உருத்திராக்க மாலையைக் கழுத்தில் மாட்டிக்கொண்டது. அமைதியாக ஓரிடத்தில் அமர்ந்து தியானத்தில் இருப்பதுபோல் பாவனை செய்தவாறே எலிகளுக்காகக் காத்துக்கொண்டிருந்தது. ஆனால் எலிகள் அதை நெருங்கவில்லை.

கிழப்பூனைக்குப் பசி தாளவில்லை. மயக்கம் போட்டு விழும் தருணம்; தூரத்திலிருந்த ஓர் எலியைப் பார்த்துக் கேட்டது: "எலியே, என் வேடத்தைப் பார்த்து நீங்கள் ஏமாறிப் போய் என் அருகில் வந்து திரிய வேண்டும்; உங்களுக்குத் தெரியாமலேயே உங்களுள் ஒவ்வொருவராகப் பிடித்து என் பசியை நான் தீர்த்துக்கொள்ள வேண்டும்! இதுதான் பழைய உருத்திராக்கப் பூனை கதை! ஆனால் நீங்களோ என் அருகில் நெருங்காமலே இருக்கிறீர்களே! இது நேர்மாறாக இருக்கிறதே!"

தொலைவில் இருந்தபடியே உரக்கச் சொன்னது எலி: "போடும் வேடத்தை முட்டாள்தனமாக உண்மையென்று நம்பி ஏமாறுவதற்கும், அந்தக் கவர்ச்சியில் மயங்கிக் கண்மூடித்தனமாக நடந்துகொள்வதற்கும் நாங்கள் என்ன திரைப்பட ரசிகர்களா, நீ என்ன திரைக் கதாநாயகனா?"



ஒற்றுமையே பலம்

இறக்கும் தருவாயில் இருந்த ஒருவர் தம் புதல்வர்கள் ஐவரையும் அழைத்தார். அருகிலிருந்த சுள்ளிகளை ஒவ்வொன்றாக ஒடிக்கச் சொன்னார். அவர்கள் மிக எளிதாக அவற்றை உடைத்து விட்டார்கள்.


பிறகு சில சுள்ளிகளைச் சேர்த்து ஒரு கட்டாகக் கட்டி அதை உடைக்கச் சொன்னார். எவ்வளவு முயன்றும் அவர்களால் சுள்ளிக்கட்டை உடைக்க முடியவில்லை.

"தனித்தனிச் சுள்ளிகளை எளிதில் உடைக்க முடிந்தது போல சுள்ளிக்கட்டை உடைக்க முடியவில்லை. ஒற்றுமையே பலம் என்பது இதிலிருந்து தெரிகிறதல்லவா? எனவே என்றும் ஒற்றுமையாக இருங்கள்!" என்று அறிவுரை பகர்ந்தார் தந்தை.

புதல்வர்களுள் ஒருவன் ஒரு ரம்பத்தை எடுத்து வந்தான்; சுள்ளிக் கட்டை இரண்டாக அறுத்து எறிந்தான். சுள்ளிகள் அங்குமிங்கும் சிதறி விழுந்தன.

"தந்தையே! சுள்ளிக் கட்டை உடைக்கமுடியாது என்பது உண்மைதான்! ஆனால் ரம்பம் போன்ற கருவிகள் இருந்தால் எளிதில் பல கூறுகளாக்கலாமே! பணம், பதவி போன்றவை இருந்தால் சுயநலங்கருதும் தனிமனிதர்களால் ஓர் இனத்தின் ஒற்றுமையைக் குலைத்து விட முடியும் என்பது இதிலிருந்து தெரிகிறதல்லவா?" என்றான் அவன்.

"நீ மிக விரைவில் ஓர் அரசியல்வாதியாகிவிடுவாய்!" என்று சொல்லியபடி உயிரைவிட்டார் தந்தை.



நரியும் திராட்சைப் பழமும்

பசியால் வாடி அலைந்துகொண்டிருந்த ஒரு நரி, குலைகுலையாகத் திராட்சைப் பழங்கள் கனிந்து தொங்கும் ஒரு தோட்டத்தைக் கண்டது.

மிகுந்த மகிழ்ச்சியோடு பழங்களைப் பறிக்க முயன்றது. பழங்கள் எட்டவில்லை. பல முறை எகிறிக் குதித்துப் பார்த்தது; முடியவில்லை. ஆனாலும் நெடுநேரம் பாடுபட்டு இறுதியில் ஒரு கொடியை வளைத்து நிறையப் பழங்களைப் பறித்தது.

ஆவலோடு ஒரு பழத்தை எடுத்துத் தின்றது நரி. புளிப்பு தாளவில்லை.

"சே! என்னமாய்ப் புளிக்கிறது இந்தப் பழம்! இதற்குப் போய் இவ்வளவு சிரமப்பட்டேனே!" என்று எண்ணியபடி பழங்களை வீசிவிட்டு நரி பசியோடு நடந்தது.

ஏசாதீர்

"இறந்தவர்களை நீங்கள் ஏசாதீர்கள். ஏனெனில் (அதன் காரணமாக அவருடைய உறவினர்களில்) உயிரோடிருப்பவர்கள் வருந்தக்கூடும்" என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்.

—அல்ஹதீஸ்

ம.இ.கா. இளைஞர் பகுதி

சிலாங்கூர் ம. இ. கா. தேர்தல் மக்களைப் பெரிதும் கவர்ந்தது; பொதுத்தேர்தலின் முடிவை அறிந்து கொள்ள ஆவலாகக் காத்திருப்பதைப் போலவே காத்திருக்கச் செய்தது. இப்படி அத்தேர்தல் அனைவரின் கவனத்தையும் ஒருங்கே காந்தம்போல் கவர்ந்திழுத்ததற்குக் காரணமாக இருந்தவர்களுள் மாண்புமிகு வி. எல். காந்தனும் ஒருவர். ம. இ. காவின் தேசிய இளைஞர் பகுதித் தலைவரும், சிலாங்கூர் மாநில ஆட்சிக்குழு உறுப்பினருமான அவரை அண்மையில் சந்தித்தோம்.

கேள்வி: சிலாங்கூர் ம. இ. கா. வின் தலைவராகும் வாய்ப்பைத் தாங்கள் இழந்தது, தங்களின் அரசியல் வளர்ச்சியைப் பாதிக்கும் என்று நினைக்கிறீர்களா?

பதில்: பாதிக்கும் என்று சொல்ல முடியாது. மாறாக, பயனுள்ள ஓர் அனுபவமாகவே இதைக் கருதுகிறேன். அரசியலில் வெற்றியும் தோல்வியும் இயற்கையானவை. அந்தப் பதவியைப் பெற்று, அதன் மூலம் மேலும் உயரவேண்டும் என்னும் நோக்கத்தில் நான் போட்டியிடவில்லை. கடந்த காலத்தில் நிர்வாகத்தினர் செய்ததை விட மிகுதியான சேவை செய்யலாம், செய்ய முடியும் என்னும் நம்பிக்கையோடும் கட்சியளவில் தனியொரு மனிதர் மட்டுமே எல்லாப் பதவிகளையும் பெற்றுச் செயல்படும் நிலையை யாராவது ஒருவர் மாற்றவேண்டும் என்பதற்காகவுமே ஜனநாயக அடிப்படையில் நான் மாநிலத் தேர்தலில் நின்றேன்.

கே: அந்தத் தேர்தலில் தங்கள் அணியினரின் பிரச்சார முறை ஜனநாயக முறைக்கு அப்பாற்பட்டதாகவும் கீழ்த்தரமானதாகவும் இருந்தது என்று சொல்லப்படுகிறதே!

ப: இப்படிச் சொல்லப்படுவதை நான் முழுமையாக மறுக்கிறேன். ஜனநாயக முறைக்கு உட்பட்டே நாங்கள் பிரச்சாரம் செய்தோம்.

பொதுத்தேர்தலில் மக்களைக் கூட்டத்தில் சந்தித்துச் செயல்திட்டங்களை அறிவிப்பதுபோல் நாங்கள் பேராளர்களைக் குழுவாகத்தான் சந்தித்தோம்; எங்கள் செயல் திட்டங்களைப் பற்றித்தான் விளக்கினோம். எவரையும் நாங்கள் இழித்துப் பேசவில்லை; கீழ்த்தரமாகவும் பேசவில்லை. உண்மையைப் பேசினோம். ஆனால் நிர்வாகத்தினர் செய்யத் தவறியவற்றைக் குறிப்பிட்டோம்; இன்னும் என்னென்ன செய்திருக்கலாம் என்றும் சொன்னோம்; இதுதான் உண்மையான ஜனநாயக முறை. பேராளர்களைத் தனித் தனியாக, ரகசியமாகச் சந்தித்துப் பட்டம், பதவிகளை வாங்கிக்கொடுப்பதாகப் போலி வாக்குறுதிகளை நாங்கள் கொடுக்கவில்லை.

நாங்கள் விருந்துக்கு மேல் விருந்து கொடுத்தோம் என்றும் சொல்கிறார்கள். ஆனால் உண்மையில் நடந்தது வேறு. பேராளர்கள் மாவட்ட ரீதியில் சந்திப்புக் கூட்டங்களை ஏற்பாடு செய்திருந்தார்கள். அவர்கள் எங்களுக்குச் சிற்றுண்டி வழங்கினார்கள். இதைப் பெரிய விருந்து என்று சொல்பவர்கள் சொல்லிக்கொள்ளட்டும். நான் பொருட்படுத்தவில்லை.

சமுதாயத்தில் பிளவா?

கே: சிலாங்கூர் உள்ளிட்ட பெரும்பான்மையான மாநிலங்களில் அணியணியாகப் பிரிந்து போட்டியிட்டது கண்கூடு. இத்தகைய போக்கு ம. இ. கா.வுக்கும் நம் மக்களுக்கும் எவ்வகையில் நன்மையாக அமையும்? சமுதாயம் பிளவுண்டு போகாதா?

ப: பிளவுபடும் அளவுக்கு எதுவுமே போகக்கூடாது என்பது என் எண்ணம்; அப்படிப் பிளவுபட்டுப் போகவும் இல்லை. தேர்தல் முடிந்தவுடன் அணிகளை மறந்துவிட்டு ஒன்றித்துச் செயல்படவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, தேர்ந்தெடுக்கப்படாதவர்களாக இருந்தாலும் சரி, சேர்ந்து செயல்படவேண்டும்.

கே: அணி சேர்த்துப் போட்டியிட்ட அரசியல்வாதிகளைப் பற்றித்தான் தாங்கள் குறிப்பிடுகிறீர்கள். தேர்தலுக்குப் பிறகு அரசியல்வாதிகள் வேண்டுமானால் ஒன்றுசேர்ந்துவிடலாம். ஆனால் அவர்களால் பல கூறுகளாகிவிடும் சமுதாயம் ஒன்றாகிவிடுவது அவ்வளவு எளிதான செயலாகுமா?

ப: அரசியல்வாதிகளின் தேர்தல் கால நடவடிக்கைகள், சமுதாயம் பிளவுண்டு போகும் அளவுக்கு அவ்வளவு கடுமையானவை, தீவிரமானவை என்று நாம் உறுதியாகக் கூறமுடியாது. ஆனாலும் ஒன்று சொல்வேன். அரசியல்வாதிகள் இந்தப் பிரச்சினையில் பொதுவாகச் சற்று மிதமாகவே நடந்துகொள்ளவேண்டும். குறிப்பாகப் பாட்டாளிகள், பட்டதாரிகள் என்று பிரித்துப்பேசுவதுபோன்றவற்றைத் தவிர்க்கவேண்டும். இப்படிப்பட்ட பேச்சுக்கள் உடனிருந்தே மெதுவாகக் கொல்லும் புற்றுநோயைப் போன்றவை.

இளைஞர் ஆற்றல்

கே: ம. இ. கா. வின் இளைஞர் பகுதி அண்மைக்காலத்தில் மேற்கொண்ட செயல் திட்டங்களைப் பற்றித் தேசிய இளைஞர் பகுதித் தலைவர் என்னும் முறையில் விளக்கிக் கூறுவீர்களா?

ப: 1975ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் இளைஞர் பகுதியின் தலைமைப் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டது முதல் பல செயல் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தியுள்ளோம். இளைஞர் பகுதியின் முப்பது ஆண்டுகால வரலாற்றில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதற்கு, 1976-ஆம் ஆண்டு இறுதியில்



அண்மையில் நடைபெற்ற இளைஞர் விழாவில் திரு. வி. எல். காந்தன் உரையாற்றுகிறார்.

தீவிரமாக இயங்கவில்லையா?

நடைபெற்ற இளைஞர் விழா ஓர் எடுத்துக்காட்டாகும். மூன்றுநாள் நடைபெற்ற அவ்விழா, தேசிய ரீதியில் இளைஞர்கள் ஒன்றுகூடி விளையாட்டு, கலைத்துறையில் புத்துணர்ச்சிபெற வழிவகுத்தது.

மலேசிய அரசியலமைப்புச் சட்டம், கூட்டங்கள் நடத்தப்பட வேண்டியமுறை போன்றவற்றை உட்பொருளாகக் கொண்டு1975ஆம் ஆண்டு இறுதியிலும் 1976ஆம் ஆண்டுத் துவக்கத்திலும் மாநிலந்தோறும் தலைமைத்துவப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

மூன்றாவது மலேசியத்திட்டத்தை அடிப்படையாக வைத்துப் பொருளாதாரக் கருத்தரங்கம் ஒன்றை 1976-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் தலைநகரில் கூட்டினோம்.

டேசுன் துவா போன்ற அரசாங்கப் பயிற்சி நிலையங்களில் நம் இளைஞர்களும் உரிய அளவில் பங்கேற்கக் கலாச்சார, இளைஞர், விளையாட்டுத் துறை அமைச்சோடு தேசிய ரீதியிலும் தொடர்புகொண்டு ஆவன செய்துள்ளோம்.

விளம்பரங்கள் தமிழிலும் வெளியிடப்படவேண்டும் என்று விளம்பரதாரர்கள் சங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளோம்.

இளைஞர் இசை அணிவகுப்புப் படை அமைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் பேராளர் மாநாட்டில் இப்படை அறிமுகப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கிறோம்.

வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் குறித்து மலேசிய இந்தியர்க்கு மனநிறைவு அளிக்கும் வகையில் முழுமையான மகஜர் ஒன்றைத் தயாரித்துத் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ளோம்; அரசாங்கத்திடமிருந்து திருப்திகரமான பதிலையும் பெற்றுள்ளோம்.

நாங்கள் மேற்கொண்ட செயல் திட்டங்களை எல்லாம் ஆடம்பரமோ ஆரவாரமோ இன்றிச் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்.

கே: கூட்டங்கள் நடத்த வேண்டிய முறையைப் பற்றித் தலைமைத்துவப் பயிற்சி வகுப்பில் விளக்கப்பட்டதாகக் குறிப்பிட்டீர்கள். ஆனால் நடக்கும் கூட்டங்களைப் பற்றி நாளிதழ்களில் வரும் செய்திகளைப் பார்த்தால்...

ப: கூச்சல், சச்சரவு போன்றவற்றை நீங்கள் குறிப்பிடுகிறீர்கள் என்று எண்ணுகிறேன். ஒரு சில கிளைக்கூட்டங்களில்தான் அத்தகைய சலசலப்புகள் ஏற்பட்டுள்ளன.

தலைமைத்துவப் பயிற்சியளித்து ஓராண்டு காலம்தான் ஆகிறது. ஆனால் கடந்த காலங்களில் நடத்தப்பட்ட கூட்டங்களை நினைக்கும் போது, தற்பொழுது நடந்துவரும் கிளை, மாநிலக்கூட்டங்கள் எவ்வளவோ முறையாகவும், சிறப்பாகவும் நடந்துகொண்டு வருகின்றன என்று கூறலாம். காலப்போக்கில் நம் கூட்டங்கள் ம. இ. கா. வின் விதிகளுக்கு உட்பட்டு மேலும்நன்கு நடைபெறும் என்னும் நம்பிக்கை எனக்கு உண்டு.

கே: அம்னோ,ம.சி.ச. போன்ற கட்சிகளின் இளைஞர் பகுதியோடு ஒப்பிடும்போது ம. இ. கா. வின் இளைஞர் பகுதி தீவிரமாகச் செயல்படவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது!

ப: தீவிரமாகப் பேசலாம்; நாளிதழ்களில் அறிக்கை விடலாம்! ஆனால் இவற்றால் என்ன பயன் விளைந்துவிடப்போகிறது? அணுக வேண்டிய நேரத்தில், அணுகவேண்டிய முறையில், அணுகவேண்டியவர்களை அணுகிச் செய்யவேண்டியவற்றைச் செய்து முடிக்கவேண்டும். இப்படித்தான் இளைஞர் பகுதிகடந்த இரண்டாண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. கனல்பறக்கப் பேசத் தேவையில்லை; கையேந்தி நிற்கவும் தேவையில்லை.

உறவுமுறை ஏன்?

கே: அமைச்சர் மாணிக்கவாசகம் அவர்கள், தம்முடைய அரசியல் வாரிசாக ஆக்குவதற்காகவே தங்களை அரசியலில் நுழைத்தார் என்றும், சிலாங்கூர் சட்டமன்ற உறுப்பினர் பதவி உட்பட ம. இ. கா. வில் பல்வேறு பொறுப்புகளும் அவரின் செல்வாக்கின் காரணமாகவே தங்களுக்குக் கிடைத்தன என்றும் நீண்ட காலமாகப் பேசப்பட்டு வருகிறது; இதைத் தாங்களும் அறிந்திருப்பீர்கள். இதுகுறித்துத் தாங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?

ப: 1954-ஆம் ஆண்டில் நான் ம. இ. கா. வில் அங்கத்துவம் பெற்றேன். அன்றிலிருந்து என்னுடைய அரசியல் ஈடுபாடு தொடங்கியது. இன்றுவரை அமைதியாகச் செயல்பட்டு வருகிறேன்.

1974-ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் சட்டமன்ற வேட்பாளனாவேன் என்று நான் கனவுகூடக் கண்டதில்லை. சிலாங்கூர் ம. இ. கா. வினரே எனக்கு அந்த வாய்ப்பை அளித்தார்கள்; அமரர் ஆதிநாகப்பன் அவர்களும் அவரோடு அப்போதிருந்த செயலவையினரும் எடுத்த முடிவே இது. தேசியத் தலைவரின் செல்வாக்கால்தான் எனக்குச் சட்டமன்ற உறுப்பினர் பதவியும், சிலாங்கூர் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் பொறுப்பும் கிடைத்தன என்று சொல்பவர்கள், அப்போது சிலாங்கூர் ம. இ. கா. வின் பொறுப்பில் இருந்தவர்களை எப்போது வேண்டுமானாலும் கேட்டுப் பார்க்கட்டும்! இவர்களும் தங்களின் மனச்சாட்சிக்கு விரோதமின்றிப் பதில் சொல்லட்டும்!


சட்டமன்ற, ஆட்சிக்குழு உறுப்பினராக இருப்பதால் நேரடியாக ம.இ.கா.வுக்கும் மக்களுக்கும் பதில் சொல்ல நான் கடமைப்பட்டவனாகிறேன். இதற்குச் சரியான ஒரு வடிகால் வேண்டுமென்பதற்காகவே ம.இ.கா.வின் மத்திய செயலவைக்கு 1975-ஆம் ஆண்டில் போட்டியிட்டேன்.

தேசியத்தலைவராகவும் அமைச்சராகவும் இருக்கும் ஒருவருக்கு நான் தம்பி என்னும் ஒரே காரணத்துக்காக நான் அரசியலில் பங்கேற்கவே கூடாதா? இந்த ஒரு காரணத்துக்காகவே, நான் முறையாக அடைந்த பொறுப்புகளை முறைகேடாகப் பெற்றேன் என்று சொல்வது எவ்வகையில் நியாயமாகும்?

வெறும் உறவுமுறைகளை மட்டும் வைத்துக்கொண்டு அரசியல் தகுதியை அளந்து பார்ப்பது பொருத்தமாகாது. உறவுமுறைக்கும் அப்பால் சென்று செயல்முறையையும் சாதனைகளையும் பார்க்கவேண்டும்.

ஒருவரை அரசியலில் ஏற்றுக் கொள்வதும் புறக்கணிப்பதும் மக்களைப் பொறுத்தது; ஆனால் அரசியல் ரீதியான காரணங்களைக் கொண்டே இத்தகைய முடிவை எடுக்கவேண்டும்.

–நகைச்சுவைப்பித்தன்



மன்னிப்பு

நீங்கள் இரக்கமுள்ள மனது, தயாளம், தாழ்மை, சாந்தம், நீடிய பொறுமை இவற்றைத் தரித்துக்கொண்டு ஒருவரையொருவர் பொறுத்து, ஒருவர்மேல் ஒருவருக்குக் குறையுண்டானால் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். ஆண்டவர் உங்களுக்கு மன்னித்தது போலவே நீங்களும் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின் மேலும் பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக் கொள்ளுங்கள்.

—கொலோசெயர் 3:12-14

முன்னோட்டம்



சுப்பிரமணியம் சக்கரவர்த்தி

தொலைக்காட்சி

16-6-77 வியாழன் மாலை 5.30க்குத் தமிழ்ப்படம்: ஏ. வி. எம். ராஜன், சிவகுமார், மஞ்சுளா, புஷ்பலதா நடித்த பாசதீபம்

23-6-77 வியாழன் மாலை 5.30க்கு இந்திப் படம்: பாக்கட் மார்

30-6-77 வியாழன் மாலை 5.30க்குத் தமிழ்ப்படம்: "மாடர்ன் தியேட்டர்"சின் யாருக்குச் சொந்தம். கல்யாண்குமார், தேவிகா, மனோகர், சந்திரபாபு நடித்தது.

வானொலி

நாடகம்

[சனிக்கிழமைதோறும் பிற்பகல் மணி 2க்கு ஒலிபரப்பாகிறது]

18-6-77 கண்மணி கிருஷ்ணன் எழுதிய அந்தரங்கம் நானறிவேன்

25-6-77 பத்தாங் பெர்ஜுந்தை ஆர். கிருஷ்ணன் எழுதிய கூட்டலும் கழித்தலும்

ஒலிச்சித்திரம்

[சனிக்கிழமை தோறும் மாலை மணி 6-31க்கு ஒலிபரப்பாகிறது.

18-6-77 முத்துராமன், ஜெய் கணேஷ், சுஜாதா நடித்த முத்தான முத்தல்லவோ இறுதிப் பகுதி ஒலியேறும்.

25-6-77 சிவாஜி கணேசன், ஏ. வி. எம். ராஜன், வாணிஸ்ரீ நடித்த ரோஜாவின் ராஜா முதல் பகுதி ஒலியேறும்.

சிரிப்புச் சித்திரம்

[சனிக்கிழமை தோறும் இரவு மணி 7.15க்கு ஒலிபரப்பாகிறது]

பத்தாங் பெர்ஜுந்தை சுப்பிரமணியம் சக்கரவர்த்தி எழுதிய விரலுக்குத் தக்க வீக்கம்

தலைநகர் ரவிசங்கர் எழுதிய புத்தி வந்தது.

மனச்சுழல்

[ஞாயிறு தோறும் காலை மணி 10.30க்கு ஒலிபரப்பாகிறது]

19-6-77 மெ. அறிவானந்தன் எழுதிய ஒரு துளி ரத்தம்.

26-6-77 கண்மணி கிருஷ்ணன் எழுதிய சிங்காரச் சவப்பெட்டி பாருக்காக. இதில் "மனோகர்" நாடகக்குழு நடிகர்களான தங்கராஜு, வரதராஜன், டி. ஆர். லதா, திருமதி சாந்தா ஆகியோர் நடிக்கின்றனர். சிவாஜி ராஜாவும் நடிக்கின்றார்.

மாலை 6.31க்கு இவ்வார அறிவிப்பாளர். இடம்பெறுபவர்: பினாங்கு நிலையத்தைச் சேர்ந்த எஸ். ஈஸ்வரன்.

இரவு 8.45க்குச் சிறுகதை. சுங்கைவே பாவை எழுதிய அணையும் தீபங்கள்.

[19-6-77 ஞாயிறு ஒலியேறும் நிகழ்ச்சிகள்]

காலை 9 மணிக்கு பி. கே. சாமியின் தயாரிப்பில் இளைஞர் உலகம் ஒலியேறும்.

10 மணிக்கு பூச்சரம் வீ. பூபாலன் தயாரிக்கும் இதில் தமிழகத்திரை உலகக் கலைஞர் ஒருவருடன் நடத்திய சந்திப்பு இடம் பெறும்.

11.30க்கு இவ்வாரக் கலைஞர் உள்ளூர் கலைஞர்களில் "ரத்தப் பேய்" ராஜா இடம்பெறுகிறார்.

மாலை 6.31க்கு இவ்வார அறிவிப்பாளர் குமாரி சாந்தாவின் விருப்ப நிகழ்ச்சி இடம்பெறும்.

சிறுகதை

இரவு 8.45க்குச் சிறுகதை: ஈப்போ எஸ். எலிஸபெத் எழுதிய நேர்மை

தொடர் நாடகம்

[திங்கட்கிழமை தோறும் இரவு மணி 7.15க்கு ஒலிபரப்பாகிறது]

20-6-77 திங்கட்கிழமை இரவு 7.15க்குத் தொடர் நாடகம்: அலைகள் ஓய்ந்தபோது...மூன்றும் பகுதி ஒலியேறும். எழுதியவர்: பத்தாங் பெர்ஜுந்தை சுப்பிரமணியம் சக்கரவர்த்தி

23-6-77 வியாழக்கிழமை இரவு 8.30க்கு இஸ்லாமிய நாடகம்: எம். பி. நூர் முகமது எழுதிய கூட்டாளி.

கண்ணோட்டம்

புதன்கிழமைகளில் மாலை 6.31க்கு ஒலியேறிவரும் "எங்கள் குடும்பம்" நிகழ்ச்சியினைத் தொடர்ந்து கேட்டு வருகிறேன். இதில் தயாரிப்பாளர். நிலையத்தைச் சேர்ந்தவர்களை அறிமுகப் படுத்துவதில் மற்றவர்களைக் காட்டிலும் மாறுபட்டிருக்கிறார். குறிப்பாக அறிவிப்பாளர் சாந்தாவிடம் அவர் கேட்ட கேள்விகளும் கிடைத்த பதில்களும் நகைச்சுவையைத் தாராளமாகத் தந்தன. பாடகர் மாரியப்பன் தயாரிப்பாளரிடம் மாட்டிக் கொண்டபோது தமிழகத்திரை உலகைப்பற்றிச் சுவையான தகவல்களை அடிமட்டத்திலிருந்து அறிய முடிந்தது.

—எல். எஸ். இந்திராணி, ஈப்போ

எங்கள் திருமணம்

அண்மையில் திருமணம்செய்து கொண்டவரா, நீங்கள்? அப்படியானால் உங்கள் திருமணப் படத்தை இன்றே எங்களுக்கு அனுப்பி வையுங்கள். மிகக் கச்சிதமாகவும் நேர்த்தியாகவும் பார்க்க அழகாகவும் தோன்றும்படி பிரசுரிக்கிறோம்.

புகைப்படம் வண்ணப்படமாக இல்லாமல் கறுப்பு - வெள்ளையாக இருக்கவேண்டியது அவசியமாகும். ஒரு முக்கிய விஷயம், திருமணப் புகைப்படத்தின் பிரசுரக் கட்டணமாக வெ. 25 தாங்கள் தரவேண்டி இருக்கும். தங்கள் வாழ்க்கையில் நடைபெற்ற அந்தப் பொன்னான நிகழ்ச்சிக்காக ஏற்படும் இந்தச் செலவு, தங்களைப் பொறுத்தவரையில் ஒரு பொருட்டல்ல!

பிரசுரக் கட்டணம் வெ. 25ஐ மணியார்டர் / போஸ்டல் ஆர்டர் / காசோலை ஆகியவற்றுள் ஏதாவது ஒன்றாக "புதிய சமுதாயம்" எனக் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

உறையின் இடப்பக்கத்தில் "எங்கள் திருமணம்" எனக் குறிப்பிட்டுப் புகைப்படத்தையும் கட்டணத்தையும் அனுப்பவேண்டிய முகவரி:

புதிய சமுதாயம்

131, Jalan Tuanku Abdul Rahman,

2nd Floor,

Kuala Lumpur.

இலக்கிய அரங்கம்

டாக்டர் இரா. தண்டாயுதம்

சாந்தி முத்து, தாமான் சுபாங்

கே: "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்பதில் உள்ள வள்ளுவன் என்ற சொல் நூலைக் குறிக்கின்றதா, அல்லது திருவள்ளுவரைக் குறிக்கின்றதா?

ப: எழுதியவர் பெயராலேயே நூல் குறிப்பிடப்படும் ஒரு சிறந்த வழக்கம் தமிழில் உண்டு. திருக்குறளுக்கு வழங்கும் முப்பால் முதலிய பல பெயர்களுள் திருவள்ளுவர் என்ற பெயரும் ஒன்று. வள்ளுவரையும் குறளையும் நாம் பிரித்துப் பார்ப்பதில்லை. எனவே இங்கு "வள்ளுவன்" என்ற சொல் நூலையும் குறிக்கும்; ஆசிரியரையும் குறிக்கும். எப்படிச் சொன்னாலும் தவறில்லை.

வேலு இராமரெட்டி,
சபாய் தோட்டம், பெந்தோங்

கே: ஐம்பெருங்காப்பியங்களுக்குப் பிறகு இந்த இருபதாம் நூற்றாண்டில் வேறு காப்பியங்கள் உருவாகும் சாத்தியமுண்டா?

ப: ஒவ்வொரு காலத்திற்கும் ஏற்ற இலக்கிய வகைகள் தாமாக உண்டாகின்றன என்பது வரலாறு கூறும் உண்மை. அவ்வகையில் ஓய்வு நிறைந்த முடியாட்சிக் காலத்தின் இலக்கியங்களாக அன்று ஐம்பெரும் காப்பியங்கள் தோன்றின. இது மக்களாட்சிக் காலம். இப்போது அத்தகைய காப்பியங்கள் தோன்றும் வாய்ப்புக்கள் குறைவு. எனினும் காப்பிய இலக்கணங்களைக் கொண்ட பாஞ்சாலி சபதம், பாண்டியன் பரிசு, பூங்கொடி முதலிய சிறு காவியங்கள் இன்றும் தோன்றித்தான் உள்ளன.

கே: இலக்கியத்தைப் பொறுத்த வரையில் எந்தநாடு முதலிடம் பெறுகிறது?

ப: ஒவ்வொரு நாட்டு இலக்கியமும் ஒவ்வொரு வகையில் சிறந்தே நிற்கிறது. எனினும் ஆங்கில மொழியில் இன்று எல்லா நாட்டு இலக்கியங்களையும் மொழியாக்கத்தில் கண்டு மகிழ்வதோடு ஆங்கிலத்திலேயே எழுதப்பட்ட பல்வேறு இலக்கியச் செல்வங்களையும் கண்டு மகிழலாம்.

கே: மற்றமொழி நாவல்கள் தமிழில் மொழியாக்கம் பெறும் பொழுது அவற்றின் சுவை குன்றிக் காணப்படுவதாக நான் எண்ணுகிறேன். தங்களுடைய அபிப்பிராயம் என்ன?

ப: சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்புச் செய்யாமல் நாவலின் ஆத்மாவைப் புரிந்துகொண்டு மொழியாக்கம் செய்தால்தான் எந்த ஒரு படைப்பும் வெற்றிபெறும். தமிழில் இவ்வாறு வெளிவந்த நாவல்கள் பல உள்ளனவே! காண்டேகரின் நாவல்களைக் கா. ஸ்ரீ. ஸ்ரீ மொழியாக்கம் செய்துள்ள முறையைப் பாருங்கள், மொழிபெயர்ப்பு என்றே தெரியாது. இம்மொழியாக்கச் சிறப்பால் காண்டேகர், மராத்தி வாசகர்களை விட தமிழ் வாசகர்களுக்கு அதிகம் நெருக்கமாகிவிட்டார். இத்தகைய பல மொழிபெயர்ப்பு நாவல்கள் தமிழில் உண்டு.

கே. எஸ். எம். இராசிதுரை, தைப்பிங்

கே: தமிழக எழுத்தாளர்களில் தமிழ் இலக்கியம் பற்றி இதுவரை அதிகம் எழுதியுள்ளவர் யார்?

ப: தமிழ் இலக்கியத்தின் பல்வேறு சிறப்புக்களைப் பற்றி இந்த நூற்றாண்டில் பல அறிஞர்கள் எழுதியுள்ளனர். டாக்டர் சாமிநாதையர், மறைமலையடிகள், திரு.வி.க., பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை, டாக்டர் மு. வ., டாக்டர் தெ. பொ. மீ., டாக்டர் இராசமாணிக்கனார், பன்மொழிப் புலவர் அப்பாத்துரை, கி. வா. ஜகந்நாதன் முதலியோர் இந்த வகையில் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் அல்லாத இன்னும் பல தமிழறிஞர்களும் பல வகைப்பட்ட நூல்களை எழுதியுள்ளனர்.

கே: மலேசிய எழுத்தாளர்களில் சிறந்த எழுத்தாளராக யாரைச் சொல்லலாம்?

ப: ஒருவரைப் பெயர் சொல்லிக் குறிப்பிடுவது எனக்குச் சரியாகப் படவில்லை. சிறுகதை, கவிதை ஆகிய துறைகளில் சிறப்பாக எழுதும் எழுத்தாளர்கள் பலர் உண்டு

கே. டாக்டர் மு. வரதராசன் அவர்கள் எழுதிய கதைகளில் எதை நன்கு உணர முடிகிறது?

ப: இன்றைய சூழலில் ஒரு நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த மனிதன் எத்தகைய பிரச்னைகளை எதிர்நோக்குகிறான், அவற்றை எந்த முறையில் எதிர்கொள்வது, எவற்றை எவ்வாறு தவிர்ப்பது, இப்பிரச்னைகளின் மத்தியிலும் உடலையும் மனத்தையும் எவ்வாறு காப்பது இவையே டாக்டர் மு. வ. வின் நாவல்கள் கதைமூலம் உணர்த்துவன. சுருங்கக் கூறின் வாழ்க்கைக்கு இன்றைய சூழலில் விளக்கமளிக்கும் வழிகாட்டிகள் அவை.

ஆ. சு. மணியம், கோலாலம்பூர்

கே: "காமர் கயல் புரளக் காவி முகை நெகிழ... .." எனத் துவங்கும் நளவெண்பாவின் அர்த்தம் என்ன?

ப: நளனது நிடத நாட்டின் சிறப்பினைக் கூறும் அழகான பாடல் இது. கடலினால் சூழப் பெற்றிருக்கும் இவ்வுலகின் நல்ல நாடுகளுள் முதன்மையாகத் திகழும் நிடத நாடு, அழகிய மீன்கள் எப்புறமும் புரண்டு கொண்டிருக்கவும், குவளை மலர்களின் மொட்டுகள் தம் பிணிப்பவிழ்ந்து மலரவும், செவ்விய தேனையுடைய தாமரையின் பிணிப்புகள் அவிழ்ந்து அவையும் மலரவும், நிலமகளின் அருட் பார்வையைப் பெற்றுத் திகழ்கின்றது" என்பது இப்பாடலின் பொருள்.

ப: தமிழில் 'அறுத்தோடி" என்பது என்ன?

ப: அரிந்து ஓடும் நீரோட்டத்தை அறுத்தோடி என்று குறிக்கும் பழக்கம் தமிழில் உண்டு.

கே: "வெள்ளத்தனைய மலர் நீட்டம்" இது எதைக் குறிக்கிறது?

ப: "நீரில் உள்ள நீர்ப்பூக்களின் நீளம், நீர்நிலையின் நீரின் அளவினதே ஆகும்" என்ற பொருளைக் கொண்ட இத்தொடர், 'மனிதனுடைய உயர்வு அவனுடைய ஊக்கத்தின் அளவைப் பொறுத்தது"என்பதைக் குறிக்கிறது. திருக்குறள் உணர்த்தும் உண்மைகளுள் இது ஒன்று.

செல்வராஜு குமரன், கிள்ளான்

கே: இலக்கியம் எப்படி முதன் முதலில் தோன்றியது?

ப: மனிதன் பேசத்தொடங்கி, மொழி பிறந்து, பின் அம்மொழியில் சிந்தித்து, தன் அனுபவங்களையும் எண்ணங்களையும் சிந்தனைகளையும் சுவையுடன் ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் எழுதிப் பிறருக்கு உணர்த்த முற்பட்டபோது இலக்கியம் தோன்றியது.

சு. கணேசன், ஜொகூர்பாரு

கே: கடவுள் எங்கே இருப்பதாக நம்முடைய சமய நூல்கள் கூறுகின்றன?

ப: எல்லாப் பொருள்களிலும் உள்ளும் புறமும் இயக்கும் ஆற்றலாகவும் இயங்கும் ஆற்றலாகவும் அவன் இருப்பதாக நம் சமய நூல்கள் கூறுகின்றன. உலகின் பிற பகுதிகளில் தோன்றிய சமயஅறிஞர்களும் இதனைத்தான் கூறியுள்ளனர். 'கடவுள் எல்லாப் பொருள்களுக்கும் மேலே இருக்கிறார்; உள்ளே இருக்கிறார், வெளியே இருக்கிறார். உள்ளே இருந்தாலும் மூடிக் கிடக்கவில்லை; வெளியே இருந்தாலும் விலகி இருக்கவில்லை; மேலே இருந்தாலும் உயரத்தில் இல்லை; கீழே இருந்தாலும் ஆழத்தில் இல்லை; முற்றும் மேலே இருந்து ஆள்கிறார்; முற்றும் கீழே இருந்து தாங்குகிறார்; முற்றும் வெளியே இருந்து அணைக்கிறார்; முற்றும் உள்ளே இருந்து நிறைக்கிறார்" என்று ஹில்டிபெர்ட் அவ் லவார்டின் என்ற அறிஞர் கூறுவதை நம் சமய நூல்கள் கூறும் கருத்துக்களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள், உண்மை விளங்கும்.

சிதைவு



எல். முத்து

-அந்த வார்த்தைகள், நெஞ்சில் விழுதுவிட்டுப் படர்ந்திருந்த இலட்சியத்தையே அழித்துவிடுமா?

முதலாளி தாறுமாறாக ஏசிக்கொண்டிருந்ததைக் கேட்காத மாதிரி பாவனை செய்தபோதிலும் காதில் கணீரென்று விழுந்த அவரது சுடும் சொற்கள் நெஞ்சைப் பிளந்துகொண்டு உள்ளிறங்கிய வேதனையில் நாதன் ஒரு கணம் கூனிக் குறுகியே போய்விடுகிறான்.

தபாலில் சேர்ப்பதற்காக, தயாராக வைத்திருந்த எல். சி. இ தபால் கல்வி விண்ணப்பப்பாரத்தைப் பூர்த்தி செய்துகொண்டிருந்த அவனது கரங்கள், முதலாளியின் அதட்டலில் அதிர்ந்துபோய் அப்படியே செயலற்று நின்று போகின்றன!

நடுங்கிய கரங்களோடு அப்பாரத்தை அவசர அவசரமாக கோணல்மாணலாக மடித்து கவரில் சொருகியபோது... அவனது வாழ்க்கையும் கோணலாகி விடுமோ என்ற ஆதங்கத்தில் அவனது கண்களில் கண்ணீர் திரண்டு நின்றது.

"டேய் நாதா... மங்கு கழுவுறவன் எல்லாம் மேதையா ஆயிட முடியாதுடா... சும்மா வேலையப் பாருடா... இதப் படிக்கிறேன். அதெப் படிக்கிறேன்னு செய்யற வேலையக் கெடுத்துக்காத. மங்கு கழுவத்தான் உனக்குச் சம்பளம் கொடுத்துத் தண்டச் சோறும் போடுறேன். இந்த வேல கெடைச்சதே பெரிய தம்பிரான் புண்ணியம்னு நெனைக்காம என்னமோ அதெப் படிச்சி இதாஆவப்போறேன்...இதப் படிச்சி அதா ஆகப்போறேன்னு உனக்கு ஏண்டா பெரிய பெரிய ஆசை எல்லாம்? கெடைச்ச வேலைய ஒழுங்கா செஞ்சிக்கிட்டு வயித்துப் பொழுப்ப பாருடா! இனி வேல நேரத்தில அது இதுன்னு எழுதிக்கிட்டு இருந்த அப்புறம் வயித்துப் பொழுப்புல மண்ணைப் போட்டுக்குவ..."

முதலாளி கனல் தெறிக்கக் கத்திவிட்டு "இதுங்களுக்கெல்லாம் வயித்தக் கழுவுறதே பெரிய பாடா இருக்கு... இதுலே வேற பெரிய படிப்பு படிக்கணுமா? வக்கில்லாத நாய்க்கு ஆசையப் பாரு...ஆசைய..." என்று தனக்குள் முனகியது, நாதனை பலமாகச் சுட்டுவிட்டது.

அவமானம் தாங்காமல் தொங்கப்போட்டிருந்த தலையைச் சற்று நிமிர்த்தி அவரைப் பார்த்துவிட்டு மீண்டும் குனிந்து கொள்கிறான்... "அப்பா இருந்திருந்தால்" நாதனின் மனம் எதனையோ நெருடுகிறது.

"நாதா... நீ பெரியவனானு என்னவா ஆவ ஆசைப்படறே?"

"நான் டாக்டரா ஆவப்போறேன் இல்லேப்பா ஏரோப்பிளேன் ஓட்டப் போறேன்" நெஞ்சத்திலுள் ஊசலாடும் எதிர்கால லட்சியத்தை அந்தப் பிஞ்சு உள்ளம் மழலை மொழியில் ஆவலோடு வெளிப்படுத்துகிறது.

"ஆமா... அப்படித்தான் நல்ல நிலையில வாழணும்... அப்பாவைப் போல வெளிக்காட்டு வேலைசெய்யக் கூடாது" மகன் வெய்யிலில் துவண்டு விடாமல், நிழல் தேடித் தர துடிக்கிறது தந்தை மனம்.

"நம்ம கஸ்டமெல்லாம் நம்மளோட தலை முழுகிடணும்" தாய் உள்ளம் குழந்தையின் வளமான எதிர்காலத்தைக் கனவு காண்கிறது.

"அப்பாவின் அயராத அந்தி வேலையில் நாதன் மட்டும் படிப்பை, குடும்பத்தின் அரைவயிற்றுக் கஞ்சியோடு தொடர்ந்து மூன்றும் பாரத்தை எட்டியபோது..

அப்பா அவன் படிப்பை மட்டுமல்லாது குடும்பத்தையே சிதறடித்து விட்டுப்போய் விடுவாரென்று யாரும் எதிர்ப்பார்க்கவே இல்லை. முடியாது என்று தெரிந்தும் கூட கிராணி ஐயா சொன்னார் என்பதற்காக ரப்பர் மரத்தில் முறிந்து தொங்கிய பெரிய கிளையை வெட்ட, அசட்டுத் துணிச்சலோடு மரத்தில் ஏறி, ரம்பத்தில் அறுத்தபோது திடீரென்று அக்கிளை முற்றுக முறிந்து விழுந்து, அங்கேயே அப்பாவின் உயிரையும் முடித்துவிட்டது.

அம்மாவுக்கு வாழ்க்கையே அஸ்தமனமாகி விட்டதைப்போல் ஒரு பேரதிர்ச்சி...

குடும்ப வறுமையைச் சமாளிக்க வழி இல்லாமல் "நாதா இனி நீ ஸ்கோலுக்கு போக வேண்டாம்" என்று முகத்தை திருப்பிக் கொண்டு கூறியபோது அம்மாவுக்கு நெஞ்சே அடைத்துக் கொண்டதைப் போல் ஒரு பிரமை...

அதைக் கேட்டு நாதனும் ஒரு கணம் சிதறித்தான் போனான். நான்கைந்து நாட்கள் பள்ளிக்கு போயே தீருவேன்" என்று அவன் அடம்பிடித்தபோதெல்லாம் அம்மா அவளது ஆற்றாமையைக் காட்டிக் கொள்ள அவன் முதுகைப் பயன்படுத்திக் கொண்டாள்.

பிறகு அம்மா தனக்குள் விம்மியபோது நாதன் மனம் உருகியே போனான்... தனக்கும் கீழ் ஆறு ஜீவன்கள் நிழல்தேடித் தள்ளாடுவதை நினைத்த போதும், அதற்காக அம்மா நாலுபடி ஏறிக் குலைக்குத்துக் குத்தி நெஞ்சு வலியை பெருக்கிக்கொள்வதைச்சிந்தித்தபோதும்... அந்த இரக்கமே அவனை..., ஏதாவது ஒரு வேலை தேடிக்கொண்டு அம்மாவுக்கு உதவ வேண்டும் என்பதை உணர்த்திவிட்டது.

"அப்பா, மரம் வெட்டக் கூடாது... வெளிக்காட்டு வேலை செய்யக் கூடாதுனு சொன்னாரு... இப்ப எச்சில் மங்கு கழுவுறேன்... ஜென்ம ஜென்மாந்திரமா இதிலே தான் கிடக்கணுமா?

"அம்மா வேண்டானு சொல்ல முடியாம தவிச்சப்போ... நான் தானே சரின்னு சொன்னேன். நல்ல வேலை கிடைக்கிறவரையில அந்த வேலைய செய்யிறேம்மா... அதக்கொண்டு நான் எப்படியும் எல் சி இ எடுத்திடுவேனு சொன்னப்போ..." உனக்கு எது நல்லதுனு படுதோ அத செய் நாதா" என்று அம்மா இரண்டு மனதாக கூறியபோது..."

"காமாட்சி...! என் மேல நம்பிக்கை இல்லையா? நாதன் யாரு, என் மகன் மாதிரி... அவன கண்ணுபோல பார்த்துக்குவேன், நம்ம கடையில மூனு பையனுங்க வேலை செய்யறானுங்க... அவங்கள வந்து கேட்டுப்பாருங்க... ஒரு கொறை வச்சிருப்பனா" முதலாளியின் ஆறுதலில் நாதன் மகிழ்ந்து போய் விடுகிறான்.

"நாதா... ஏன் தயங்கிற... உனக்கு எல்லா வசதியும் நான் செஞ்சுத் தர்றேன். ராவுல படிக்கணுமா சொல்லு! நான் உதவி செய்யறேன்..." முதலாளி மீது நாதனுக்கு நம்பிக்கை பிறந்துவிடுகிறது.

காமாட்சி! நீங்க ஒன்னும் கவலப்படாதிங்க... பையனுக்கு மாசம் அறுபது வெள்ளி சம்பளம்; சாப்பாடு என்னைப் பொறுத்தது. கடையிலே தங்கிக்கலாம். பயப்படாம அனுப்பி வையுங்க... அவனுக்கு ஒரு நல்ல வழிய காட்டிவிடுறது என் பொறுப்பு..." என்றூ முதலாளியின் போலி வேஷத்தை நம்பி வந்துவிட்டதை நினைத்துக்கொண்டு நாதனின் மனம் விம்மித் துடித்தது!

"நல்ல வழிய காட்டுறவர்தான் நானு தேடிப்போற வழியைக்கூட வேண்டாமுன்னு தடுக்கிறாரா...?"

அவன் தேம்பிக்கொண்டே கழுவிய தட்டுக்களையும் கிளாசுகளையும் எடுத்துக்கொண்டு நடந்தான்.

பலமுறை முதலாளி அவன் எல். சி. இ. தேர்வுக்கு,வேலை நேரத்தில் இடையிடையே புத்தகத்தை விரித்துப் படிப்பதையும். அவரைக் கண்டால் உடனே மூடி விடுவதையும் கண்டுவிட்டுத் திட்டித் தீர்க்கும்போது... 'படிக்கக்கூட முடியாம இந்தச் சனியன்கிட்ட வந்து இப்படி மாட்டிக்கிட்டோமே' என்று பல தடவை மனம் நொந்து அழுது இருக்கிருன் நாதன்.

மாதம் ஒருமுறை முதலாளியிடம் கெஞ்சிக் கூத்தாடி விட்டுப் "போய் தொலைடா" என்ற வழியனுப்போடு அம்மாவைப் பார்க்க புறப்படும்போது... "அம்மாகிட்டா எல்லாத்தையும் சொல்லிட்டு அப்படியே தங்கிக்கணும்... எப்படியாவது வேற வேலை தேடிக்கலாம்; ஏன் இங்க வந்து எச்சி மங்கு கழுவிக்கிட்டு படிக்கக்கூட முடியாம வதைபடணும்" என்று மனதுக்குள் கூறிக்கொள்வான்.

ஆனால் நேருக்கு நேர் அம்மாவைப் பார்க்கும்போது அவள் ஆறு பிள்ளைகளைக் காப்பாற்றப் படும்பாடு; அக்கம்பக்கத்தில் அரிசி வாங்க ஓடுவது. மத்தியானம் மரவள்ளிக் கிழங்கை அவித்து, அதனை வேண்டாம் என்று அடம்பிடித்து பாலுக்கு அழும் கடைசித் தம்பிக்கு வற்புறுத்தி உணவாக ஊட்டுவது, படுக்கப் பாய்கூட இல்லாமல் காகிதப்பெட்டி அட்டைகளைப் போட்டு இரவில் படுப்பது, எட்டு, ஒன்பது என்று வயதாகிவிட்டபோதிலும் பள்ளிக்கு அனுப்ப வசதி இல்லாமல் அம்மா இரண்டு வெட்டு வெட்டிக் கூடுதல் சம்பாதியத்தில் குடும்பத்தைக் காக்க ஆவல் கொண்டு ரப்பர்க்காட்டிற்கு அழைத்துச்செல்வது அத்தனையும் நாதனின் மனத்தைக் கரையவைத்து, வாயை ஊமையாக்கிவிடும்.


தாய்க்கு எந்தவிதமான மனக் கவலையையும் காட்டாமல், மறுநாளே தான் கொடுத்த ஐம்பது வெள்ளியின் பெருமிதத்தோடு கடைக்குத் திரும்பிவிடுவான்.

இப்போதெல்லாம் நாதன் இரவில் மட்டும் விழுந்து விழுந்து படிக்கிருன். முதலாளியிடம் அவன் எதையுமே கேட்பது இல்லை; காட்டிக்கொள்வதும் இல்லை. அவன் படிப்பு சம்பந்தப்பட்ட புத்தகங்கள் எதனையுமே தவறிக்கூட கடையின் முன் பக்கம் கொண்டு வந்து விடுவதில்லை. அனைத்தையும் அவனுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கும் இருட்டறையோடு இருட்டடிப்புச் செய்துகொள்கிருன்.

எதிர்பாராமல் அவனைத் திக்குமுக்காடச் செய்துவிட்ட ஒரு சம்பவம் அவனை அந்த நிலைக்கு அச்சுறுத்திவிடுகிறது.

முதலாளி மகனிடமிருந்து "எல். சி. இ. பகாசா மலேசியா சொந்தோக் காராங்கான்" என்ற புத்தகத்தை இரவல் வாங்கியபோது அதனை விரைவில் திருப்பிக் கொடுக்கும் பொருட்டு அதிலுள்ள சில மாதிரிக் கட்டுரைகளைக் காப்பி எடுத்துக்கொள்ள நாதன் அவனையே மறந்து ஆர்வத்தோடு எழுதிக் கொண்டிருந்தபோது எங்கிருந்தோ தட்டு ஒன்று பறந்துவந்து அவன் நெற்றியைத் தாக்கியபோது அவன் தடுமாறியே போய்விடுகிருன்!

"அந்த நாய்கிட்ட உனக்கு என்னடா சகவாசம்? புத்தகத்தை வாங்கிட்டுப் போடா! அவனப்போல எச்சி மங்கு கழுவப்போறியா? இனி



முன் பக்கம் வந்தா காலே ஒடிச்சிடுவேன்!"

முதலாளியின் மகன் நாதனுடன் பேசுவதும் பழகுவதும் அவர் கௌரவத்துக்கு பெரும் இழுக்கு என்ற எண்ணத்தில் அவனிடம் அண்டவிடாமல் அவர் மகனை முதலாளி திட்டி விரட்டிய போது... தனது தாழ்ந்த நிலையைக் கண்டு நாதனே வெட்கித் தலைகுனிந்து போனான்

"அம்மா மட்டும் என்னை நம்பிக்கிட்டு இல்லன்னு இப்பவேஇந்த முதலாளி முகத்தில நாலு குத்து விட்டுட்டு ஓடியே போயிடுவேன்..." அவன் நெஞ்சு கனத்து வலிக்கத் தொடங்கிவிடுகிறது.

நாதனின் இதயப்புண்ணில் அடுக்கடுக்காக ஏற்பட்ட மனக் கீறல்கள் அத்தனையையும் அவன் ஜீரணித்துக்கொண்டது அவனது படிப்பிற்காகவே என்பதை நினைத்துக்கொள்ளும்போது அதிலே அவனுக்கு ஒரு அலாதியான ஆத்ம திருப்தி ஏற்படத்தான் செய்யும்.

கீறல் மேல் கீறலாக விழுந்து அவன் இதயப் புண் மரத்து விடுகிறது.

ஆற்று நீராக அப்பா வற்றி விட்டாலும், ஊற்று நீராக இருந்து அம்மாவுக்கு அக்குறையைத் தீர்த்து வைக்க வேண்டும் என்பதை மட்டுமே நாதனின் மனம் அடிக்கடி நினைத்துக்கொண்டது.

"எப்படியாவது எல்.சி.இ.முடியற வரையில எல்லாத்தையும் பொறுத்துக்கனும்... இடீர்னு முதலாளி கிட்ட கோவிச்சு கிட்டாலோ, மோகன் கிட்ட சகவாசம் வைச்சு கிட்டாலோ... அப்புறம் எல்லாமே வீணாயிடும்...அம்மா மூஞ்சிலக்கூட முழிக்க முடியாம போயிடும்......" நாதன் தனக்குள் சமாதானம் கூறிக்கொண்டு...படிப்பில் ஆழ்ந்த கவனம் செலுத்துகிறான்...

இன்னும் எல். சி. இ. தேர்வுக்கு இரண்டே மாதங்கள் எஞ்சி இருக்கின்றன... படிப்பிலேயே தீவிர அக்கறை காட்டி வருவதால் அந்த மாத இறுதியில் நாதன் அம்மாவைப் பார்க்கப் போகாமல் இருந்து விடுகிறான்...

நெஞ்சுவலி தாளாமல் அம்மா மருத்துவ மனையில் இருக்கும் விஷயமறிந்து அதனை மூன்று நாள் கழித்துச் சர்வ சாதாரணமாக முதலாளி அவனிடம் சொன்ன போது. நாதன் துடியாய்த் துடித்து விட்டான்.

"நாளைக்குக் காலையில போடா" என்று முதலாளி சொன்னதைக்கூட காதில் போட்டுக்கொள்ளாமல், அன்று மாலையே அம்மாவைப் பார்க்க அவன் புறப்பட்டபோது... பஸ் காசு இல்லாமல் அவன் பட்ட பாடு...நாதனின் கண்கள் கலங்கியே போய்விட்டன...

முதலாளியிடம் அவன் கெஞ்சிய போது ஒன்றுமே கேளாத பாவனையில் சிறிது நேரம் அலட்சியமாக இருந்து விட்டு... "இந்தா ரெண்டு வெள்ளி...இந்த மாச சம்பளத்தில வெட்டிக்குவேன்" என்று தூக்கி எறிந்ததை மௌனமாக பெற்றுக்கொண்டு உடனே பஸ் ஏறிவிட்டான்.

மருத்துவமனையில் ஒரு குச்சியைப்போல் அம்மா படுக்கையில் மூச்சுத் திணறிக்கொண்டு அவஸ்தை படுவதைக் கண்டவுடன் அம்மாவின் நெஞ்சு வலியைவிட அவனது நெஞ்சு வலி அதிகமாகத் தொடங்கியது ..

அம்மா அவனை அர்த்த புஸ்டியோடு பார்த்து......எதை எதையோ பேசத் துடிக்கிறாள் ஆனால் அவளால் அறவே பேச முடியாமல் நெஞ்சு திணறிப் போகிறது. அம்மா, நாதனைப் பார்த்த பார்வையிலேயே அவன் அவள் சொல்ல வந்ததை புரிந்துக்கொண்டானோ என்னவோ அம்மாவின் கரங்களை இறுகப்பற்றிக் கொண்டான்.

"அவங்களுக்கு நெஞ்சு ரொம்ப பலவீனம் அந்த அதிர்ச்சியான செய்திகளையும்... குடும்பக் கவலையையும் பத்திப்பேசக்கூடாதுனு டாக்டர் சொல்லி இருக்காரு... ரொம்பப் பேசவும் கூடாதுனு எச்சரிச்சிருக்காரு" நர்ஸ் கூறிவிட்டு நகர்கிறாள்.

"அம்மா...என் எதிர்காலமே போச்சே நான் இனி எப்படிப் படிப்பேன் ஐயோ கடவுளே..." அம்மாவிடம் கதறிவிட வேண்டும்போல் தோன்றிய வார்த்தைகள்......அவன் தொண்டைக் குழிவரை வந்துவிட்டுப் பந்தாக உருண்டுதொண்டையில் அடைத்துக்கொள்கிறது.

அவன் நெஞ்சு கனக்கிறது. அது குடும்பச்சுமை என்பதை உணர்ந்துகொள்ள முடியாமல் ஒரு கனம் தடுமாறிப் போகிறான்...

ஆறும், அம்மாவோடு ஏழும் அவன் காலைப் பற்றிக்கொண்டு ஏங்கித்தவிப்பதைப்போல் ஒரு பிரமை...

"வயித்த கழுவ வக்கில்லாத நாய்க்கெல்லாம் படிப்பு ஒரு கேடா" முதலாளி ஏசியதில் கூடத் தவறில்லையோ...

ஒரு புது உத்வேகத்தோடு... பேச முடியாத நிலையில் இருந்த அம்மாவிடம் கண்ணீரால் விடை பெற்று விர்ரென்று மருத்துவ மனையை விட்டு வெளியேறிவிடுகிறான்.

"கடைக்கு இன்னொரு பொடியன் இருந்தா தேவலாம்" முதலாளி ஒரு வாரத்திற்கு முன் யாரோ ஒருவரிடம் சொல்லிக்கொண்டிருந்தது நாதனின் நினைவுக்கு எட்டுகிறது...

நாதன் அவனது பன்னிரெண்டு வயது தம்பியைக் கூட்டிக்கொண்டு வந்து, முதலாளியிடம் வேலைக்குக் கெஞ்சியபோது அவர் அதிர்ந்து போய்விட்டார்.

"டேய் நாதா... இந்த வேலை செய்ய நீயே மூக்கால அழுற... உன் தம்பி எங்க செய்யப்போறான்?" என்று சந்தேகத்தோடு கேட்டார். "இல்லங்க மொதலாளி......இனி ஒழுங்கா வேலைய செஞ்சுக்குறேன் எப்படியாவது என் தம்பிக்கு உதவி செய்யுங்க...அம்மா இனி வேலை செய்ய முடியாதுனு டாக்டர் சொல்விட்டாராம்" நாதன் துக்கம் தாங்காமல் அழுததைக் கண்டு முதலாளி மனம் இரங்கித்தான் போனார்...

தம்பிக்கு நாதனே எச்சில் மங்கு கழுவுவதிலிருந்து மேசை துடைத்துச் சுத்தம் செய்யும் வரை எல்லா வேலைகளையும் பழகித் தந்து விடுகிறான்... ●

பெண்மைக்கழகு...



இன்றைய மாதர்கள், தொழில், அறிவு, முன்னேற்றம் யாவற்றிலும் ஆண்களுக்கு நிகராக விளங்க எத்தனிக்கின்றார்கள். ஆனால் இன்றைய பெண்களுக்கமைந்த மென்மையும், பெண்மையும் சில வேளைகளில் அவர்களைத் தோல்வி அடையச் செய்கின்றன.

நாட்டுக்கு நாடு பெண்கள் தங்கள் பலப்பரீட்சைகளை ஆண்களுடன் நடத்தி வருகின்றார்கள். சில பெண்கள் ஆண்களைப்போலக் காற்பந்து விளையாடுவதில் தீவிரம் காட்டுகின்றார்கள். சமீபத்தில் பெண்கள் மேலாடை யில்லாமல் குத்துச் சண்டை கோதாவில் மோதியிருக்கின்றார்கள். இவற்றைக் காணும் பொழுது பெண்களின் முன்னேற்றம் பெண்மைக்குரிய மென்மைக்கும் நன்மை தராதுபோல் தோன்றுகிறது.

மாதர்கள் விதண்டவாதிகளாக மாறித் தத்தம் மனம் போன போக்கில் நடக்கத் துணிந்துவிட்டால் கற்பு எனும் திண்மை நிலை தடுமாறிப் போகும். பண்பு என்பது பாதை தெரியாமல் போய்விடும்.

இன்றைய மாதர்கள் செயலாக்க மிக்கவர்களாக இருக்க 3வண்டும் என்று எண்ணும் அதே வேளையில் பெண்களுக்குத் தனிச் சிறப்பளிக்கும் நற்பண்புகளை மறவாமல் போற்றிக் காப்பது கடமையாகும். இவற்றை மனத்தில் பதித்துக் கொண்டு தேவையான முன்னேற்றங்களைக் கண்டு நல்ல மனைவியாக குலம் காக்கும் குலமகளாக விளங்க வேண்டுவது மாதர்களின் கடமை ஆகும்.

—சரசு

கனவுகள் பலிக்காதடி



5. 'உள்ளத்தால் நெருங்குகிறேன்'

வனிதாவுக்குத் தூக்கமே வரவில்லை! படுக்கையில் புரண்டுபுரண்டு படுத்துக்கொண்டிருந்தாள்!

பாதியில் விட்டு வைத்திருந்த அந்த நாவலையாவது படிக்கலாம் என்று எழுந்தாள். பக்கங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தாள்.

ஏனோ அவளால் படிக்க முடியவில்லை!

அவளுக்கே அது ஆச்சரியமாக இருந்தது!

மாலையில், அந்த நாவலைக் கீழே வைக்க மனமில்லாமல் படித்துக் கொண்டிருந்ததை இப்போது நினைத்துப் பார்த்தாள்!

விறுவிறுப்பான அந்த நாவலில் மூழ்கி இருந்தபோதுதான் லல்லியும் தோழியரும் வந்து அவளைத் தொந்தரவு செய்தனர்.

அவர்கள் கூப்பிட்டதைக் கூட அறியாமல் படித்துக் கொண்டிருந்தது. அதை வெடுக்கெனப் பிடுங்கி எறிந்துவிட்டு கேலிசெய்தது. எல்லாவற்றையும் அப்போது நினைத்தால் அவளுக்கே சிரிப்பு வந்தது.

தூங்கலை மறந்து நேரம்போவது தெரியாமல் சுவாரஸ்யமாகப் படித்துக் கொண்டிருந்த அதே நாவலை இப்போது பிடிக்கவில்லையே!

ஏன்? அவளுக்குப் புரியவில்லை!

மணி பன்னிரண்டு!

கண்களை இறுக மூடிக்கொண்டு படுத்திருந்தாள்!

மூடியிருந்த விழியினுள்ளே நுழைந்து வந்து மோகனப் புன்னகை வீசும் முகம் ஒன்று அவளை இனம்புரியாத இன்ப வேதனையில் ஆழ்த்தியது!

கோபிநாத்!

அந்தப் பெயரை உச்சரிக்கும் போது ஒரு புதுமையான உணர்வு உடல் முழுதும் பரவிப் புல்லரிப்பது போலிருந்தது!

அந்தச் சிரித்த முகம்! குறுகுறுக்கும் பார்வை! கலகலப்பான பேச்சு! மீண்டும் மீண்டும் நினைவில் வந்து நின்று கொண்டு அவளை ஆட்டிப் படைத்தன!

லல்லி எவ்வளவு சகஜமாக "கோபி கோபி" என்று கூப்பிடுகிறாள். சிறிதுகூட கூச்சமின்றி எவ்வளவு கலகலப்பாகப் பேசுகிறாள்? கேலியும் செய்கிறாள்! அது எப்படி....?

தன்னால் மட்டும் ஒரு வார்த்தை கூடப் பேசமுடியாமல் போய்விட்டதே. ஏன் அப்படி...?

வனிதாவுக்கு எல்லாமே விசித்திரமாக இருந்தது. ஒன்று! இரண்டு! என்று மணியை எண்ணிக் கொண்டிருந்தாள். எப்போது தூங்கினாளோ? அது அவளுக்கே தெரியாது!

"வனிதா..."

லல்லியின் குரல்! திடுக்கிட்டு எழுந்தாள்! நிஜமாகவே லல்லிதான் கூப்பிடுகிறாளா? இல்லை கனவு காண்கிறோமா...?

"வனிதா...!" மீண்டும் லல்லியின் குரல்! படுவேகமாக ஒலிக்கிறது! எழுந்து சென்று கதவைத் திறந்தாள்! எதிரே லல்லிதான் நிற்கின்றாள்! சூரிய ஒளி கண்ணைக் கூச வைத்தது!

"என்னடி இது? மணி பத்தடிக்கப் போகிறதே...இவ்வளவு நேரமா தூங்கினே...?"

"ஓ... மணி பத்தாகப் போகிறதா...? அதிக நேரம் தூங்காமல் விழித்திருந்து விட்டேன்! அதுதான் ஒரே அலுப்பாக இருக்கிறது. நேரமானதே தெரியலே..."

"ஏன் மறுபடியும் அந்த நாவலைப் படிக்க உட்கார்ந்து விட்டாயா? அது என்ன அவ்வளவு சுவாரஸ்யமாகவா இருக்கு...?

"அப்படியொன்றும் பிரமாதமில்லேதான்..."

"தூங்காமல் கூட விழுந்து விழுந்து படிக்கிறாயே..."

"போடி! நேற்று மாலையிலே முடிஞ்சதுதான்; அப்புறம் எங்கே படித்தேன்...? படம் பார்த்துவிட்டு வந்தது! தலைவலி! எல்லாம் சேர்ந்து தூங்கவே முடியலே...! என்னவோ தூக்கமும் வரலே...!" வனிதா பேசிக் கொண்டே திரும்பவும் கட்டிலில் போய் அமர்ந்து கொண்டாள்.

"என்ன மறுபடியும் தூங்கப் போகிறாயா...?" லல்லி அவளருகே வந்து அமர்ந்து கொண்டாள். வனிதா தலையணையை எடுத்து உயரமாக வைத்துவிட்டு அதன் மீது சாய்ந்து கொண்டாள். அவள் முகம் களையிழந்து போலிருப்பது போல லல்லிக்குத் தோன்றியது. அவளது நெற்றியில் கையைவைத்துப் பார்த்தாள்! இலேசாக சுடுவது போலவும் தோன்றியது.

"ஏன் வனிதா! இரவு முழுதும் சிரமப்பட்டாயா... தலைவலி அதிகமாக இருந்ததா...? ஏதாவது பில்ஸ் போட்டுக் கொண்டாயா...?" லல்லியின் குரலில் தேங்கி நின்ற பாசமும் பரிவும் வனிதாவை நெகிழ வைத்தன! அம்மாவை நினைத்துக் கொண்டாள்! அவள் மனம் கலங்கி விட்டது.

லல்லியின் கையைத் தன் கையோடு சேர்த்துப் பிடித்துக்கொண்டு ஏறிட்டுப் பார்த்தாள். இந்த இடத்தில் லல்லியைத் தவிர யார் இருக்கிறார்கள் அன்பு காட்ட! ஆறுதல் கூற!

"தலைவலி அதிகமில்லை...! ஆனால் எனக்கு என்னவோ ஒரு மாதிரி இருக்கிறது! தனியாக இருப்பது மிகவும் சங்கடமாக இருப்பது போலவும் வெறுப்பாகவும் கூட சில சமயம் தோன்றுகிறது...! வனிதாவின் கண்கள் கலங்கிவிட்டன!

தாயைக் காணாமல் தவிக்கும் பேசத் தெரியாத குழந்தையைப் போல முகத்தில் ஒருவித ஏக்கம் படிந்திருப்பதாக லல்லிக்குத் தோன்றியது! இப்போது அவள் மனம் வனிதாவுக்காகக் கலங்கித் தவித்தது!

ஆறுதலாக அவளது தோள்மீது தன் கரங்களைப் போட்டுக்கொண்டாள். அவளை எப்படியாவது மகிழ்ச்சியாக இருக்கவைக்கவேண்டும் என்ற துடிப்பு அவள் இதயத்தில் ஆழமாகப் பாய்ந்தது!

"வனிதா! நீ செல்லமாக வளர்ந்தவள்! உங்கள் வீட்டில் உனக்கு எல்லா வசதியும் இருக்கிறது! அதையெல்லாம் விட்டு இப்படித் தனியாக ஓர் அறைக்குள் அடைந்து கிடப்பது கொஞ்சம் சிரமமாகத்தான் இருக்கும். இன்னும் கொஞ்ச நாள் போகப்போக இதுவும் பழகிப்போய்விடும்!"

"லல்லி! நீ, கூட இருந்தால் எனக்கு உற்சாகமாக இருக்கிறது! நீ போய்விட்டால் என்னவோ போலிருக்கிறது! வீட்டுக்கே போய்

விடலாமா என்றுகூடத் தோன்று கிறது..."

லல்லிக்கு வனிதாவின் மனநிலை புரியத்தான் செய்தது!

"கவலைப்படாதே வனிதா! உனக்கு ஒரு நல்ல செய்தி சொல்லத் தான் வந்தேன்! உன்னைப் பாத்ததும் அதை மறந்துவிட்டு என்னவோ பேசிக்கொண்டிருக்கிறேன் பார்...! என்னோடு தங்கியிருக்கும் விண்டா வெளிநாட்டுக்குப் போவது உறுதி யாகிவிட்டதாம்! இந்த மாத இறு திக்குள்ளோ அடுத்த மாதமோ அவள் நிச்சயம் போகப்போகிறாள்! அப்புறம் நீயும் என்னோடு வந்து ஒரே விட்டில் தங்கிக்கொள்ளலாம்! என்ன சொல்கிறாய்...?"

"லல்லி! நிஜமாகவா?" சின்னக் குழந்தையைப் போல அவளைத் தாவி அணைத்துக்கொண்டாள் வனிதா!

அவளது கவலை, ஏக்கம், தனிமை யாவுமே அந்த வினாடியி லேயே மறைந்துவிட்டது போலவும் ஏதோ ஒரு புத்துணர்ச்சி உடலிலும் உள்ளத்திலும் பிரவாகமெடுப்பது போலவும் உணர்ந்தாள்.

உணர்ச்சி வசப்பட்டவள் தன்னை மறந்து லல்லியை இன்னும் இறுக அணைத்துக்கொண்டாள்! லல்லியும் அவளோடு ஐக்கிய மானாள்!

"ஆகா...! என்ன அற்புதமான காட்சி!" கேலிக்குரலோடு வாசலில் வந்து நின்ற அந்த உருவத்தைப் பார்த்துத் திடுக்கிட்டாள் லல்லி!

6. 'இளமை அழைக்கின்றது'

"நவீன்! இங்கே எதற்கு வந் தாய்...?" லல்லியின் குரலில் கோப மும் வெறுப்பும் கொப்பளித்துக் கொண்டு நின்றன.

"இந்த அற்புதமான காட்சியைக் காணத்தான்...", "நவீன்" என்று பெயரை நாசூக்காகச் சுருக்கி வைத் துக் கொண்ட நவநீதன் அலட்சிய மாகச் சிரித்தான்.

லல்லியின் ஆத்திரம் அளவு கடந் தது. அவனது அலட்சியமான சிரிப் பைக் காண அவள் உள்ளம் பற்றி எரிந்தது! அவனுக்கு எவ்வளவு துணிச்சல் இருந்தால் இப்படி அலட் சியமாகச் சிரிப்பான்?

"உன்னை யார் இங்கே வரச் சொன்னது... ஏன் வந்தாய்...?"

"என்னை இங்கே வரக்கூடாது என்று யாரும் சொல்லவில்லை. அத னால் வந்தேன்...! ஏன் வரக் கூடாதா...?" லல்லியின் கோபத் தையோ வெறுப்பையோ சிறிதுகூட லட்சியம் செய்யவில்லை அவன். வாசல் கதவில் ஒரு கையை உயர்த்தி வைத்துக்கொண்டு வசதியாகச் சாய்ந்து நின்றுகொண்டு அவளை வம் புக்கு இழுக்கத் தயாராவது போல நின்றான்.

புதிதாகக் கருமை கட்டியிருந்த குறுந்தாடியை வருடிக்கொண்டே வனிதாவை விழுங்கி விடுவதுபோல் ஆவலோடு பார்த்தான்.



அவனைப்பார்க்கப் பார்க்க லல்லி யின் ஆத்திரம் பன்மடங்காகியது. அவள் பட்டென்று எழுந்த வேகத் தைக் கண்டு என்ன விபரீதம் நேரப் போகிறதோ என்று பதறிப்போன வனிதா அவள் கையை இறுகப் பற் றித் தன்னோடு நிறுத்திக்கொண் டாள்.

வாசலில் நின்றவனின் அலட்சி யப் பார்வையும் அகம்பாவமான பேச்சையும் கேட்டுக் கலவரம் அடைந்துவிட்ட அவளது மெல்லிய உடல் இலேசாக நடுங்கத் தொடங் கியது.

அந்தக் குறுந்தாடிக்காரனை இதற்கு முன் எங்கேயோ பார்த்த நினைவு ஏற்பட்டது!

அதே வெறித்த பார்வை! எங்கே...? எப்போது...? அவள் நினைவுக்குக் கொண்டு வரப் பாடுபட் டாள்...!

போதை கொண்டவனைப்போல் குறுகுறுவென்று பார்க்கும் அவனது விழிகள் வனிதாவின் மீது நிலைகுத்தி நிற்பதைக் கண்டதும் லல்லி துணுக் குற்றாள். அவள் உள்ளம் பதறியது!

சடாரென்று வனிதாவின் பக் கம் திரும்பினாள். தான் வந்து கத வைத் தட்டியபோது இரவு உடை யோடு படுக்கையிலிருந்து எழுந்து வந்த வனிதா இன்னும் அதே உடை யோடுதான் இருந்தாள்.

மெல்லிய திரைச் சீலை போன்ற உடையில் வனிதாவின் இளமை கொஞ்சும் வாளிப்பான உடல் மேலும் எழில்கோலம் போட்டுக் காட்டியது.

பனியில் நனைந்த ரோஜா மலர் போல நின்றிருக்கும் அவள் அழகு மேனி அவனை நிலைகுலைய வைத்துக் கொண்டிருப்பதைப்புரிந்துகொண்ட லல்லி வனிதாவை உள்ளே போகும் படி கண்களால் சாடை காட்டினாள்.

உள் பக்கமாக திறக்கும் அந்தக் கதவைப் படீரென்று வெளியே இழுத்துச் சாத்துவது அவளுக்கு வசதியாக இருந்தது.

கையைச் சரக்கென்று எடுத்துக் கொண்டு உணர்வு வந்தவளைப்போல நிமிர்ந்து அவனை நோக்கியபோது அவன் வெளியே நடந்து கொண்டி ருந்தான்.

உள்ளே தாளிடும் ஓசையும் பலமாகக் கேட்டது. நவின் வேறு வழியின்றி லல்லியைத்தொடர்ந்து நடந்தான்.

ஹாலின் ஓர் ஓரமாக அமைந்திருந்தது அந்த அறை! எனவே ஹாலில் நுழைபவர்களின் பார்வைக்கு அந்த அறை தப்புவதே இல்லை.

அதனுல்தான் முரட்டுத் துணியால் தரையில் புரளும்படி தொங்க விடப்பட்டிருந்தது திரைச்சீலை!

முதல்நாள் அறைக்குள் நுழைந்து அட்டகாசம் செய்த தோழிகளில் ஒருத்தி அதைச் சுருக்கிக் கட்டிவைத்திருந்தாள். அவசரமாக வெளியே கிளம்பியது, இரவு நெடுநேரத்திற்குப் பிறகு திரும்பி வந்தது, புதிய அறிமுகத்தால் தன் நினைவை இழந்து தவித்தது இவற்ருல் இதையெல்லாம் அடியோடு மறந்தே போனுள் வனிதா.

காலையில் நெடுநேரம் தூங்கிவிட்டு லல்லி வந்து கதவைத் தட்டிய வேகத்தில் எழுந்தபோதும் அதைக் கவனிக்கவேயில்லை. பளிச்சென்று அறைமுழுதும் வெளியே தெரியும்படி இருந்த நிலையை அப்போதுதான் உணர்ந்து திடுக்கிட்டாள்.

அவசர அவசரமாகத் திரைச்சீலையை அவிழ்த்துவிட்டுக் கதவைப் பூட்டிக்கொண்டு கட்டிலில் போய்த் தொப்பென்று விழுந்தாள்.

ஒன்றுமே நடக்கவில்லை என்ருலும் ஏதோ விபரீதம் நடந்துவிட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது! உடல் குப்பென்று வியர்த்துவிட்டது.

வனிதாவின் படபடப்பு அடங்கச் சில நிமிடங்கள் ஆயின. உணர்வு வந்து மெல்ல எழுந்து சன்னலைத் திறந்தாள்.

சற்றுத் தூரத்தில் லல்லியும் அவனும் நிற்பதைக் கண்டாள். லல்லி அவனை எச்சரிக்கை செய்வதுபோல விரலை ஆட்டி ஆட்டிப் பேசுவதும் எதற்கும் துணிந்தவனைப் போல அவன் பாக்கெட்டில் கையை விட்டுக் கொண்டு அலட்சியமாக நிற்பதையுங்கண்ட பிறகு வனிதாவுக்கு மீண்டும் படபடப்பு ஏற்பட்டது. அவளது அடங்கிய பயம் மீண்டும் துளிர்க்கத் தொடங்கியது. அவன் யாராக இருப்பான்...?

அவன் ஏன் லல்லியைத் தொடர்ந்து வந்தான்...?

கேள்விக் கணைகள் அவள் இதயத்தைத் துளைத்து எடுத்தன. அவள் குழப்பத்தோடு மீண்டும் கட்டிலில் போய்ச் சாய்ந்துகொண்டாள்.

அவன் மிகவும் உரிமையோடு துணிச்சலாக நடந்து கொள்வதைப் பார்த்தால் நிச்சயம் லல்லிக்கு நெருங்கிய பழக்கம் உள்ளவனுகத்தான் இருக்கவேண்டும்!

ஆனுல் எவ்வளவுதான் உரிமை உள்ளவனுக இருந்தாலும் அல்லது நெருங்கிப் பழகியவனுக இருந்தாலும் லல்லிக்கு அவனைப் பிடிக்கவில்லை என்பது தெளிவாகியது! அதோடு லல்லியின் வெறுப்புக்கும் ஆளானவன் என்பதை நினைக்கும் போது அவளுக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது!

ஏனென்ருல் வனிதாவுக்கு அவனைக் காணவே வெறுப்பாக இருந்தது! அனுமதியின்றி, கதவைத்தட்டி அறிவிக்கும் மரியாதைகூட இன்றி அறைவாசல்வரை வந்து நிற்கும் பண்பில்லாத ஒருவனை அவள் வாழ்க்கையில் முதன் முதலாக இன்றுதான் சந்திக்கிருள். அந்தச் செயலை நினைக்கும்போதே அவளுக்கு அருவருப்பாக இருந்தது!

நாகரிகத்தின் உச்சிப்படியில் நிற்கும் இந்த நகரில் ஓர் இளைஞன், அதுவும் முன்பின் பழக்கமில்லாத பெண்ணிடம் இப்படி நடந்து கொள்வதென்ருல்...எப்படியிருக்கும்...?

பெயரைப் பார்! நவின்...!

இது என்ன நவீனமான பெயர்!

நாகரிகம் தெரியாத ஒரு காட்டுமிராண்டிக்குப் பெயரா நவீன்? வனிதா அந்தக் குழப்பமான வேளையிலும் குபுக்கென்று சிரித்தாள்.

உடைமாற்றிக் கொள்ளவேண்டும் என்று எழுந்தபோது கண்ணுடியில் தன் உருவத்தை நன்ருகப் பார்த்துக் கொண்டாள்.

நல்ல வேளை! ஆடை கலைந்து அலங்கோலமாக இல்லாமல் கண்ணியமாகவே இருந்தது! அவள் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டாள்.

இந்தக் காலை வேளையில் தன் எதிரே வந்து நின்றது அசோக்கின் உருவமாக இருந்திருந்தால்...?

இன்ப அதிர்ச்சியொன்று இதயத்தைத் தாக்குவதைப் போல உணர்ந்தாள். செவ்வானம்போல் முகம் சிவந்து நாணப் புன்னகையை நெளியவிட்டது.

—வளரும்



நிலைநகரிலும் அதன் சுற்று வட்டாரங்களிலும் மேடைகளில் நவீன நடனங்களை ஆடி இளைஞர்களின் உள்ளங்களைக் கிறுகிறுக்க வைத்துக் கொண்டிருப்பவர் குமாரி இந்திராணி ராமச்சந்திரன்.

1971—ஆம் ஆண்டுமுதல் மேடைகளில் ஆடத் தொடங்கிய இந்திரா, தானே இசைத்தட்டுகளைப் போட்டு, ஓரியண்டல் கவர்ச்சி நடனங்களைக் கற்றுக் கொண்டார். "பரத நாட்டியத்தில் பற்றும் பக்தியும் உண்டு. ஆனுல் அதைக் கற்றுக்கொள்ள வாய்ப்பும் நேரமும் போதவில்லை. அதற்காக முயற்சி எடுத்துச் சில காலம் நடனமணி தங்கமணி குருப்பையாவிடம் பயிற்சி எடுத்த போது தங்கமணிக்குத் திருமணம் நடந்துவிட்டதால் பரத நாட்டியப் பயிற்சியை மேற்கொள்ள முடியாது போனது" என்கிருர் அவர். இந்திராவுக்குப் பரதத்தில் விருப்பம் இருந்தாலும், கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கிறவர்களும், ரசிகர்களும் இந்திராவின் நவீன நடனங்களைக் காணவே விரும்புகிருர்கள். கவர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இக்காலத்தில், பாரம்பரிய நடனக் கலைகளில் நாட்டம் வளரப் பொது மக்களின் ரசனை முக்கியமல்லவா? மக்கள் பார்த்து ரசிக்குமளவுக்குப் பண்பாடு கெடாமல், கலையைப் படைக்க முடியும்; ஆனுல் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களும் ரசிகர்களும் ஒத்துழைக்க வேண்டுமே என்ற கவலை இந்திராவிடம் இருக்கிறது.

மேடையில் நடனமணியாகத் திகழும் இந்திராவை, முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையில், பொறுப்புமிக்க பெண்ணுக, முதலாளியாக நாம் பார்க்கும் போது வியப்பிலும் வியப்பாக நாம் மூக்கின்மேல் விரலைவைக்க வேண்டியிருக்கிறது. ஆம், புடு மார்க்கெட்டில் சிறிய மரக்கறிக் கடையோடு கூடிய மளிகைக் கடைக்குச் சொந்தக்காரரான இவர், மிகச் சாமர்த்தியமாகத் தொழில் நடத்தி வருகிருர். வியாபாரத்தைத் தனியாகச் சமாளிக்க முடியாமல் சம்பளத்துக்கு ஒரு பையனையும் அமர்த்திக் கொண்டு சுறுசுறுப்பாக இயங்குகிருர்.

கலைத்துறையில் உள்ள பெண்கள், அதுவும் ஒருமுறை மேடையில் தோன்றிவிட்டால், தங்கள் வாழ்க்கைப் பின்னணியைப் பெரிதாகக் காட்டிக் கொள்ளும் இந்தக் காலத்தில், "மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளேன்" என்று சொல்வதில் பெருமைப் படுகின்ருர் இந்திரா.

தனக்குத் தானே முதலாளி என்று சொல்லிக்கொள்வதில் உள்ள பெருமை, பிறரிடம் கை நீட்டிச் சம்பளம் வாங்குவதில் இருப்பதாக நினைப்பது தவறு என்று நினைக்கும் இவரின் இலட்சியம், ஒரு தரமான மளிகைக் கடையை நடத்த வேண்டும் என்பதுதான். தொழில் ஆர்வமுள்ள இவர் அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளார். வியாபாரத்தில் கிடைக்கும் இலாபத்தில் ஒரு கணிசமான தொகையை இதற்காக அவர் சேமித்து வருகிருர்.

—எஸ். பாரத்

சிந்தையில் நிற்கும் சிவனடியார்கள்



சித்தாந்த வித்தகர்
முரு. பழ. இரத்தினம் செட்டியார்

மனுநீதிச்சோழன்

[சென்ற இதழின் தொடர்ச்சி]

"மகனைக் கொல்வதன் மூலம் தாய்ப்பசுவின் துயரத்தை நீக்க முடியாது; பரிகாரம் செய்தாலும் பயனில்லை; இந்நிலையில் என் செய்வது? ஓர் உயிரின் துயரத்தை நீக்க முடியாவிட்டால் அத்துயரத்தில் நாமும் பங்குகொள்ள வேண்டும். இந்தத் தாய்ப்பசு அடையும் வருத்தத்தை நானும் அடைவதுதான் இதற்குச் சரியான பரிகாரம் ஆகும். என் மகன் கொல்லாமல் வேறு ஒருவன் அறியாமல் இக்குற்றத்தைச் செய்திருப்பானானால், அவன் அறியாமல் செய்தான் என எண்ணி அவனை மன்னித்துவிட்டு, அப்பசு அடையும் துயரத்தை நான் அனுபவிப்பதற்காக என் மகனைத் தேர்க்காலில் ஊரவே செய்வேன்; வேறு ஒருவன் செய்தால்கூட என் மகனைத் தேர்க்காலில் ஏற்றி அத்துயரத்தை நான் அனுபவிக்கத் துணிவேனானால் என் மகனே செய்தபொழுது நான் சும்மா இருக்கலாமா?

அறிவினால் ஆகுவது உண்டோ? "பிறிதின்நோய் தன் நோய்போல் போற்றாக்கடை" என வள்ளுவர் கூறினார். மற்றோர் உயிரின் துயரத்தை நீக்க முடியாவிட்டால் அத்துயரத்தைத் தன் துயரம்போல் ஏற்று அனுபவிக்க வேண்டுமென்பது இதன் கருத்து. எனவே என் மகனைத் தேர்க்காலில் இட்டு ஊர்வதே செய்யற்பாலது" என அரசன் அமைச்சர்களிடம் தன் முடிவைத் தெளிந்து கூறினான். அவர்கள் அச்சத்தோடு அவ்விடத்தைவிட்டு நீங்கினர்.

ஓர் அமைச்சரை அரசன் அழைத்தான். "நீர் போய் என் மகனைத் தேர்க்காலில் ஊர்ந்து வருக" என அவர்க்கு கட்டளையிட்டான். அமைச்சர் கட்டளையை ஏற்றுக்கொண்டு வீதிக்கு வந்தார். ஆனால் அரசகுமாரனைத் தேர்க்காலில் இடாமல் தன் உயிரைத் தானே போக்கிக்கொண்டார். அமைச்சரின் நேர்மை மிகவும் அதிசயிக்கத்தக்கதாக இருந்தது.

செய்தியை அறிந்த அரசன் இனி அமைச்சர்களுக்குக் கட்டளை பிறப்பிப்பதில் அர்த்தமில்லை என உணர்ந்து மகனை அழைத்துக்கொண்டு தானே அரசவீதிக்குச் சென்றான். இப்பொழுது அரசன் மனநிலையை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அரசன் இங்கே நீதி செய்யவில்லை. அறியாமல் செய்த பிழைக்கு மரணதண்டனை விதிப்பது நீதியாகாது. பசுவின் துயரத்தைக் கண்டு பொறுக்கமுடியாத அரசன் அத்துயரத்தைத் தானும் அடைய வேண்டுமெனக் கருதினான். இது பசுவினிடத்து அவன் கொண்ட கருணையாகும். அவ்வாறு தேர்க்காலில் ஊர்வதை அரசகுமாரன் மறுக்காமல் உடன்பட்டு நின்றது அரசனுக்கு உவகை அளித்தது.

தானும் தன் மகனும் சேர்ந்து பசுவுக்குக் கடமைசெய்ய வேண்டுமென அவன் எண்ணினான். கருணையின் முதிர்ச்சியால் அக்கருணைக்குள்ளேயே ஒரு நியாயத்தை அவன் கண்டான். மகன் சம்மதிப்பதால் அவனை ஊர்ந்து தாய்ப்பசு கன்றை இழந்து துடிப்பதுபோலத் தானும் மகனை இழந்து துடிக்கவேண்டும்; அஃதே அப்பசுவுக்குச் செய்யும் நியாயம் என அவன் தீர்மானித்தான். மகனை இட்டுச் சென்று அரசவீதியில் தேர்க்காலின்கீழ் இட்டு ஊர்ந்தான். இச்செயலைக் கண்டு உலகம் உருகியது.

பசுவின் துயரத்தை அரசனால் பொறுக்க முடியவில்லை. அதுபோல் அரசன் துயருறுவதை ஆண்டவனால் பொறுக்க முடியவில்லை. உடனே வீதிவிடங்கப்பெருமான் பார்வதி சமேதனாக நடுவீதியில் காட்சி அளித்தான். தேவர்கள் பூமழை பொழிந்தனர்.

யாவரும் உயிர்த்தெழல்

சிவபெருமான் திருவருளால் இறந்த கன்று உயிர்பெற்று எழுந்தது. முதலில் அதுதானே உயிர் பெறல் வேண்டும்? இல்லையேல் அரசன் எவ்வாறு நிறைவு பெறுவான்? கன்று உயிர்த்தெழாவிட்டால் இறைவன் மகனை உயிர்ப்பித்துக்கொடுத்தாலும் மீண்டும் அரசன் அவனைத் தேர்க்காலில் ஊரவே செய்வான். இதனால்தான் இறைவன் முதலில் கன்றை உயிர்ப்பித்துக் கொடுத்து அதன் பின் மகனையும் மந்திரியையும் உயிர்த்தெழச் செய்தான். "முன்னவனே முன் நின்றால் முடியாத பொருளுண்டோ?"

கன்று உயிர்த்தெழுந்ததும் பசு துயர்நீங்கிப் பாலைச் சுரந்தது. கன்று அதனை உண்டு மகிழ்ந்து துள்ளிக் குதித்தது. உயிர்பெற்றெழுந்த மகனை அரசன் மார்புறத் தழுவிக்கொண்டான். மகனுக்காக உயிர்விட்ட மந்திரியார் உயிர்த்தெழுந்து மகிழ்வோடு மகனையும் மன்னனையும் நோக்கினார். இவ்வாறு யாவரும் புளகாங்கிதம் எய்தத் திருவருள் சுரந்துவிட்டு இறைவன் மறைந்தருளினான். அடியார்களுக்கு எளியன் இறைவன் என்பதை நடுத்தெருவில் காட்சி அளித்ததன் மூலம் அவன் மெய்ப்பித்தான். பெரிய புராணத்தில் இனிச் சொல்லப் போகும் அடியார்கள் வரலாற்றில் இறைவனின் எளியனாம் தன்மை இனிது புலனாகுமாதலால் தோற்றுவாயாக இறைவனின் கருணைத் திறத்தை நாம் அறியச் சேக்கிழார் இவ்வரலாற்றை முதலில் கூறியிருக்கிறார்.

ஜீவகாருண்யம்

சைவத்தின் தலையாயக் கொள்கை ஜீவகாருண்யமாகும். மனுநீதிச் சோழன் வரலாற்றில் இது நன்கு புலப்படுத்தப்படுகிறது. உருத்திராக்கம் கருணையின் அடையாளமாகும். இறைவன் கண்களினின்றும் இரக்கம் காரணமாகத் துளிர்த்த துளிகளே உருத்திராக்கமாயின எனப் புராணம் சொல்லும். பிற உயிர்களின் துயரம் கண்டு இரங்கவேண்டும் என்னும் கருத்தினை உணர்த்தவே சைவர்கள் உருத்திராக்கம் அணிகின்றனர்.

பழைய வரலாறு

மனுநீதிச் சோழன் ஆட்சி சேக்கிழாருக்கு ஆயிரம் ஆண்டு முன்னதாக நிகழ்ந்ததாகும். அவர் வரலாறு சிலப்பதிகாரத்தில் பேசப்படுகிறது. கண்ணகி பாண்டியன் அவையில் பின்வருமாறு கூறுகிறாள்:-

'தேரா மன்னா!
செப்புவதுடையேன்
எள்ளறு சிறப்பின் இமையவர்
வியப்பப்
புள்ளுறு புண்கண் தீர்த்தோன்;
அன்றியும்
வாயில் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர்
நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியில்
மடித்தோன்"

பழைய வரலாறு புதிய மெருகுடன் பெரிய புராணத்தில் இடம் பெற்றுள்ளது. இறைவனின் எளியனும் தன்மையை உணர்த்தச் சேக்கிழார் இவ்வரலாற்றைப் பயன்படுத்திக்கொண்டுள்ளார். அரசன் நீதியின் அடிப்படையில் அவ்வாறு செய்தான் என்பதையே சிலப்பதிகாரம் "ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடத் தான்தன் அரும் பெறற் புதல்வனை ஆழியில் மடித்தோன்" எனக் கூறுகிறது.

மா. முனியாண்டி, குருண்

கே: "புதிய சமுதாயம்" இதழுக்குச் சிறுகதைகள் எழுத வேண்டுமானுல் எத்தனை பக்கம் எழுதவேண்டும்?
 ப: புல்ஸ்கேப் தாளில் ஆறு பக்கம்வரை எழுத லாம்.

பி. சச்சிதானந்தன், ஜெண்டராட்டா தோட்டம், தெலுக்கான்சன்


கே: குடிப்பழக்கம் எல்லா இனத்தவரிடையே நிலவி இருப்பினும், போதையில் புத்தி தடுமாறி மக்கள் மத்தியில் அவமானப்பட்டுச் செல்பவர் ஓர் இந்தியராகத்தான் இருக்கிறர். மனம் வேதனை கொள்கிறது. தங்கள் கருத்து?
 ப: தலைகுனியவைக்கும் இத்தகைய வேதனைகள் ஒன்ரு இரண்டா? தலை நிமிர்ந்து நிற்கும் சமுதாயத்தை உருவாக்க அனைவரும் முழுமூச்சாகப் பாடுபட்டால்தான் இந்த வேதனைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கமுடியும்.

திருமதி வள்ளி, பிரிஞ்சாங்

கே: சீர்வரிசையினுல் (பெட்டிப்பணம்) பல ஏழைப் பெண்களின் வாழ்க்கை துன்பக் கடலில் மூழ்கிவிடுகிறதே! இது நம் சமுதாயத்திற்குத் தேவைதானு?
 ப: குடும்பங்களைப் பாதிக்கும் சீர்வரிசைகளும் முறைகளும் தேவையற்றவை.

எம். சாமிக்கண்ணு, டெனிஸ் டவுன் தோட்டம், பாரிட் புந்தார்

கே: நாதம் இல்லையென்றல் கீதம் கிடையாதா?
 ப: நாதமும் கீதமும் ஒட்டிப் பிறக்கும் சயாமிய இரட்டையர்கள் போன்றவை.



ஏ. முத்து. பெர்ணம் தோட்டம், ஊத்தாங் மெலிந்தாங்

கே: மனிதனுக்கு ஆறு அறிவு என்கிருர்களே, அவை யாவை?
 ப: இதிலும் உங்களுக்குச் சந்தேகமா?

எஸ். விஜய். விஜிடாஸ், புக்கிட் சீடிங் தோட்டம், பந்திங்

கே: பாலர், இளைஞர், முதியவர் ஆகிய மூன்று சமுதாயத்துக்கும் நீங்கள் கூறும் ஆலோசனை?
 ப: பாலருக்கு: காலை எழுந்தவுடன் படிப்பு. இளைஞருக்கு: வயிரமுடைய நெஞ்சு வேணும். முதியவருக்கு: ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

கே. கல்யாணி, கோலக்குரோவ்

கே: "புதிய சமுதாயத்தில்" மகளிர்க்காக ஓர் அங்கம் வெளியிடுவீர்களா?
 ப: மகளிர் விரும்பும் பல அம்சங்களைப் புதிய சமுதாயம் ஏற்கனவே தாங்கிவருகிறதே!

எம். ஜி. ராஜூ, கேமரன் மலை

கே: ஏன் சார், ஒன்று சேர்ந்த அன்பு மாறுமா?
 ப: விதிவசத்தால் மாறுவதும் உண்டு.

எம். எஸ். மணியம், பில்மோர் தோட்டம், பத்து தீகா

கே: நம் நாட்டில் இப்பொழுது ஏன் நாற்காலிச் சண்டை அதிகமாக இருக்கிறது? ஏன் நாற்காலிகளுக்குப் பஞ்சமா?
 ப: பொதுத் தேர்தல் விரைவில் நிகழுமென்று எதிர் பார்க்கப்படுவதால்தான் அரசியல் பதவிகளுக்கு இத்தனை அடிதடி! அமரக் கூடிய நாற்காலிகளைவிட அவற்றில் அமரத் துடிக்கும் "தலைவர்களின்" எண்ணிக்கை அதிகமாக இருப்பதும் ஒரு காரணம்.

எஸ். கருணாநிதி மஞ்சு, லாடாங் கெடிஸ்

கே: தவறு செய்தவனுக்கு வாழ்க்கையில் மன்னிப்புக் கிடைக்காதா?
 ப: தவற்றை மனமார உணர்ந்துவிட்டால் அதுவே பெரிய மன்னிப்பு.

தெ. கு. ஆறுமுகம், சுங்கை

கே: பெல்டா நிலக்குடியேற்றத் திட்டத்தில் பங்கு பெறும் வாய்ப்பு நம் இந்தியர்களுக்கு மிகவும் அரிதாக இருக்கிறது. அப்படியே வாய்ப்புக்கள் கிடைத்தாலும் நமது விகிதாச்சாரம் மிகமிகக் குறைவாக இருக்கிறது. நிலைமை இப்படியிருக்க இம்மாநிலத்தின் ம. இ. கா. பிரமுகர் ஒருவர் நிலப் பிரச்னையில் இந்தியர்களுக்கு 20 விழுக்காட்டிற்கு மேல் கிடைத்திருக்கிறது என அப்பட்டமாகப் பொய் சொல்கிருர். இதை யாரிடம் சொல்லி அழுவது அண்ணு?
 ப: பெல்டா நிலக்குடியேற்றத்தில் இந்தியர்களுக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்புக் குறைவென்பது உண்மையே. ஆனுல் பொதுவில் இந்தியர்களுக்குக் கிடைத்திருக்கும் அரசாங்க நில ஒதுக்கீடுகளைப் பற்றி அந்த ம. இ. கா. பிரமுகர் பேசுகிருர் என்று நினைக்கிறேன். 20 சதவிதம் என்பது "உண்மை" யாக இருக்குமானுல் நமக்கு மகிழ்ச்சியே. புள்ளி விவரங்களுடன் அந்தப் பிரமுகர் இதனை மெய்ப்பித்தால் நல்லது.

குபவன்குடி ஏ. என். எம். இக்பால், பெட்டாலிங் ஜெயா

கே: தற்போது தங்களுடைய உடல்நிலை எப்படி சார்?
 ப: இறையருளால் நன்ருய் இருக்கிறது.

வேலு இராம ரெட்டி, சபாய் தோட்டம், கமுருல் பிரிவு. காராக், பெந்தோங்

கே: துன்பங்கள் உறங்குவதில்லை! அப்படியானுல், இன்பங்களுக்கு...?
 ப: உறங்கும் இடைவேளை உண்டு.

கே: வாழ்க்கையை வெறுத்துக்கொண்டே வாழ்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
 ப: வாழத் தெரியாதவர்கள்.

க. ஜீவா, குளுகோர் தோட்டம், சுங்கைப் பட்டாணி

கே: அண்ணு! உங்கள் புதிய சமுதாயத்தில் ஒரு பக்கத்தில் பேனு நண்பர் பகுதி ஆரம்பித்தால் என்ன?
 ப: பேனு நண்பர் பகுதி மட்டுமல்ல, எத்தனையோ பகுதிகளைச் சேர்க்க எண்ணுகிறோம்- எல்லாவற்றுக்கும் இடமில்லையே!

அஞ்சு ராமச்சந்திரன், பத்தாங்காலி தோட்டம், சிலாங்கூர்

கே: மக்களைப்பெற்ற மகராசி என்று யாரைச்சொல்வது?
 ப: சீனுவையும் பாரத தேசத்தையுமே மக்களைப் பெற்ற மகராசி என்று சொல்ல வேண்டும். சீனுவின் மக்கள் தொகை 80 கோடி. பாரதத்தின் மக்கள் தொகை 60 கோடி.

கே: புதிய வாசகர்களுக்குப் "புதிய சமுதாயத்தில்" இடம் கிடைக்குமா?
 ப: இது மகராசன் கப்பல். ஏற வருகிறவர்களையெல்லாம் மனமுவந்து ஏற்றுக் கொள்ளும்.

அச்சம்மா சூரியநாராயணன், பத்தாங்காலி தோட்டம்

கே: பசியில்லாமல் வாழ முடியுமா?
ப: ஏன் முடியாது? பசிப்பதற்கு மருந்து தேடும் பரிதாப ஜீவன்கள் பலரைத் தினமும் பார்க்கிறோமே!

கே: நாம் யாருக்காக முதலில் வாழ வேண்டும்?
ப: நமக்காக!

டி. எம். ஜே. பாரிதீன், ஜோகூர்பாரு

கே: தமிழகத் தேர்தலில் எந்தக் கட்சி ஆட்சியைப் பிடிக்கும்?
ப: ஆருடம் சொல்ல முடியாத அளவுக்கு அங்கு அரசியல் திசை தடுமாறிக் குழம்பிக் கிடக்கிறது.

மா. வ. அமரவேல், மா. வ. நாலல்தாசன், குளுவாங்

கே: "புதிய சமுதாயத்தில்" இடம் பெறும் "இலக்கிய அரங்கம்" பகுதியைத் தொடர்ந்து வெளியிடுவீர்களா?
ப: உங்கள் விருப்பம் நிறைவேறும்.

ப. வீரய்யா, கிரீக்

கே: சென்னையிலிருந்து புத்தகம் வரவழைப்பதென்றால் எப்படி?
ப: புத்தகத்தின் விலையையும், தபால் செலவையும், பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் அல்லது டிராப்ட் மூலம் அனுப்பினால் வெளியீட்டாளர்கள் உங்களுக்குப் புத்தகத்தை அனுப்புவார்கள்.

"ஆர்வி" ஜெயா, சுங்கை

கே: அறிவாலயம்; கல்விக்கூடம் சிந்தனைக்கு வேலி போடும் சிறைக் கூடமாக அமையலாமா?
ப: கூடாது; சிந்தனைக்குத் தீனி போடும் மேய்ப்புக் கூடமாக அது அமைவதே சரி.

ராம்குமார், புக்கிட் சிடிங் தோட்டம்

கே: வாழ்க்கையில் கசப்பு ஏற்படுகின்றபோது மனிதனுக்கு நிம்மதி தருவது எது?
ப: இனிக்கும் இசைப்பாட்டு.

கே: சமுதாய வளர்ச்சிக்கு ஆசிரியர்கள், குமாஸ்தாக்கள், உத்தியோகஸ்தர்கள் எவ்வகையில் உதவமுடியும்?
ப: இவர்கள் தத்தம் கடமைகளைக் கழிக்காமல், அலுக்காமல் கருத்தூன்றிச் செய்தாலே போதும்; அதுவே பெரிய சமுதாய சேவை.

பரிசோதனை

சிமெண்டைத் தண்ணீர் விட்டுக் குழைத்துச் சுமார் ஒன்றரை அங்குலச் சுற்றளவுள்ள பந்துகளாக உருட்டி அப்படியே இருபத்து நான்கு மணி நேரம் விட்டு வைக்கவும். பிறகு அந்த உருண்டைகளைத் தண்ணீரில் போடவும். உருண்டை உடைந்தாலோ, விரிசல் கண்டாலோ அது நல்ல சிமெண்டல்ல.

இருபத்து நான்கு மணி நேரம் காத்திருக்க முடியாதவர்கள், ஒரு தட்டில் கொஞ்சம் சிமெண்டைப் போட்டு, தட்டை ஸ்டவ்வில் இருபது நிமிடங்கள் வைத்துச் சூடேற்றவும். நல்ல சிமெண்ட் நிறம் மாறாமல் அப்படியே இருக்கும். கலப்படச் சிமெண்டாக இருந்தால் அது நிறம் மாறும். சில சமயங்களில் எரிந்தும் போய்விடும்.

தகவல்: ஆ. சு. மணியம், கோலாலம்பூர்.

ரா. தங்கராஜூ, ஹோ சூன் ரப்பர் தோட்டம், கேலாங்

கே: சென்ற 28-11-1976 அன்று மாலை "நாடகம் பிறக்கிறது" என்னும் தலைப்பில் ஒலியேறிய நிகழ்ச்சியில் நான், "ஆர். எஸ். ரீட்டா ராஜா, 18ஆவது கல், ஜாவான் பொங்தியான், குனோங் புலாய், ஜோகூர்" என்ற முகவரியிலிருந்து புனை பெயரில் "போகும் பாதை பொல்லாத பாதை" என்ற பாடலுக்கு வரைந்த நாடகக் காட்சி பரிசு பெற்றதாக அறிவித்திருந்தார் தயாரிப்பாளர் திரு சுப்பையா. ஆனால் அந்தத் தொகைக்குரிய காசோலையோ, ஒப்பந்தப் பத்திரங்களோ இதுவரையிலும் கிடைக்கவில்லை. அதற்குப் பிறகு நான் எழுதிய எழுத்தோவியங்களுக்குக்கூட அன்பளிப்புத் தொகைகள் கிடைத்துவிட்டன. தயாரிப்பாளருக்கு நான் மூன்று கடிதங்களின் மூலம் தெரிவித்தும், இதுவரை ஒரு பதிலும் தெரிவிக்கவில்லை. நான் எழுதிய முதல் எழுத்தோவியமானதால் அந்தத் தொகையை நினைவுச்சின்னமாக வைத்துக்கொள்ள ஆவலாய் உள்ளேன். ஆகையால் தாங்கள் சம்பந்தப்பட்ட தயாரிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்து ஆவன செய்துதவ வேண்டுகிறேன்.
ப: தயாரிப்பாளர் திரு. சுப்பையா "உடனே" கவனிப்பாரென்று நம்புகிறேன்.

ஏ. எஸ். ரவி பெருமாள், குக்கூப் தோட்டம், பொந்தியான்

கே: சினிமாவையும் சேர்த்தால்தான் பத்திரிகைக்கு வளர்ச்சி கிடைக்கும் என்று நீங்களும் நம்புகிறீர்களா?
ப: சினிமா அப்படியொரு இன்றியமையாத அம்சம் என்று நான் கருதவில்லை. ஆனால் புதிய சமுதாயம் போன்ற குடும்பப் பத்திரிகைகளில் சினிமாவுக்கும் இடம் கொடுப்பதில் பொருளிருக்கிறது.

சு. அ. வீரசிம்மன், ஜோகூர்பாரு

கே: தங்களின் சென்ற இதழில் வெளியிடப்பட்ட பதிலினைக் கருத்தில் கொண்டால்,சில ம. இ. கா. தலைவர்கள் சில மன்றங்களிலும், கழகங்களிலும் தலைமைப் பொறுப்பினை ஏற்றுள்ளனரே, அது எப்படி?
ப: சட்டப்படி அது தவறில்லை என்றாலும் தார்மீக ரீதியில் முறையாகாது. மணிமன்றங்களும், திராவிடர் கழகமும் இதற்கேற்பச் சட்டத் திருத்தங்களைச்செய்வது அந்த இயக்கங்களின் வளர்ச்சிக்கு அவசியமாகும்.

கே: மலேசிய இந்தியர்களில் 8 சதவிகிதத்தினர் ம. இ. கா. வில் அங்கம் பெற்றிருந்தும் இந்த அளவிற்கு அங்கத்துவம் பெற்றிராத சீனர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் சட்டமன்ற, நாடாளுமன்ற இடங்களைக் காட்டிலும் ம. இ. கா வுக்குக் குறைவாக உள்ளதே! இதனை நம் பெருந்தலைவர்கள் அடுத்துவரும் பொதுத்தேர்தலில் மாற்றியமைப்பார்களா?
ப: ம. இ. கா.வுக்கு எல்லா மட்டங்களிலும் பிரதிநிதித்துவத்தை நியாயமான அளவு அதிகரிக்கத் தேசிய முன்னணியின் தலைவரான பிரதமர் டத்தோ உசேன் ஓன் ஆவன செய்வாரென்று இந்திய சமுதாயம் எதிர்பார்ப்பதில் தவறில்லை.

தாரா எழிலழகன், சுங்கைவே

கே: வீரம் நிறைந்தவன் புத்திசாலியா?
ப: விவேகம் நிறைந்த வீரர்களும் இருக்கிறார்கள். ஆனால் எல்லா வீரர்களிடமும் விவேகத்தை எதிர்பார்க்க முடியாது.

ஐயாசாமி ஜமுனா, சுங்கை, பேரா

கே: வாசகர்கள் விருப்பத்திற்கிணங்க "புதிய சமுதாயம்" இதழில் இடம்பெறும் எழுத்துக்களைப் பெரிதாக அச்சடித்தால் என்ன?
ப: இப்பொழுது எல்லாப் பகுதிகளும் பெரிய எழுத்திலேயே வெளிவருகின்றன. சின்ன எழுத்தை அடியோடு நிறுத்திவிட்டோம்.

கே: "தமிழ் முரசு" பத்திரிகை என்ன ஆயிற்று?
ப: சிங்கப்பூரில் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது.

கொச்சித் தேவதை



"பழனி மாமா"

மலாக்காவில் உள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் ரவி ஐந்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தான். பள்ளிக்குச் செல்லும்போது ஒவ்வொரு நாளும் ரவியின் அம்மா அவனுக்குப் பத்துக் காசு கொடுப்பாள். தனக்கு மிகவும் பிடித்தமான கொச்சியைத்தான் ரவி நாள் தோறும் வாங்குவான். கொச்சி விதைகளை ஒன்றுகூட விடாமல் கொறித்துத் தின்பதில் ரவியோடு யாருமே போட்டியிட முடியாது. மற்ற குழந்தைகள் ஐஸ் கிரீம், மிட்டாய், பழங்கள் என்று பல வகைத் தின்பண்டங்களை வாங்கித் தின்னும் போது ரவி மட்டும் கொச்சிப் பைத்தியமாகத் திரிவது அவனுடைய அம்மாவுக்குப் பிடிக்கவில்லை. இதைப் பற்றி எத்தனையோ முறை சொல்லியும் ரவி கேட்பதாக இல்லை. "கடவுள் தான் உன்னைத் திருத்த வேண்டும்!" என்று சொல்லிவிட்டு சும்மா இருந்துவிடுவார்.

ஒரு நாள் பள்ளி இடைவேளையின்போது ரவி இரண்டு கொச்சிப் பேக்கட்டுக்களை வாங்கினான். விரைவில் மணி அடித்து விட்டமையால் அவற்றை உடனடியாகத் தின்று தீர்க்க முடியவில்லை. எனவே மீத முள்ளவற்றைத் தனது சட்டைப் பையில் வைத்துக்கொண்டு வகுப்பிற்குச் சென்றவன் அவற்றைச் சுத்தமாக மறந்தே விட்டான்.

பள்ளிக்கூடம் முடிந்து வீட்டிற்குச்சென்றவன் சற்று நேரம் பாடம் படித்துவிட்டுப் பின்னர் விளையாடினான். அந்த அசதியில் விரைவில் உறங்கியும் விட்டான். நள்ளிரவு 12 மணி இருக்கும். திடீரென ரவிக்குக் கொச்சி நினைப்பு வந்துவிட்டது. பையில் இருந்த கொச்சி பேக்கட்டை வெளியே எடுத்து ஒவ்வொன்றாகக் கொறிக்கத் தொடங்கினான். கையில் கிடைத்த பெரிய தொரு கொச்சியை எடுத்து பல் இடுக்கில் வைத்து ஒரு கடி கடித்தான். மறுகணம், எப்போதும் இல்லாத அதிசயமாக, "வீல்" என அலறும் ஓர் ஒலி கேட்டது. ரவிக்குத் தூக்கி வாரிப்போட்டது. "கொச்சியால் எப்படி அலறமுடியும்?" என்ற சந்தேகத்தோடு, மறுபடியும் ஒரு முறை கடித்தான். அலறல் ஒலி மீண்டும் கேட்கவே, ரவிக்குக் கொஞ்சம் பயம் ஏற்படத் தொடங்கியது.

"யார் அலறுவது?" என்று மெதுவாகக் கேட்டான்?"
டான்.

"நான்தான் கொச்சி தேவதை!" என்று பதில் வந்தது.

"கொச்சிக்குக் கூட தேவதை இருக்கிறதா? ஆச்சரியமாக இருக்கிறதே!" என்று கேட்டான் ரவி.

"ஆம், நான்தான் கொச்சி தேவதை! நீ மிகவும் விருப்பத்தோடு கொச்சி தின்று வருவதை நான் நீண்ட காலமாகக் கவனித்து வருகிறேன்.
உனக்கு ஒரு பரிசளித்துப் போகவே நான் இப்போது வந்துள்ளேன். எனவே என்னை மட்டும் தின்று விடாதே!" என்று சொல்லியது அந்தக் கொச்சி.

ரவி பெரிதும் ஆச்சரியப்பட்டுப் போனான். அசந்து போயிருந்த ரவியைப் பார்த்து அந்தக் கொச்சி தேவதை கேட்டது, "ரவி, உனக்கு என்ன வேண்டும்? எது வேண்டுமானாலும் கேள். நீ கேட்பதைக் கொடுப்பேன்" என்றது.

எதைக் கேட்பது என்று தெரியாமல் ஒரு கணம் தடுமாறினாலும், உடனே சுதாரித்துக்கொண்ட ரவி, "எனக்கு தின்னத் தின்னக் குறையாத அளவுக்கு கொச்சி வேண்டும்!" என்றான். "அப்படியே தந்தேன்!" என்ற ஒலி தான் கேட்டது. பெரிய கொச்சி உடனே மறைந்து விட்டது.

இதை உடனே சோதனை செய்து பார்த்துவிட வேண்டும் என்ற நினைப்போடும், உலகில் நம்மைவிட பாக்கியசாலி வேறு யாரும் இருக்க முடியாது என்ற மகிழ்வோடும் பையில் உள்ள கொச்சிகளை விரைந்து கொறிக்கத் தொடங்கினான் ரவி. கொறிக்கக் கொறிக்கக் குறையாமல் இருந்து கொண்டே இருந்தது அந்தக் கொச்சி. ரவியும் நிறுத்துவதாக இல்லை. தொடர்ந்து தின்று கொண்டே இருந்தான். வயிறு நிறைந்து, முட்டிக்கொண்டு வந்தது. அளவுக்கு மிஞ்சிய நிலையில், ரவியின் வயிறு "படார்" என வெடித்தது.

"ஐயையோ, அம்மா! என் வயிறு போச்சே!" இனிமேல் கொச்சியே தின்னமாட்டேன், என்னைக் காப்பாற்றுங்களேன்" என்று அலறினான் ரவி.

மறுகணம் அங்கு தோன்றியது அந்த கொச்சி தேவதை. "என் அன்பான ரவி! கவலைப்படாதே! உன் வயிறை நான் ஒட்டவைத்து விடுகிறேன். அதற்குக் கைமாறாக நீ எனக்கு ஓர் உறுதி மொழி தர வேண்டும்! ஓசியில் கிடைத்தாலும் ஒழுங்கு முறை வேண்டும்– காசுக்கு வாங்கினாலும் கட்டுப்பாடு வேண்டும்! இதை என்றென்றும் நீ மறக்கலாகாது. எவ்வளவு தான் சுவை மிகுந்ததானாலும் ஒரே பொருளைத் தொடர்ந்து சாப்பிட்டால் உடம்புக்குக் கெடுதல்தான் உண்டாகும். எனவே, இனிமேல் பள்ளியிலும் வீட்டிலும் பலவித மான உணவுகளையும் கலந்து உண்ண வேண்டும்! சரிதானா?" என்று கேட்டது.

"அப்படியே செய்வேன்- இது சத்தியம்" என்ற ரவியின் வயிறை உடனே சரிப்படுத்திவிட்டது கொச்சி தேவதை.

ஆப்பரேஷன் செய்தது போல ஏற்பட்ட வலியைத் தாங்க முடியாமல், "அம்மா, அம்மா...!" என்று அலறினான் ரவி.

அவனுடைய அலறலைக் கேட்ட ரவியின் அம்மா, "என்னடா ரவிக் கண்ணு, கனவு ஏதும் கண்டாயா?" என்று அன்புடன் கேட்டாள்.

"ம்... ஆமாம்... இல்லை..." என்று உளறியவாறு வயிற்றைப் பிடித்துக் கொண்டு குளியல் அறைக்கு ஓடினான் ரவி.

அன்றிலிருந்து ரவியிடம் ஏற்பட்ட மாறுதல்களும் நல்ல சாப்பாட்டுப் பழக்கங்களும் எப்படி வந்தன என்று அவனுடைய அம்மாவால் இன்று வரை புரிந்துகொள்ளவே முடியவில்லை. ●

15 நாள் பலன்

ஜூன் 11 முதல்
ஜூன் 26 வரை

கும்பம் (ஜன. 20 — பிப். 18)

யாருக்கும் அடிமையானாலும் பரவாயில்லை. உணர்ச்சிக்கு அடிமையாகி விடாதீர்கள். ஆபத்து நிழல் போலத் தொடரும். குழந்தைகள் உங்களுக்கு அதிகமான மகிழ்ச்சியைத் தருவார்கள். உங்கள் செயல்களில் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தலையிட்டால் அவர்களை ஒதுக்காதீர்கள். ஏதாகிலும் பொருளாதாரத் திட்டம் தீட்டியிருக்கிறீர்களா? சில நாட்களுக்கு அது தீட்டியதோடு நிற்கட்டுமே! எதற்கு இந்த அவசரம்.

நல்ல நாட்கள்: 14, 16, 20, 22

எச்சரிக்கை நாட்கள்: 23, 24

மீனம் (பிப் 19- மார்ச்சு 20)

என்ன, மூச்சு விடக்கூட நேரமில்லை, வேலை செய்ய வேண்டியுள்ளதா? அதற்கேற்ப பணம் கிடைக்கும்போது செய்ய வேண்டியதுதானே. நெருங்கிய நண்பர்கள் அல்லது உறவினர்களுடன் கருத்து வேறுபாடு வரலாம். அதுமட்டுமல்ல, உறவை முறிக்கும் அளவுக்குக்கூட வளர்ந்துவிடலாம். எச்சரிக்கையாக இருங்கள். வாகனப் போக்குவரத்தில் கவனமாக இருக்க வேண்டும்.

நல்ல நாட்கள்: 14, 16, 20,22

எச்சரிக்கை நாட்கள்: 23, 24

மேஷம் (மார்ச்சு 21 - ஏப். 20)

கையில், மடியில் எப்போதும் பத்தை ஐந்தை வைத்துக்கொண்டே இருங்கள். ஏனென்றால் திடீர் திடீரென்று செலவுகள் உண்டாகும். பெரியோர்களின் ஆலோசனைகளைக் கேளுங்கள். மேலதிகாரிகளின் உதவி கிடைக்கும். பொருளாதார ரீதியான கூட்டு முயற்சிகளால் பலன் உண்டு. சிக்கனத்தைக் கடைப்பிடியுங்கள்.

நல்ல நாட்கள்: 14, 16,20, 22

எச்சரிக்கை நாட்கள்: 12, 23

ரிஷபம் (ஏப். 21 - மே 20)

காதல் விவகாரங்களில் ஈடுபட்டிருப்பவர்களுக்குச் சில சங்கடங்கள் வரலாம். பண விஷயத்தில் கவலைப்பட வழியில்லை. "ஆற்றில் வருகுது, மணலில் சொருகுது" என்பார்களே, அதுபோல்தான் பணம் வரும்; போகும். அனுமார் வால்போல் நீண்டு கொண்டிருந்த பிரச்சினைகள் தீர்வுக்கு வரும். பெரியோர்களால் நன்மை கிடைக்கலாம்.

நல்ல நாட்கள்: 13, 17 , 20,22

எச்சரிக்கை நாள்: 12

மிதுனம் (மே 21-ஜூன் 20)

உடலாரோக்கியத்தில் சிறிது அதிகமாகவே அக்கறை செலுத்துங்கள். பெரியோர்களிடம் உங்களுக்கு செல்வாக்கு ஏற்படும். குடும்பத்தில் அமைதி நிலவும். பணத் தட்டுப்பாடு அவ்வளவாக இராது. உங்களின் எந்த முடிவும் அனேகமாகச் சரியானதாகவே அமையும் அதற்காகத் திடீர் முடிவு எடுக்க வேண்டாம்.

நல்ல நாட்கள்: 14, 16, 20, 22

எச்சரிக்கை நாட்கள்: 23, 24

கடகம் (ஜூன் 21-ஜூலை 20)

பெரியோர்களின் ஆதரவும், ஒத்துழைப்பும் கிடைக்கும். உங்கள் நண்பர்களின் உதவி இருந்தாலுங்கூட சுயமுயற்சியினாலேயே நீங்கள் வருமானப் பெருக்கத்திற்கு 'வழி தேடுவீர்கள். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை. கடினமாக உழைக்க வேண்டியிருந்தாலும் ஓய்வெடுப்பதிலும் அக்கறை செலுத்துங்கள்.

நல்ல நாட்கள்: 17, 18, 20

எச்சரிக்கை நாட்கள்: 22, 23

சிம்மம் (ஜூலை 21 - ஆக. 21)

விடா முயற்சி வெற்றி தரும் என்பதுபோல நீங்கள் எடுத்த காரியங்களில் தொடர்ந்து ஈடுபடுங்கள், வெற்றி கிடைக்கலாம். கடிதப் போக்குவரத்து மூலம் நல்ல சேதி வரும். பொருளாதார நிலை சுமார்தான். நண்பர்களின் ஆலோசனைகள் சில சமயங்களில் உங்களுக்குப் பாதகமாக அமைந்தாலும் அமையலாம். என்றாலும் அவர்களால் நன்மைகளும் கிடைக்கும் என்பதை மறுப்பதற்கில்லை.

நல்ல நாட்கள்: 14, 17, 20

எச்சரிக்கை நாட்கள்: 23, 24

கன்னி (ஆக 22-செப். 22)

கூட இருப்பவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும் என்பதால், தங்களுக்குக் கூட்டு முயற்சிகள் பலனளிக்கும். வாகனப் போக்குவரத்தால் நன்மை உண்டு. இயந்திரம் சம்பந்தப்பட்ட வேலைகளில் ஈடுபட்டிருக்கும்போது கவனம்தேவை. அனுபவசாலிகளின் ஆலோசனைகளைக் கொண்டு நீங்கள் ஏற்கனவே உள்ளத்தில் திட்டி வைத்திருக்கும் திட்டங்களைச் செயல்படுத்தலாம்.

நல்ல நாட்கள்: 14, 16, 20

எச்சரிக்கை நாட்கள்: 18, 12

துலாம் (செப் 23-அக். 22)

உங்களுக்கு எதிலும் கொஞ்சம் சோம்பல் தட்டுவதுபோல் தோன்றுகிறதே ஏன்? சுறுசுறுப்பாகச் செயல்பட முயலுங்கள். கடிதப் போக்குவரத்தில் குறிப்பாகப் பணம் சம்பந்தப்பட்ட கடிதங்களில் கையெழுத்திடுவதில் கவனமாக இருங்கள். மற்றவர்களுடன் உங்களுக்குள்ள தொடர்பு மேம்படும். தொலை தூரத்திலிருந்து நல்ல சேதி வரும்.

நல்ல நாட்கள்: 14, 15, 18,21

எச்சரிக்கை நாட்கள்: 23, 24

விருச்சிகம் (அக் 23- நவ. 22)

வீண் வாக்குவாதம் செய்ய நேரும். தவிர்த்துக் கொள்ளுங்கள். எதற்கு வழியில் கிடக்கும் கோடரியைக் காலில் போட்டுக் கொள்ள வேண்டும்? இம்மாதத் துவக்கத்தில் இருந்த வேலைப்பளு படிப்படியாகக் குறைந்து வருகிறதல்லவா? மற்றவர்களின் நலன்களுக்காக சிறிது அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். அதற்கென்ன, ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வதுதானே முறை!

நல்ல நாட்கள். 14, 16, 20, 22

எச்சரிக்கை நாட்கள்: 12,17,24

தனுசு (நவ. 23 - டிச. 20)

சக ஊழியர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். மேலதிகாரிகளால் உதவி கிடைக்காவிட்டாலும் தொல்லை இருக்காது. செய்தொழில் மேன்மை தரலாம். மருத்துவமனைக்கு நீங்கள் போகவேண்டியிருக்கும். மற்ற நோயாளிகளைப் பார்க்க அல்ல; உங்கள் நோயைத் தீர்க்கவே!

நல்ல நாட்கள்: 16, 20

எச்சரிக்கை நாட்கள்: 12, 15

மகரம் (டிச 21- ஜன. 19)

ஒண்டிக் கட்டையாய் இருந்தால் இருவராக வாய்ப்புண்டு. அதாவது திருமணம் நிச்சயிக்கவோ, பெண், அல்லது மாப்பிள்ளை பார்க்கவோ ஏற்ற நேரம். செய்தொழிலில் மாற்றம் ஏற்பட வழியுண்டு. புதிய நண்பர்களின் உதவி கிடைக்கும். ஆடம்பரச்செலவுகளைத் தவிருங்கள். சிக்கனமே சிறப்பான வாழ்க்கையின் திறவுகோல்!

நல்ல நாட்கள்: 14, 16, 20

எச்சரிக்கை நாட்கள்: 12, 23

—தஞ்சை நகுலன்

திருமுறைத் தொண்டர்

நாளும் தமிழ் வளர்த்த ஞான சம்பந்தருக்கு ஞானப்பால் ஊட்டிய அன்னை உமாதேவியைப் போல, சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் தேவாரப்பால் ஊட்டி வருபவர் தொண்டர் திலகம் மா. சண்முகம் அவர்கள். கோலாலம்பூரைச் சுற்றிலும் பதினொரு இடங்களில் தேவார வகுப்புக்களை நடத்தி வருகிறார்.

நேற்றுப்பிறந்த குழந்தைகூட "மச்சானைப் பார்த்திங்களா?" என்று சினிமாப் பாடலைப் பாடும் காலம் இது. ஆகவே இன்றையச் சிறுவர்களைத் தேவாரப் பாடல் பாட வைப்பது என்பது அத்துணை சுலபமா என்ன? நாம் வியக்கிறோம். ஆனால் சண்முகம் அவர்களுக்கு அது வியப்பாகவும் இல்லை; கடினமாகவும் இல்லை.

"தேவாரப் பாடல்களுக்கென்று சில பண்முறைகள் உள்ளன. என்றாலும் குழந்தைகளிடம் அந்த முறைகளைப் பின்பற்றினால் தேவாரப் பாடல்களைப் பயிலச் சிறுவர்கள் தயங்கக்கூடும்.

துவக்கத்தில் அவர்களுக்கேற்ற வகையில் எளிமையான இசையில் பாடல்களைச் சொல்லித் தருகிறோம்; பிறகு படிப்படியாகத் தேவாரப் பண் முறையைக் கற்றுத் தருகிறோம்" என்கிறார் தொண்டர் திலகம் மா. சண்முகம்.

12 வயதிலேயே...

திரு. சண்முகம் அவர்களுக்குப் பன்னிரண்டு வயதிலேயே சைவத் திருமுறைகளைப் பாடுவதில் ஈடுபாடு உண்டானது. பினாங்கைச் சேர்ந்த திருவாளர்கள் பொன்னம்பலமும் சுப்பையா பாகவதரும் தேவாரத்தை முறையாகப் பாட அவருக்கு வழி காட்டியவர்கள்.

"இந்தத் தேவார வகுப்புகளை எப்போது முதல் நடத்தி வருகிறீர்கள்?"

"ஆங்காங்கு சிறு அளவில் பல ஆண்டுகள் இந்த வகுப்புகளை நான் நடத்தியிருந்தாலும் 1961ஆம் ஆண்டில் கோலாலம்பூர் திருவருள் தவநெறி மன்றம் அமைக்கப்பட்ட பிறகுதான் அந்த மன்றத்தின்மூலம் இந்த வகுப்புகள் இப்படிப் பரவலாக நடைபெற்று வருகின்றன."

திருமுருக கிருபானந்தவாரியார் மலேசியாவுக்கு வருகை மேற்கொண்டிருந்த அந்த நேரத்தில், வாரியாரின் வாழ்த்துக்களோடு இம் மன்றம் துவக்கப்பட்டது என்பது இங்கு நினைவுகூரத்தக்கது.

"சமயத் தொண்டுகள் பல இருந்தும் தாங்கள் தேவார வகுப்பை முக்கியமாக நடத்துவதற்குச் சிறப்பான காரணம் உண்டா?"

"தேவாரம் திருவாசகம் உள்ளிட்ட பன்னிரு திருமுறைகள் சைவ சமயத்திற்கு ஆதாரமான நூல்கள். இவற்றில் சிறிதளவேனும் பயிற்சியுடைய ஒருவனால்தான் நம் சைவ சமயத்தைப்பற்றி ஓரளவுக்கேனும் உணரமுடியும். நம் குழந்தைகளுக்குத் தேவாரப் பாடல்களைப் பயிற்றுவிப்பதன் மூலம் இது சாத்தியமாகும்.

நமது தலையாய நோக்கம் குழந்தைகளுக்குச் சமய ஈடுபாட்டை உண்டாக்குவதே. இந்த ஈடுபாட்டைஉண்டாக்கச் சொற்பொழிவைக் காட்டிலும் அதாவது தேவார விளக்கவுரையைக் காட்டிலும் இசை அதிகமான பலனைத் தரும். இதுவே தேவார வகுப்பு நடத்துவதில் நாங்கள் தீவிரம் காட்டுவதன் காரணமாகும்."

ஆயிரம் குழந்தைகள்

"கோலாலம்பூரைச் சுற்றிலும் பதினொரு இடங்களில் வகுப்பு நடத்துகிறீர்களே, அவற்றில் எத்தனை பேர் பயில்கின்றனர்?

"சுமார் ஆயிரம் பேர் கலந்து கொள்கிறார்கள். இதுதவிர சிங்கப்பூர் லாபுவான், தைப்பிங், கோலக்கங்சார் போன்ற இடங்களிலெல்லாம் ஒலிப்பதிவு நாடாக்களின் மூலம் வகுப்பு நடத்துகிறோம். ஆகமலேசிய முழுவதிலும் மாணவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட மூவாயிரமாகும்"

போதிக்கும் அளவுக்குத் தேர்ச்சி பெற்றவர்கள் பெருகியதும் நாளடைவில் தேசிய ரீதியில் இத்தகைய வகுப்புகள் விரிவுபடுத்தப்படுமென் மென்றும் திரு. சண்முகம் குறிப்பிட்டார்.

திருமந்திர வகுப்பு, பிரார்த்தனைக் கூட்டங்கள், சிறப்புப் பிரார்த்தனைக் கூட்டங்கள், சமயச் சொற்பொழிவுகள் சமயப்பாடம்-மற்றும் பாடல் போட்டிகள், குரு பூசை, சமய நூல் வெளியீடு, இலவச எல். சி. இ. வகுப்பு, ஆங்கிலம் மட்டுமே படித்த தமிழ் மாணவர்களுக்குத் தமிழ் வகுப்பு போன்ற பணிகளையும் திரு சண்முகம் தலைவராக உள்ள திருவருள் தவநெறி மன்றம் செய்து வருகிறது.

இந்தத் தலைமுறையில் இல்லாவிட்டாலும் அடுத்த தலைமுறையினரிலாவது ஒவ்வொருவரும் திருமுறைகளைத் தெரிந்துகொண்டிருக்க இந்தத் தேவார வகுப்புகள் வலுவான அடிக்கல்லாக இருக்கும் என்ற நம்பிக்கை திரு. சண்முகம் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்த போது எனக்கு ஏற்பட்டது. மாணவர்களிடமிருந்து எவ்விதக் கட்டணமும் வாங்காமல் இலவசமாக இந்த வகுப்புக்கள் நடத்தப் படுகின்றன.

சண்முகனாருக்கு வயது அறுபத்தொன்பது ஆகிறது. இந்த வயதில் ஆங்காங்கே பல இடங்களுக்குச் சென்று இப்படிச் சுயத்தொண்டு புரிந்துவரும் அவருக்குப் பொது மக்கள் சார்பில் 1970-ஆம் ஆண்டு பொன்னாடை போர்த்தப்பட்டுத் "தொண்டர் திலகம்" என்னும் விருதும் வழங்கப்பட்டிருப்பது பொருத்தமானதுதான். நாளும் திருமுறைகளைப் பரப்புவதால் "தொண்டர் திலகம்" என்பதோடு திரு சண்முகனாரைத் "திருமுறைத் தொண்டர்" என்றும் இனி அழைக்கலாமே!

[அட்டைப்படம்: தேவார வகுப்பு முதன் முதலில் துவக்கப்பட்ட கோவில்களுள் ஒன்றான செந்தூல் சுப்பிரமணியர் கோவிலில் தேவார வகுப்பு மாணவர்களும், திருமுறைத் தொண்டர் திரு. சண்முகனாரும்]

–பாதாசன்

கண்ணதாசன் சொன்னவை

ஜனனம் தகப்பனின் படைப்பு, மரணம் இறைவனின் அழைப்பு, இடைப்பட்ட வாழ்க்கை அரிதாரம் பூசாத நடிப்பு.

நல்ல பெண்ணைத் தேர்ந்தெடுப்பதில் ஜாதி, மதம் பார்ப்பது பயனற்றது.


அறிவு குறைவானவர்களுக்கே ஆணவம் வருகிறது.

நல்ல பெண்ணை மணந்தவன் முட்டாளானாலும் அறிஞனாகிவிடுகிறான். எப்போதும் அவன் முகம் பிரகாசமாயிருக்கிறது.

வீழ்ந்தவன் வீழ்ந்துகொண்டே இருந்து, வாழ்ந்தவன் வாழ்ந்து கொண்டே இருந்தால், இறைவனின் இயக்கம் சரிவர இயங்கவில்லை என்று பொருள்.

ஏற்றம் என்பது இறைவன் தரும் பரிசு, இறக்கம் என்பது அவன் செய்யும் சோதனை.

அனுப்பியவர்:
குமாரி ராஜம் தண்ணிமலை
கோலக்கெட்டில்


கற்பின் செல்வி
கண்ணகி
கதை: சரோ
படம்: பானு
6
மதுரைபோகும் வழியில் இருவரும் கவுந்தி அடிகளைச் சந்திக்கின்றனர்
நீங்கள் இப்படித் தனியாக மதுரைக்குச் செல்லக் காரணம் என்ன?
அடிகளே, பொருள் சம்பாதிக்கும் விருப்பத்தில் செல்கிறோம்
நானும் மதுரைக்கு அறவுரைகளைக் கேட்க வருகிறேன் உங்களுடன் வருகிறேன்
வழியில் ஒருநாள்....
கண்ணகி தாகம் எடுக்கிறதா? நீயும் அடிகளும் இங்கேயே இருங்கள். நான் தண்ணீர் கொண்டுவருகிறேன்
நீர்தேடப்போனஇடத்தில் கோவலன், மாதவியால் அனுப்பப்பட்ட கோசிகன் என்பவனைச் சந்திக்கிறான்
ஐயா, இந்த ஓலையை மாதவி தங்களிடம் தரச் சொன்னாள்
ஓலையைப்படிக்கிறான் கோவலன்........
"சுவாமி, என்னை மன்னியுங்கள். பெற்றோரை மறந்து, இரவில் குலமகள் கண்ணகியோடு மதுரைக்குச் சென்றுவிட்டீர்களே. அதற்கு நான் செய்த தவறுஎன்ன? அதை அறியாமல் என் இதயம் நின்றுவிடும் போல் இருக்கிறது. எனது துயரை நீக்குங்கள்
மாதவி குற்றம் செய்யாதவள். நான் தான் குற்றம் செய்தவன்
கோசிகா, இந்த ஓலையின் வாசகங்கள் எனது நிலைமையைத் தாய் தந்தையருக்குப் புரிய வைக்கவும் பொருத்தமானவை. ஆகையால் இதனை அவர்களிடம் சேர்த்துவிடு
மதுரையில் கோவலனும் கண்ணகியும் மாதரியின் வீட்டில் தங்கிவருகின்றனர் அங்கே மாடலன் என்ற முனிவர் வருகின்றார்
கோவலா, மாதவிக்குப் பெண் குழந்தை பிறந்து இருக்கிறது. அந்தக் குழந்தைக்கு மணிமேகலை என்று பெயர்!
தொடரும்

பால்மரக் காட்டினிலே

அகிலன்

6. வாழத் துடித்த துடிப்பு

கணேசன் வீட்டுக்கு முன்னால் இருந்த தெருவில் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு பாலன் நடந்தபோது "அத்தான்!" என்று அழைத்தபடியே எதிர்ப்பக்கத்து லயத்து வீட்டிலிருந்து வெளியே விரைந்து வந்தாள் கண்ணம்மா. அவளை அவன் அங்கே சிறிதும் எதிர்பார்க்கவில்லை. வியப்போடு விழித்துப் பார்த்தான்.

"நீங்க இங்கே வந்திருக்கிங்கன்னு சொன்னாங்க. வீட்டுக்கு வராமலேயே போயிட்டா என்ன செய்யறதுன்னு சுந்தரி வீட்டில் காத்துக்கிட்டிருந்தேன். இப்பல்லாம் உங்களுக்குச் சங்க வேலை ரொம்ப அதிகமாப் போச்சு. இங்கே வந்தாலும் வீட்டுக்கு வர்ரதில்லே" பேசிக்கொண்டே கண்ணம்மா அவனோடு தன் வீட்டுக்கு நடந்தாள்.

"இனிமே சங்கத்துக்கே இங்கே வேலை இல்லை."

கண்ணம்மாவுக்கு இருந்த உற்சாகத்தில் அவன் பேசியதைக் காதில் அவள் சரியாகப் போட்டுக்கொள்ளவில்லை. தன்னுடைய அத்தான் அந்த வட்டாரத்து இளைஞர்களிடையே ஒரு முக்கியமான மனிதனாக உயர்ந்து வருவதாக அவள் தனக்குள் நினைத்துக்கொண்டிருந்தாள். தொடங்குவதற்கு முன்னதாகவே சங்கம் கலைக்கப்பட்ட செய்தி ஒன்றும் அவளுக்குத் தெரியாது.

கண்ணம்மாவின் வீட்டில்அவள் அம்மா தங்கமும் அப்பா பழனியுமே இருந்தார்கள். எப்போதும் வீட்டில் அடைந்து கிடக்கும் அக்காள் காமாட்சிகூட எங்கோ தன் தோழியைத் தேடிக்கொண்டு போயிருந்தாள். தங்கத்துக்குக் கீழே சமையல் வேலை; பழனி விறகுக் கட்டைகளைப் பிளந்துகொண்டிருந்தான்.

மேல் வீட்டுப் பகுதிக்குப் பாலனை அழைத்துக்கொண்டு சென்றாள் கண்ணம்மா. சற்று நேரத்துக்கெல்லாம் பழனியும் தங்கமும் தங்கள் வேலைகளை விட்டுவிட்டுப் பாலனைப் பார்க்க மேலே வந்தார்கள். அவனுக்குக் காபி போடுவதற்காக அடுப்படிக்கு இறங்கி வந்தாள் கண்ணம்மா.

கூட்டுறவு முயற்சியின் தோல்விப் படலத்தைப் பற்றிப் பழனியிடம் சொல்லிவிட்டு, "திடீர்னு நம்மவங்க இப்படி நல்ல முயற்சியிலே பின் வாங்கிடுவாங்கன்னு நான் நினைக்கவே இல்லை" என்றான்.

"எனக்கு என்னவோ ஆரம்பத்திலேருந்தே ஒரு சந்தேகம் இருந்தச்" என்றான் பழனி; "தோட்டம் நல்லாப் பால் கொடுக்கிற தோட்டம்; குறைச்ச விலைக்கு வித்துட்டுப் போகப் போறான் வெள்ளைக்காரன்; துண்டு போட்டு வாங்கப் போற முதலாளிங்களோ அளவுக்கு மீறின சாமர்த்தியசாலிங்க. எல்லாம் அவங்க செய்திருக்கிற வேலைதான்; அவங்க கலைச்ச கலைப்புத்தான்; கமுக்கமா இருந்து திடீர்னு கவுத்துட்டாங்க."

"தங்களோட எதிர்காலத்தைப் பத்தி நம்மவங்க நினைச்சுப் பார்க்க வேண்டாமா?"

"இந்தத் தோட்டத்தைச் சேர்ந்த முக்கியமானவங்களையெல்லாம் முதலாளிங்க முதல்லே தங்களோட கைக்குள்ளே ரகசியமாய்ப்போட்டுக்கிட்டாங்க. பணம் பாதாளம் வரையிலே பாயுமாம். அவுங்ககிட்ட பணம் இருக்கு; பாஞ்சிடுச்சு. சங்கம் ஏற்படாமல் செய்திட்டா, அப்படிச் செய்யறவுங்களுக்கு இங்கேயே வேலை போட்டுத் தர்ரதாச் சொன்னாங்களாம். தங்களோட காரியம் நடந்திட்டா, தோட்டம் கைக்கு வந்திட்டா, பிறகு பல பேரோட காலைவாரிவிடப் போறாங்கன்னு எனக்கு நல்லாத்தெரியுது. ஆனால் மத்தவங்களுக்குத் தெரியணுமே?"

"ஏன் சும்மா சும்மா அதையே பேசி மனசைக் குழப்பிக்கிட்டிருக்கிங்க?" என்று குறுக்கிட்டாள் தங்கம்மாள்; "மாசம் பொறந்தா நாம இந்தத் தோட்டத்தைவிட்டு வெளியே போறது நிச்சயங்கிறதை நினைச்சுக்கிட்டு. அடுத்தாப்பிலே நடக்கறதைப் பாருங்க."

"என்ன செய்யச் சொல்றே?" என்றான் பழனி.

நாம போய் அவங்க வீட்டில்ல பேசிட்டு வந்த விஷயத்தைத் தம்பியை நேரா வச்சுக்கிட்டே சொல்லிடுங்க."

"அண்ணன் தான் கோலாலம்பூரிலே இருந்து அப்படிக் கடுதாசி எழுதிட்டார். அவர் இப்படி நடந்துகிட்டதைத்தான் என்னாலே நம்பவே முடியலே" என்றான் பாலன்.

பாலனின் அண்ணன்முருகனுக்கு அவன் அப்பா வீரப்பன் எழுதுவது போல் பாலனே எழுதியிருந்தான். வீரப்பன் சொல்லித்தான் எழுதினான். எப்படியாவது கோலாலம்பூரிலிருந்து உடனே புறப்பட்டு வரும்படியும், வந்து காமாட்சியைக் கல்யாணம் செய்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யும்படியும் குறிப்பிட்டிருந்தான். நோட்டீஸ் விவரம்பற்றியும் விரிவாக விளக்கியிருந்தான். பழனியின் குடும்பத்துக்கு உதவ வேண்டிய பொறுப்பு அவனுக்கும் உண்டு என்பதை வலியுறுத்த அவன் தவறவில்லை. கடிதம் சென்ற நான்கே நாட்களில் பதில் வந்துவிட்டது. தனக்கு வேலைகள் இருப்பதால் வர முடியாதென்றும், காமாட்சிக்கு வேறு மாப்பிள்ளை பார்க்கும்படியும் முருகன் கச்சிதமாகப் பதில் அனுப்பி விட்டான்.



"முருகன் தன்னைக் கைவிட்ட சேதி காதிலே விழுந்ததிலேருந்து காமாட்சிக்கு அழுது அழுது முகம் வீங்கிக் கிடக்கு" என்றாள் தங்கம். "காமாட்சி இஷ்டப்பட்டா உன்னோட சின்ன அண்ணன் முத்துவுக்குக் கட்டிக்கலாம்னு உங்கப்பா சொல்றார். அவ வாயைத் திறந்து பதிலே பேச மாட்டேங்கறா. அவளை முத்துவுக்கும் கண்ணம்மாளை உனக்கும் கட்டி வச்சிட்டா, பிறகு எங்க பாடு எப்படி ஆனாலும் ஆயிட்டுப் போகுது. நாங்க எங்கேயாவது போய் எப்படியாவது பிழைச்சுக்கறோம்; இல்லே, ஆத்திலே குளத்திலே விழுந்து சாகிறோம்" என்றாள் பாலனின் அத்தை.

"அப்படியெல்லாம் பேசாதிங்க அத்தை!" என்று அவளைத் தேற்ற முயன்றான் பாலன்.

"வேறே என்ன பண்றது, சொல்லு? தெரியாத்தனமாப் பொம்பளைப் புள்ளைங்களைப்பெத்து வளர்த்தாச்சு. கூரைகூட இல்லாமல் நாங்க தெருவுக்குப் போனா வயசு வந்த இந்த ரெண்டு பொம்பளைப் புள்ளைங்களை வச்சிக்கிட்டு நான் என்ன செய்வேன்? எப்படி அவங்களைக் காப்பாத்துவேன்?"

பெற்ற மனம் பித்தாகிப் பேதலித்து அழுது புலம்பத் தொடங்கிவிட்டது. அவள் பேச்சிலிருந்து வெளிப்பட்ட பயங்கரமான உண்மைகள் பாலனைக் கதிகலங்கச் செய்தன. தொழிலாளர் குடும்பங்கள் தெருவுக்கு விரட்டப்பட்டால் அவர்களில் ஆண்கள் எங்கோ எப்படியோ அலைந்து திரியலாம்; அல்லது இடம் கண்ட இடத்தில் முடங்கிக் கொள்ளலாம். பெண்கள்? அதிலும் வயது வந்த துணையில்லாப் பெண்கள்?

" நினைக்கும்போதே தலை சுற்றியது பாலனுக்கு. அதே நிலைக்குத்தான் இப்போது கண்ணம்மாவும் தள்ளப்பட்டிருக்கிறாள்!

"நீங்க ஒண்ணுக்கும் கவலைப் படாதிங்க, அத்தை. நம்மைப் போல நிலையிலே இருக்கிறவங்களுக்கெல்லாம் நாள்-நட்சத்திரம்-கிழமை தேவையில்லை. எப்ப வேணுமானாலும் கல்யாணத்தை வச்சுக்கலாம். ஆயிரக்கணக்காச் செலவு பண்ணி ஊர் கூட்டிக் கல்யாணம் பண்ணினாத்தான் கல்யாணமா என்ன?"

"ராஜா, என்னோட நெஞ்சிலே பால் வார்த்திட்டேடா, ராஜா!" என்று உணர்ச்சி வயப்பட்டு, பாலனைத் தன் உளமார வாயார வாழ்த்தினாள் தங்கம்மாள். அவனுடைய சொந்த அண்ணன் முருகன் செய்துவிட்ட நம்பிக்கை மோசத்தால் இடிந்து போயிருந்தவளுக்குப் பாலனின் சொற்கள் புத்துயிரூட்டின.

பழனிக்குத் தன் காதுகளையே நம்பமுடியவில்லை. பேச்சை உறுதிப்படுத்த விரும்பியது போல், "அப்படீன்னா ரெண்டு கல்யாணத்தையும் ஒண்ணாவே இப்ப முடிச்சிடலாம்னு சொல்றே?" என்றான்.

"அண்ணன் முத்துவைப் பொறுத்தவரையிலே, காமாட்சியைக் கல்யாணம் செய்துக்கச் சம்மதிச்சிருக்கான். காமாட்சியோட மனசு தெரிஞ்சால் போதும். அதே நாளிலே எனக்கும் கண்ணம்மாவுக்கும் கல்யாணத்தை வச்சிடலாம். செலவில்லாம சிக்கனமாச் செய்திட்டால் சரிதான்."

வெளிவராந்தாவில் மறைந்து நின்றபடி இந்தப் பேச்சைக் கேட்ட கண்ணம்மாவுக்கு இதயம் ஆனந்தப் பெருக்கால் நிரம்பி வழிந்தது. தன்னைப் பாலன் அன்போடு அணைத்தபடி ஆகாயத்தில் மேகங்களுக்கிடை-யே பறந்து செல்வது போன்ற பரவச உணர்வால் அவள் ஒருகணம் திக்குமுக்காடிப் போனாள். முன்பின் அறிவிப்பின்றித் திடீரென்று தனக்கு நல்ல காலம் பிறந்துவிட்டதுபோல் தோன்றியது அவளுக்கு.

துள்ளல் நடையோடு உள்ளே சென்று காபியை அவளிடம் கொடு-த்துவிட்டு, தன் பெற்றோர் அருகில் இருப்பதையும் சட்டை செய்யாமல், அவன் முகத்தையே தன் கண்களால் விழுங்கத் தொடங்கினாள்.





"உன்னைப் பெத்தவங்ககிட்டே இதைப்பத்திப் பேசியாச்சா?" என்று கேட்டாள் கண்ணம்மாவின் தாய்.

"நீங்கதான் முன்னாலேயே பேசியிருக்கிங்க. அவங்களும் நீங்களும் வருஷக் கணக்காப் பேசின பேச்சு இது. இதைத் தள்ளிப்போட முடியாதபடி ஒரு பெரிய நெருக்கடி நமக்கு முன்னாலே முளைச்சிருக்கு. அவசரமாச் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் வந்திட்டதாலே, இனிமேல் நாம காலங் கடத்தப்படாது. வீட்டுக்குப் போனவுடனே அம்மா அப்பா ரெண்டு பேர்கிட்டேயும் பேசுறேன். நீங்களும் காமாட்சியைக் கேட்டுக்கிட்டு வாங்க."

"காமாட்சிக்கும் இஷ்டந்தான்" என்றாள் கண்ணம்மா; "முருகன் மாமாவோட போக்கைப்பத்தி நான் விவரமா அவகிட்ட பேசிட்டேன்; முத்து மாமாவைக் கட்டிக்கறதுக்கு அவ ஒண்ணும் தடங்கல் சொல்ல மாட்டா" என்றாள்.

பாலன் அப்படியே தன் அக்காள் லட்சுமியை எட்டிப் பார்த்துவிட்டு, அங்கிருந்தபடியே தன் தோட்டத்துக்குப் போவதாகச் சொன்னான். பெரியவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு கண்ணம்மாவைப் பார்த்தான்.

"இருங்க, லட்சுமி அத்தாச்சி வீட்டுக்கு நானும் உங்களோடு வர்றேன்" என்று அவனோடு சேர்ந்து புறப்பட்டாள் கண்ணம்மா. அவளைப் பொறுத்தவரையில் அவன் பேச்சைக் கேட்ட அந்த நொடியிலிருந்தே அவள் பாலனின் மனைவியாகிவிட்டாள்.

லட்சுமியும் குழந்தைகளும் வீட்டில் இருந்தார்கள். லட்சுமியின் கணவன் கூட்டுறவுச் சங்கத்துக்கு எதிராக வேலை செய்தவர்களில் ஒருவன். சங்கத்தைக் கலைக்கும் வேலையில் தன் சொந்த மைத்துனன் பாலனுக்கு எதிராக அவன் மும்முரமாக வேலைசெய்து வந்தான்; மைத்துனன் அங்கே வருவது தெரிந்து அவன் முகத்தில் விழிப்பதற்கு வெட்கப்பட்டுக் கொண்டே அவன் வீட்டிலிருந்து நழுவிவிட்டான்.

கருப்பையாவைப் பற்றித் தன் தங்கை லட்சுமியிடம் கேட்டான் பாலன்.

"இந்த ஒரு வாரமா அவர் சுயநினைவோட இங்கே வர்றதே இல்லை. கையிலே காசும் தாராளமாகப் புழங்குது. "ஏன் இப்படிப் பாலனுக்கு எதிரே வரிஞ்சு கட்டுறீங்க?" ன்னு கேட்டா, "அப்பத்தான் இதே தோட்டத்திலே எனக்கு வேலைபோட்டுத் தருவாங்க"ன்னு சொல்றார். எனக்கு என்னவோ நம்பிக்கையில்லை. குடிக்கிறதுக்குக் காசு தாராளமாகக் கிடைக்கிறதுதான் மிச்சமாயிருக்கும்."

"எப்படியோ வேலை கிடைச்சால் சரி; சில பேருக்காவது கிடைச்சால் அவங்களோட புள்ளை குட்டியாவது பாதுகாப்போடு இருக்கும்" என்றான் பாலன்.

ஒருபுறம் கணவனுக்கும் மறுபுறம் தம்பிக்கும் இடையில் அகப்பட்டுக்கொண்டு தவித்தாள் லட்சுமி. தொடக்கத்திலேயே அவளைச் சங்கத்தில் சேரவேண்டாம் என்று பாலன் சொல்லிவிட்டான். தன்னால் அவர்கள் குடும்பத்துக்குள் ஒரு பிளவு ஏற்படுவதை அவன் விரும்பவில்லை.

லட்சுமியின் வீட்டிலிருந்து பாலனும் கண்ணம்மாவும் புறப்படும்போது நேரமாகிவிட்டது: அவனோடு தோட்டத்து முகப்பு வரையிலும் நடந்துவந்து அவனை வழி அனுப்புவதாய் அடம் பிடித்தாள் கண்ணம்மா. மாலை மயங்கி, ரப்பர் மரக்காட்டை இருள் தழுவுகிற நேரத்தில், அவர்கள் ஒன்றாகச் செம்மண் சாலையிலே நடந்தார்கள். பாலன் தன் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வந்தான். அவள் மௌனமாக அவன் அருகில் நடந்து வந்தாள்.

தோட்டத்தின் வெளியே மேட்டுக்குப் போகிற பாதையை ஒட்டினாற்போல் மாரியம்மன் கோவில் இருந்தது. தோட்டத்துக்குத் தோட்டம் அங்கே மாரியம்மன் கோவிலையோ முனியாண்டி கோவிலை-யோ காணலாம். கிராமத்துக் கோவில் போன்ற சின்னஞ்சிறு கோவில், கோபுரத்தின் கீழே கருவறை; எதிரே நீண்ட கூடம்; வாயில் முகப்பு. இதுதான் கோவில்.

"இன்னிக்கு உங்க வாயிலே நல்ல வார்த்தை வந்திருக்கு. போய் மாரியம்மனைக் கும்பிட்டுட்டுப் போகலாம்" என்று அவனைக் கோவிலுக்கு அழைத்தாள் கண்ணம்மா.

சைக்கிளைப் பாதையோரம் நிறுத்திவிட்டு அவன் அவளைப் பின்பற்றினான். கோவில் வாசல் பூட்டிக் கிடந்தாலும் கம்பிக் கதவின் வழியே உள்ளே விளக்கு வெளிச்சத்தில் அம்மனின் திருஉருவம் தெரிந்தது. இருவரும் மாரியம்மனைக் கையெடுத்துக் கும்பிட்டார்கள் நிழலுருவங்கள் போல் அங்கேயே சற்று நேரம் மௌனமாக நின்றார்கள்.

தோட்டத்துக் கல்யாணங்கள் பலவழக்கமாக அந்த மாரியம்மன் கோவிலில்தான் நடக்கும். தங்கள் கல்யாணமும் அப்படியே எவ்விதத் தடங்கலுமின்றி நடைபெற வேண்டுமென்று அம்மனை வேண்டிக்கொண்டாள் கண்ணம்மா.

கோவிலை விட்டுத் திரும்பிவந்து அவர்கள் மேலே நடந்தார்கள். தொலைவில் கேட்டருகில் நின்ற காவற்காரனைத் தவிர அங்கு யாருமே தென்படவில்லை. திரும்பிய பக்கமெல்லாம் மரங்கள்; இருளின் ஆதிக்கத்துக்கு நல்வரவு கூறிக் கொண்டிருந்தன மரங்கள்.

"அப்படீன்னா, நான் போயிட்டு வாரேன்" என்று சைக்கிளை ஒரு பக்கம் நிறுத்தியபடியே அவளை ஏறிட்டுப் பார்த்தான் பாலன்.

"இப்பவே என்னையும் உங்க வீட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போயிடறீங்களா?"

பாலன் பதிலளிக்கவில்லை, மெள்ள அவள் தோளைப் பற்றி அருகில் இழுத்தான். வலது கரத்தால் அவள் முகத்தை உயர்த்தி அவள் கண்களை ஊடுருவினான். அவளுடைய மூச்சுக் காற்றின் வெப்பத்தை அவனால் நன்றாக உணர முடிந்தது.

அவன் முகம் மேலும் குனிய முயன்றது. அவள் தடுக்க விரும்பாவிட்டாலும், பெண்ணுக்கே உரிய நாணத்தால், "நான் எங்கே போயிடப் போறேன்? கல்யாணம் ஆன பிறகு ஒருநாள் கூட இங்கே இருப்பேன்னு நினைக்கிறீங்களா?" என்றாள்.

சட்டென்று நிதானித்துத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான் பாலன். மிகவும் மென்மையான உணர்வுகள் கொண்டவன் அவன். கண்ணம்மா அப்படிப் பேசினாள் என்றாலும், தன்னைத் தடுக்க மாட்டாள் என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். இருந்தும்கூட அவன் பொறுத்திருக்க முயன்றான்.

எதற்காக அவனிடம் அப்படிப் பேசினோம் என்று கலங்கினாள் கண்ணம்மா. "என் மேலே கோபமா உங்களுக்கு?"

"கொஞ்சங்கூடக் கோபமில்லே; நீ சொல்றதும் நியாயந்தான். கழுத்திலே ஒரு கயிற்றைப்போட்டுட்டா, அப்புறம் அப்படியே உன்னை அலாக்காத் தூக்கிட்டுப் போயிடமாட்டேனா?"

ரொம்ப நல்லவர் நீங்க; ரொம்ப ரொம்ப நல்லவர்!"

"நீ மாத்திரம் என்னவாம்?" செல்லமாக அவள் உதட்டில் தட்டிவிட்டு, அவளை விட்டுப்பிரிய மனமின்றி அவளிடம் விடைபெற்றுக் கொண்டான் பாலன்.

இருளோடு இருளாகக் கரைந்தபடி அவன் சைக்கிள் செல்லும் திசையைப் பார்த்துக்கொண்டு நின்றாள் கண்ணம்மா. பொழுதும் நன்றாக இருட்டிவிட்டது.

[தொடரும்]

மின்னும் கன்னம்

நீங்கள் குளித்த பிறகு உங்கள கன்னங்கள், முகவாய் முதலியவற்றை மேலும் கீழுமாக அழுந்தத் தேய்க்க வேண்டும். சூடுவரும்படி ஐந்து நிமிடங்கள் தேய்த்த பிறகு மீண்டும் நீரால் முகம் கழுவுங்கள். இப்படிச் செய்து வந்தால் கன்னங்கள மிருதுவாகவும் கவர்ச்சியாகவும் இருக்கும்.



நாகம்

'மொக்ஜாமோஸ்'

தலையை வெளியே நீட்டிப் பார்த்தது நாகம். அதன் இணையை எங்கும் காணவில்லை; சென்று வெகு நேரம் ஆகிவிட்டது; இன்னும் திரும்பி வரவில்லை. ஏதேனும் நடந்திருக்குமோ என்ற எண்ணம் தோன்றி அதை அலைக்கழித்தது.

செவ்வண்ணம் இழையோடிய இரண்டு முட்டைகளையும் நாகம் உடலால் சுற்றி வளைத்துக்கொண்டது. அதன் இணை பலமுறை சொல்லிவிட்டுப்போன கடமை அது. முட்டைகளைக் கவனமாகப் பாதுகாக்கவேண்டும். எதிரிகளின் கையில் அவை சிக்கிவிடாமல் காப்பாற்றவேண்டும். வாரிசைத் தருவதற்கு எஞ்சியுள்ளவை அந்த இரு முட்டைகள்தாம். அதன் இணையால் இனி முட்டையிட இயலாது. அதற்கு வயதாகிவிட்டது.

நாகம் முட்டைகளைப் பார்த்தது. அவற்றின் மேற்பாகம் மிகுந்த வழவழப்புப் பெற்றிருந்தது. இன்னும் இரண்டொரு நாளில் அவை பொரிந்துவிடும் என்பதற்கு அது அறிகுறி. இன்னும் இரண்டொரு நாளில் அதன் குஞ்சுகள் வெளியே வந்துவிடும். அவை கடைசி முட்டைகள்; அவைதாம் கடைசிக் குஞ்சுகள். முட்டைகளுக்கு ஏதேனும் நேரிட்டு விட்டால் அதற்கு வாரிசே இல்லாமல் போய்விடும். அப்படி ஒரு நிலைமை வருமென்றால் அதன் இணையால் அதைத் தாங்கிக் கொள்ளவே முடியாது. எனவே, மிகுந்த விழிப்போடு அவற்றைப் பாதுகாக்கவேண்டும்.

இதுவரை இறந்துபோன குஞ்சுகள் எத்தனையோ! மனிதர்களால் அடிக்கப்பட்டு இறந்தவை எத்தனை! கார்களால் நசுக்கப்பட்டவை எத்தனை! குஞ்சுகள் இறந்துபோகும் ஒவ்வொரு முறையும் அவற்றைக் கொன்ற மனிதர்களையும் கார்களையும் தேடிக்கொண்டு நாகத்தின் இணை பித்துப் பிடித்தாற்போல் அங்குமிங்கும் அலைந்துகொண்டிருக்கும். குஞ்சுகளின் வழியிலேயே தன் இணையும் இறந்துபோவதை நாகம் விரும்பவில்லை; எவ்வளவோ சமாதானம் சொல்லி அதைத் தேற்ற முயலும்.

இற்றுப்போன அடிமரத்தின் பொந்திலிருந்து மறுபடியும் தலையை வெளியே நீட்டிப் பார்த்தது நாகம். இணையை இன்னும் காணவில்லை. ஆனால் காய்ந்த சுள்ளிகளைப் பொறுக்கிக்கொண்டிருந்த ஒரு சிறுவனையும் சிறுமியையும் அது பார்த்துவிட்டது. சரேலெனத் தன் தலையை உள்ளுக்கிழுத்துக்கொண்டது. அவர்கள் தன்னைப் பார்ப்பதை அது விரும்பவில்லை. அவர்கள் எதிரிகள். தான் மறைந்திருக்கும் இடத்தைத் தன் எதிரிகள் தெரிந்துகொள்வதை நாகம் விரும்பவில்லை. அந்த எதிரிகள் தன்முட்டைகளை நாசமாக்கிவிடுவார்கள் என்பது அதற்குத் தெரியும்.

அவர்கள் மிக நெருங்கிவிட்டார்கள். நாகம் முட்டைகளைச் சுற்றி வளைத்து இறுக்கிக்கொண்டது. முட்டைகளைப் பாதுகாத்தே ஆகவேண்டும். முடியுமோ, முடியாதோ கடைசி வாரிசுகளைத் தரவிருக்கும் அந்த முட்டைகளைக் காப்பாற்றியே தீரவேண்டும். என்ன நடந்தாலும் சரி, உயிரே போனாலும் சரி, அவற்றைப் பாதுகாத்தே ஆகவேண்டும். உயிரை விட தன் வாரிசே நாகத்திற்கு முக்கியமாகப்பட்டது.

தலையைச் சற்று வெளியே நீட்டிப் பார்த்தது. பொந்துக்கு மிக அருகில் அவர்கள் வந்துவிட்டார்கள். உடனே தலையை உள்வாங்கிக்கொண்டது. அவர்கள் எதிரிகள்; சிறியவர்களோ, பெரியவர்களோ மனிதர்கள் இரக்க உணர்ச்சியே இல்லாதவர்கள். அவர்கள் எதிரிகள்; முட்டைகள் நிச்சயமாக அழிக்கப்பட்டுவிடும்.

நாகம் எதிர்பார்த்தபடியே நடந்தது. சிறுவன் ஒரு குச்சியால் பொந்தின் உள்ளே குத்தினான். குச்சி அதன் தலையில் பட்டது. என்றாலும் நாகம் சீறவில்லை; எதிர்க்கவில்லை. தன்னைப்பற்றி அது கவலைப்படவில்லை. முட்டைகளே முக்கியம். அவற்றைப் பாதுகாத்தே தீரவேண்டும். இறந்தாலும்



TEDUNG—MOKJAMOS

முட்டைகளைக் காப்பாற்றியே ஆக வேண்டும்.

சிறுவன் குத்திக்கொண்டே இருந்தான். பொந்திறுள்ளே என்ன இருக்கிறது என்று அறிந்துகொள்ளும் ஆவலோ, என்னவோ தொடர்ந்து குச்சியால் குத்திக்கொண்டே இருந்தான். குச்சி பட்டுப்பட்டு நாகத்தின் தலையில் இரத்தம் கசியத் தொடங்கியது. ஆனாலும் முட்டைகளைச் சுற்றி வளைத்திருந்த தன் உடலின் இறுக்கத்தை அது தளர்த்தவில்லை; மேலும் இறுக்கமாகச் சுற்றிக்கொண்டது. முட்டைகளின் மேல் குச்சி பட்டு விடாமல் இருக்க, அவற்றை உடலால் நன்கு வளைத்துக்கொண்டது. குச்சி பட்டு முட்டைகள் உடைந்துபோனால் வாரிசே இல்லாமல் போய்விடும்.

குச்சியால் குத்துவதைச் சிறுவன் நிறுத்தவில்லை. இப்படியே விட்டுவிட்டால் நிலைமை மேலும் மோசமாகிவிடும் என்பது நாகத்திற்குத் தெளிவாகிவிட்டது. முட்டைகள் நிச்சயமாக அழிந்துபோகும். அவற்றைக் காப்பாற்ற ஏதேனும் செய்தே ஆகவேண்டும். எதிரியால் முட்டைகள் நாசமாவதற்கு முன் ஏதேனும் செய்தே தீரவேண்டும். இனியும் பொறுத்துக்கொண்டு வாளாவிருக்க முடியாது. எதிரியை முந்திக்கொண்டு செயல்படவேண்டும். நாகம் படமெடுத்துக் கொண்டது.

சிறுவன் கையைப் பொந்தினுள் நுழைத்தான். முட்டைகளை எடுப்பதற்காகத்தான் கையை உள்ளே விடுகிறானோ? நாகத்திற்குச் சினம் பொங்கியது. எஞ்சியுள்ளவை இரண்டே முட்டைகள்! கடைசி முட்டைகள்! கடைசி வாரிசு! காப்பாற்றியே ஆகவேண்டும். சிறுவனின் கையை அது ஓங்கிக் கொத்தியது.

நாகத்திற்கு இப்போதுதான் நிம்மதி ஏற்பட்டது. சிறுவனையும் அவனைத் தாங்கிப் பிடித்தபடி சிறுமியும் ஓடுவது தெரிந்தது. தலையை உள்ளே இழுத்து முட்டைகளைப் பார்த்தது. அவற்றைக் காப்பாற்றியாயிற்று; நிம்மதி!

சற்றுநேரத்திற்குப் பிறகு இணை பொந்துக்குத் திரும்பியது. நடந்ததை நாகம் சொன்னதும் அதைக் கவலை பற்றிக்கொண்டது. எதிரிகள் நிச்சயம் மீண்டும் வருவார்கள். முட்டைகளைக் காப்பாற்ற ஏதாகிலும் செய்தாக வேண்டும். தாங்கள் இறந்துபோக நேரிட்டால் கவலையில்லை, முட்டைகளும் அல்லவா சேர்ந்து அழிக்கப்பட்டுவிடும்!

"நம் நஞ்சிலிருந்து உயிர்தப்பிய எதிரிகள் யாருமில்லை! அந்தச் சிறுவன் நிச்சயம் இறந்திருப்பான்! அவர்கள் பழிக்குப்பழி வாங்கத் திண்ணமாக வருவார்கள். அவர்கள் வந்து, நம்மோடு சேர்த்து நம் முட்டைகளையும் அழிப்பதற்குமுன் நாம் ஏதாவது செய்தாக வேண்டும்" என்றது இணை.

"நாம் என்ன செய்வது இப்போது?" என்று கேட்டது நாகம். சிறுவனைக்கொத்தியது தவறு என்று உணர்ந்து வருந்தத் துவங்கியது அது.

"நாம் இறந்தால் பரவாயில்லை! ஆனால் நம் முட்டைகளைக் காப்பாற்றியாகவேண்டும். நம் இறப்புக்குப்பின் நம் வாரிசுகளாவது தப்பிப் பிழைக்கட்டும்! நமக்குப் பிறகு அவையாவது இந்த உலகில் வாழட்டும்! நம் எதிரிகளுக்குத் தெரியாத ஏதாவது ஓர் இடத்திற்கு இப்போதே முட்டைகளை மாற்றியாக வேண்டும்!" என்று சொன்னது இணை.

உடனடியாக முட்டைகளை வேறோர் இடத்திற்கு அவை கொண்டு சென்றன. அவற்றைப் பத்திரமாக ஒளித்து வைத்துவிட்டு எதிரிகளுக்காகக் காத்திருந்தன.

எதிரிகள் பழிவாங்க வந்துவிட்டார்கள். ஒளிந்திருந்த இடத்திலிருந்து எட்டிப் பார்த்தது நாகம். மனிதர்கள் பலர் காணப்பட்டார்கள். நெருப்பு உண்டாக்குவதற்குத் தோதாக எண்ணெய் போன்றவற்றையும் உடன்கொண்டு வந்திருந்தார்கள். அவர்களுள் ஒருவன் துப்பாக்கி வைத்திருப்பது நாகத்திற்குத் தெரிந்தது.

மரணம் நெருங்கிவிட்டது; தப்பியோட இனி இயலாது. அந்த மனிதர்கள் உயிருக்கு உயிர் வாங்க வந்திருக்கிறார்கள்! சிறுவனின் உயிருக்கு நாகத்தின் உயிர் வாங்கப்படவேண்டும். அது இறப்பதற்கு அஞ்சவில்லை. எதிரிகளின் கையில் சிக்கிச் சேர்ந்து அழிந்துபோகாமல் முட்டைகள் காப்பாற்றப்பட்டுவிட்டன; இந்த எண்ணமே அதற்கு நிம்மதியைத் தந்தது.

எண்ணெய் ஊற்றி எதிரிகள் நெருப்பு வைத்தார்கள். எங்கும் பற்றி எரிந்தது நெருப்பு! உயிர்தப்ப வழியே இல்லை! மரணத்தை எதிர்நோக்கி நாகமும் அதன் இணையும் ஒளிந்திருந்த இடத்திலிருந்து வெளியே வந்தன.

வேட்டு கிளம்பியது; நாகத்தின் இணை சுருண்டு விழுந்தது! இன்னொரு வேட்டு; நாகமும் சுருண்டது. எதிரிகளுக்குத் திருப்தி ஏற்படவில்லை. அவற்றின் உடல் நைந்து போகும்வரை அடித்தனர்.

மறுநாள்—

பத்திரமான, மறைவான ஓர் இடத்தில் செவ்வண்ணம் இழையோடிய இரண்டு முட்டைகள் மெல்லப் பொரிந்தன.

[22-5-1977 "மிங்குவான் மலேசியா"வில் வெளிவந்த சிறுகதை]

தமிழாக்கம்: கடைச்சித்தன்



வண்ணத்துப் பூச்சி

வண்ணத்துப் பூச்சி-நல்ல
வண்ணத்துப் பூச்சி!

கண்ணைக் கவரும் அழகுடன்
மின்னி மின்னி பறக்குது!
வண்ண வண்ண மலர்களை
வட்ட மிட்டுச் சுற்றுது!

உலகில் உள்ள நிறமெலாம்
உடலில் வந்து ஒட்டவே
பளபளக்க வானிலே
பறந்து பறந்து திரியுது!

சின்னஞ் சிறிய புழுவிலே
சிறகு வந்து முளைக்கவே
கண்ணைக் கவரும் உருவுடன்
களித்து வந்த பூச்சியாம்!

பூவி லுள்ள தேனையே
புசித்து வாழும் இதனையே
நாவி னிக்கப் பாடியே
நாளும் நாமும் வாழ்த்துவோம்!



முரசு நெடுமாறன்

[19-3-77-இல் கேரித்தீவு மேற்குத் தோட்டத் தமிழ்ப்பள்ளியின் முச்சிறப்புப் பெருவிழா கலைநிகழ்ச்சியில் மாணவியர் இப்பாடலைப் பாடி மெய்ப்பாடு தோன்ற நடித்துக் காட்டினர்.]

வழிகாட்டுகிறார் வள்ளுவர்

முருகு சுப்பிரமணியன்

முன்னுரை

திருவள்ளுவரும் அவர் அருளியிருக்கும் திருக்குறளும் தமிழ்கூறு நல்லுலகத்துக்கும் தமிழ் மக்களுக்கும் புதியவர்கள் அல்லர். கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தமிழ்க் குலத்தோடு வள்ளுவம் பின்னிப் பிணைந்து நிற்கிறது. வள்ளுவரின் சிந்தனைகள் தமிழ் இலக்கியத்தின் பெரும்பரப்பில் தம் செல்வாக்கை நிலை நிறுத்தியிருப்பதையும் காண்கிறோம். இன்றும் வள்ளுவரைப்பற்றிப் பேசாத புலவரில்லை; எழுதாத அறிஞரில்லை; புகழாத நாளில்லை.

வள்ளுவர் இயற்றிய திருக்குறளுக்குத் தமிழ் இலக்கியத்தில் மணிமகுடம் போன்ற சிறப்பு வழங்கப்பட்டு வருகிறது. திருக்குறள் தோன்றி இரண்டாயிரம் ஆண்டுகளில் எத்தனையோ உரைகளையும் விளக்கங்களையும் அது பெற்றுவிட்டது. அப்படியிருந்தும் "நவில்தொறும் நயம்" பயக்கின்ற வற்றாத வளத்தைத் திருக்குறள் பெற்றிருக்கிறது. எத்தனைமுறை பயின்றாலும் அலுப்பில்லை சலிப்பில்லை! எத்தனைமுறை கேட்டாலும் அத்தனைமுறையும் புதிது புதிதாகக் கருத்துக் கண்களைத் திறந்துவிடுகிற ஊற்றுக் கேணியாக அது திகழ்ந்து கொண்டிருக்கிறது. "அறிதோறும் நம் அறியாமையைப்" புலப்படுத்தி நிற்கிற பெருநூலாகத் திருக்குறள் இயங்கி வருகிறது.

அறம், பொருள், இன்பம் என்று மூன்று பால்கள்! மொத்தம் 133 அதிகாரங்கள்! 1330 குறட்பாக்கள்! ஒவ்வொன்றும் இரண்டடிதான்! இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்டிருந்த போதிலும் இன்றைய தமிழ் மகனும் படித்துணரத்தக்க எளிய தெள்ளியநடை!

திருக்குறள் நல்வாழ்வுக்கு இலக்கணம் வகுத்துத் தந்திருக்கிறது. மாந்தரின் அறவாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டும் என்பதை அது கச்சிதமாகக் கோடிட்டுக் காட்டுகிறது. "கற்க குறளைக் கற்றபின் நிற்க அதற்குத்தக" என்னும் அறிவுரையைப் பின்பற்றுவோர் வையத்தில் வாழ்வாங்கு வாழமுடியும்!

நகைச்சுவை மன்னராக விளங்கிய என். எஸ். கிருஷ்ணன் திருக்குறளை நிலைக் கண்ணாடிக்கு ஒப்பிடுவார். முகத்தை அழகாக வைத்துக்கொள்ளக் கண்ணாடி பயன்படுவதுபோல, வாழ்க்கையைச் செம்மையாக வைத்துக்கொள்ளத் திருக்குறள் பயன்படும் என்பார் அவர். இது மெத்த உண்மை.

அத்தனை சிக்கல்களுக்கும்

உங்களுக்கு வாழ்க்கையில் தோன்றுகிற அத்தனை சிக்கல்களுக்கும் திருக்குறளில் விடை இருக்கிறது. உங்கள் அறிவு மயக்கத்தைத் தெளியவைக்கும் மாமருந்து திருக்குறள்! உங்களின் செயல் தயக்கத்தை வெருட்டுகிற பேருக்கம் திருக்குறள்! அது பேடிகளையும் வீரர்களாக்கும்! குருடர்களுக்கும் கண் வழங்கும்!

ஆனால் திருக்குறளோடு இரண்டாயிரம் ஆண்டு காலம் உடனுறைந்திருக்கிற தமிழ்ச் சமுதாயம் அப்பேரிலக்கியத்தின் வாயிலாக முழுப் பயன் எய்தியிருக்கிறதா என்று ஒருகணம் சிந்தித்துப் பார்த்தால் "இல்லை! இல்லை!" என்பதுதான் நமக்குக் கிடைக்கிற விடை!

கேடில் விழுச்செல்வமான கல்வியைப் பற்றி வள்ளுவர் யாது சொன்னார்? "கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்" என்று அழுத்தந்திருத்தமாக முகத்தில் அறைந்தாற் போலக் கூறியிருக்கிறார்.

நமமிடையே கற்றவர்கள் கண்ணுடையவர் எத்துணை விழுக்காட்டினர்? திருக்குறளை முழுமையாகக் கற்றிருப்பவர்கள் எத்தனை பேர்! வெட்கக்கேடு! முகத்தில் இரு புண்களை உடையவர்களாகவே வெறும் கைநாட்டுப் பேர்வழிகளாகவே நம்மில் பெரும்பாலோர் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்!

திருக்குறள் நம் சமுதாயத்தைக் கல்வி கொழிக்கும் சமுதாயமாக மாற்றுவதில் வெற்றிபெறவில்லை என்பதுதான் இதன் பொருள்!

ஃ ஃ ஃ ஃ

பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பார் வள்ளுவர். "எதிரிகளின் செருக்கை அடக்குவதற்குச் செல்வத்தைப் போன்ற கூரிய ஆயுதம் வேறில்லை; ஆகவே செல்வத்தைத் திரட்டு" என்று கட்டளையும் இடுவார் பொய்யாமொழிப் புலவர்! ஆனால், எக்காலத்துக்கும் பொருந்தும் இச்சொற்கள் நம் இரும்புச் செவிகளில் ஏறவில்லை. காட்டில் எரித்த நிலவாக வள்ளுவரின் வாக்கு வீணாகிப் போயிற்று. அன்றாடம் காய்ச்சிகளும், தலைநிமிர முடியாத வறியவர்களுமே இன்னும் மிகப் பெரும்பாலோர் நம் சமுதாயத்தில்.

வள்ளுவரை முறையாகப் பயின்று அதன் வழி நின்று அவர் கூறியவாறு பொருளைச் செய்திருந்தால் இன்று ஏதுமறியாத ஏழைப் பிள்ளைகளாக நமது மக்கள் வாழுகின்ற அவலம் நேர்ந்திருக்காது!

விரல்விட்டு எண்ணுகிற ஒரு சிலர் மட்டுமே குபேரர்கள்! மற்ற அனைவரும் ஏழைகள்! வள்ளுவர் நம்மிடம் தோற்றார் என்பதையே இது காட்டுகிறது!

"ஞாலம் கருதினும் கைகூடும்; காலம்
கருதி இடத்தாற் செயின்"

என்பது வள்ளுவம்!

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்றும் வள்ளுவம் கூறுகிறது. இத்தகைய பெருநினைப்பு, மனத்திண்மை, காரியசித்தி நமது மக்களி

எவ்வுயிர்க்கும் ஈசன்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடீ!
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னே?
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ!

—திருவாசகம் 12:1

அவன் பூசுவதும் வெண்மையான சாம்பல்! அவன் பூண்பதுவும் சீறுகின்ற பாம்பு! அவன் திருவாயினால் பேசுவதும் வேதம்போலும்! இந்த அதிசயத்தைப் பாரேடி!

அவன் பூசுவதையும், பேசுவதையும் பூண்பதையும் கருதிக்கொண்டு என்னடி பயன்? அவனே எவ்வுயிர்க்கும் ஈசனுவான்! அனைத்துக்கும் அவ்வவற்றிற்குத் தக்கபடி இதஞ்செய்பவனாகவும் அவனே இருக்கின்றான், சாழலோ! (அதனால் அவனையே பணிவோம்.)

டையே காணக் கிடக்கிறதா? இத்தகைய சிங்கமனம் நம்மில் எத்தனை பேரிடம் உண்டு? கூனிக்குறுகி, வாழ்வில் நம்பிக்கையிழந்து, கோழிக் குஞ்சுகளைவிட இழிவாக வாழ்கிற மக்களே மிகுதியானவர்கள்!

திருக்குறளைப் போன்ற ஒரு பெருநூலை அருஞ் சொத்தாகப் பெற்றுள்ள சமுதாயத்தில் எவ்வாறு இத்தகைய அடிமைப் புத்தி, குள்ளமனம் வந்து புகுந்தது? தன்னம்பிக்கை வேரற்றுப் போனதற்கு காரணம் யாது? தமிழறிஞர் சிந்திக்க வேண்டிய ஒரு நிலைமை இது!

ஃ ஃ ஃ ஃ

"பலசொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்"

என்னும் குறள் ரத்தினச் சுருக்கமாகக் கருத்தோடு பேச வேண்டிய அவசியத்தை அழகாக வலியுறுத்துகிறது.

இக்குறளைத் தமிழன் ஒழுங்காகக் கடைப்பிடித்திருந்தால் தமிழன் என்றால் பெரும்பேச்சு, நெடும்பேச்சு ஆசாமி என்னும் எள்ளல் உரை எழுந்திருக்குமா? இருமினால் பேச்சு, தும்மினால் பேச்சு என்று வாழ்க்கையையே பேச்சு மேடையாக்கிப் பொழுதையும் ஆற்றலையும் வீணடிக்கின்ற நிலைமை வந்திருக்குமா?

தமிழனின் வாழ்நாளில் பெரும்பகுதி பேச்சிலும் ஏச்சிலும் விவகாரத்திலுமே கழிகிறது; செயல் திறம் மங்குவதற்குப் பேச்சில் தமிழனுக்கு இருக்கிற அளவு கடந்த ஆசையே முக்கிய காரணமாகும்.

விளையும் பயிர்



செல்வி மாலா கிருஷ்ணன் இந்தச் சின்ன வயதில், பல்கலைக் கழகத்தில் பட்டம் வாங்கும்போது அணிந்து கொள்ளும் உடையோடு இருக்கிறாளே. அது சும்மா ஓர் அழகுக்குத்தான் என நினைக்கிறீர்களா? உண்மை அதுவல்ல!

மாலா தன் ஆங்கிலப் பாலர் பள்ளிப் (கிண்டர் கார்டன்) படிப்பை முடித்துவிட்டு அந்தப் பள்ளியிலிருந்து வெளியேறும் போது பள்ளி நடத்திய. "பட்ட மளிப்பு" விழாவில் பிடித்த படம் இது.

எதிர்காலத்தில் இப்படி உண்மையாகவே பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறவேண்டும் என்னும் உணர்வைப் பிஞ்சுவயதிலேயே மனத்தில் புதிய வைக்க இந்தப் படம் மாலாவுக்கு உதவக்கூடும்.

தமிழ்ப் பாலர் பள்ளிகள் உருவாகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் அப்பள்ளிகளில் பயிலும் நம் இளம் குழந்தைகளுக்கும் மேற்கண்ட வகையில் எதிர்கால லட்சியத்தை ஊட்ட இத்தகைய முறையில் தமிழ்ப்பாலர்பள்ளிகளும் "பட்டமளிப்பு" விழாக்களை நடத்த முயன்றால் என்ன?

வள்ளுவர் "மாசற்ற சில சொல்லல்" போதும் என்றார்! அவர் அறிவுரை நம் செவியில் விழவில்லை! "பல சொல்லக் காமுறும்" பெரும் பேச்சு— வெறும் பேச்சுக் கூட்டமாகவே வளர்ந்துவிட்டோம்!

காரியத்தோடு— கட்டுச் செட்டாக— திறனறிந்து பேசுகிறவர்களாக நம்மைச் செம்மைப்படுத்துவதிலும் வள்ளுவர் தோல்வியே கண்டிருக்கிறார்!

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை"

என்பது வள்ளுவர் வாக்கு. அயராத ஊக்கமும் உழைப்பும் செல்வத்தை அங்கு வழிதேடி வரச் செய்யும் என்பது இதன் பொருள்! இக்குறள் ஒன்று போதும் நாம் உயர்வதற்கு! ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளாக நமது திருக்குறள் நூலில் இருந்து வருகிற இக்குறள் நம்மில் எத்தனை பேரை உயர்த்தியிருக்கிறது? "அசைவிலா ஊக்கம்" எத்தனை பேருக்கு உண்டு?

ஃ ஃ ஃ ஃ

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து" என்றும் தலையில் வைத்துக் கூத்தாடுகிற அளவுக்கு நம் தகுதி உயரவில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

இந்த அவலத்திற்குக் காரணம் யாது?

திருக்குறளை உலக நூலாகப் போற்றி உலகத்திற்கு அதனை எடுத்துக் கொடுத்துவிட்டோம்! உலகத்தார் பலர் அதனைப் படிக்கிறார்கள், பயன்பெறுகிறார்கள்! நாம் திருக்குறளின் பெருமையை ஆண்டுதோறும் பேசுகிறோம்! வள்ளுவருக்கு விழா எடுக்கிறோம்! சிலை நிறுவுகிறோம்! சீர்பாடுகிறோம்! இப்பூசைகளைச் செய்து முடிப்பதில் நமது மனம் நிறைவடைந்து விடுகிறது!

உலக அறிஞர்களிடம் திருக்குறள் கைமாறிவிட்டது! நம்மிடம் திருக்குறள் இல்லை! இதனால்தான் நம்மிடம் கல்வியில்லை, கண்ணில்லை; பொருளில்லை; புகழ் இல்லை; உழைப்பில்லை, ஊக்கமில்லை!

திருக்குறளை நாள்தோறும் எழுத்தெண்ணிக் கருத்தூன்றிப் பயில்கிறவர்கள் —நம்மிடையே பெருகினால் தான் நம் சமுதாயத்தில் மலர்ச்சி பிறக்கும்!

திருக்குறளை வாழ்க்கைக்கு வழிகாட்டியாகக் கொண்டு நடைமுறையில் கடைப்பிடிக்கிறவர்கள் நம்மிடையே அதிகரித்தால்தான் சமுதாயத்திற்கு வளமும் வாழ்வும் ஏற்படும்!

ஒவ்வொரு குடும்பத்திலும் பெரியவர்கள், குழந்தைகள் அனைவரும் திருக்குறளை வாழ்க்கை நூலாகப் போற்றிப் பயிலவேண்டும்! வள்ளுவரின் கருத்தொளி நம் குடும்பங்கள் அனைத்திலும் பகலவன் ஒளிபோலப் பாய வேண்டும்!

திருக்குறளை அறியாத ஆளே இருக்கக்கூடாது! அத்தகைய ஒரு நிலைமையைத் தோற்றுவித்துவிட்டால் வள்ளுவர் நம்மைப் பெருஞ்செல்வர்களாக வாழவைப்பதைக் காண்போம்!

திருவள்ளுவருக்கு உண்மையாகச் செலுத்துகிற அஞ்சலி அவர் நமக்குச் செந்தமிழில் அருளியிருக்கிற திருக்குறளைப் படிப்பதுதான்!

இக்காரியத்தைச் செய்வதற்கு மாநாடுகளும் பெருவிழாக்களும் முழக்கங்களும் தேவையில்லை. ஒவ்வொரு தமிழ் மகனும் தமக்கு வழிவழியாகக் கிடைத்து வருகிற இந்த அரும் புதையலைக் கண்ணைத் திறந்து பார்த்து நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்!

திருக்குறளைக் கடைப்பிடிக்கும் சமுதாயமாகத் தமிழ்க் குலம் திகழுகின்ற நிலைமையை உருவாக்கிவிட்டால் இன்னும் ஐந்நூறு ஆண்டுகளில் வள்ளுவருக்கு 2,500 நிறைவைக் கொண்டாடும்போது வள்ளுவர் நம்மிடையே வெற்றி முரசு கொட்டுவதை ஆனந்தக் களிப்போடு நாம் காணமுடியும்!

வள்ளுவம் நமது வாழ்க்கையில் அமுத்தமாகப் படிந்துவிட்டால் நாம் உய்வுற்றோம் என்பது பொருள்.

நமது நடைமுறை வாழ்க்கைக்கு வள்ளுவர் எவ்வாறு வழிகாட்டுகிறார் என்பதை அடுத்துவரும் கட்டுரைகளில் காண்போம்.

படித்தவர் படிக்காதவர் பாகுபாடு வேண்டாம்

இப்பொழுது ம. இ. கா.வின் கிளைத் தேர்தல்கள்தொட்டு எல்லாத் தேர்தல்களும் மிகவும் பரபரப்பாகவும், விருவிருப்பாகவும் நடைபெறுவது இந்தியரின் அரசியல் விழிப்புணர்ச்சியின் வளர்ச்சியைக் காட்டுவதாகக் கூறமுடியுமா? நிச்சயமாக இல்லை. அதனால் நமது சமுதாயம் அடைந்துள்ள திமைகளை விட நன்மைகள் மிகவும் குறைவு. ஆனால் இம்மாதிரியான போராட்டங்களின் போது சில வேதனையான உண்மைகள் வெளிவந்துள்ளன. அவற்றில் இப்போது மிகவும் பிரதானமாக எழுந்து நிற்பது படித்தவர் படிக்காதவர் என்ற போராட்டம்தான். இந்த வேறுபாடு அல்லது காழ்ப்புணர்ச்சி உண்மையில் தற்போது எழுந்ததல்ல. அது இன்றைய இளைய, படித்த நமது ம. இ. கா. தலைவர்கள் கட்சியில் தோன்றிய போதே எழத்தொடங்கி விட்டது. இருப்பினும் மிகவும் முக்கியமான ஓர் அரசியல் பகடைக்காயாக அது இப்போது சிலரால் மிகவும் அநாகரிகமான முறையிலும், சுயநல நோக்கத்துடனும் பயன்படுத்தப்படுவது சிந்திக்கவேண்டிய ஒரு மிரட்டல் ஆகும்.

ம. இ. கா என்றும் பதவிப் பித்தர்களின் கோட்டையாக மட்டும் தான் இருக்க வேண்டுமா? படித்தவர்களைக் கண்டு நமது ம. இ. கா. தலைவர்களில் சிலர் ஏன் பயப்பட வேண்டும்? ஏன் அவர்களை எப்போதும் சந்தேகக் கண்ணுடனும், வெறுப்புணர்ச்சியுடனும் காண வேண்டும்? இதுவெல்லாம் நமது வளர்ச்சிக்கு ஏற்றதல்லவே! இந்திய சமுதாயம் கௌரவமாக வாழவும் எல்லா நிலைகளிலும், ம.இ. கா.வின் சேவைகள் புதிய தோற்றமும், ஆக்கமும் பெறவும், தலைமைத்துவத்தின்பால் அதிக நம்பிக்கை வளரவும் கட்சியை மேலும் அதிகமான இந்தியர்கள் ஆதரிக்கவும் அதனால் நமது பல பிரச்னைகளில் பெருமளவிற்கு நல்ல முடிவுகள் காணவும் வேண்டுமானால், படித்தவர் படிக்காதவர் என்ற பாகுபாடு ம.இ.கா.வில் தோன்றவே கூடாது இந்திய சமுதாயம் உருப்படியாகத் தேற வேண்டுமானால். மேலும் படித்த இளைஞர் சமுதாயம் கட்சியின் எல்லாச் சேவைகளிலும் ஈடுபட வேண்டும்.

ம. இ. கா. உறுப்பினர்கள் சில உண்மைகளை உணர்ந்து கொள்ள வேண்டும். படித்தவர்கள் என்றால் பட்டதாரிகள் மட்டுமல்ல. ஐந்தாம் படிவம் படித்தவரும் படித்தவர்தான். ஆறாம் வகுப்பு படித்தவரும் படித்தவர் தான். உண்மையில் படித்தவர் என்பவர் பள்ளியில் படித்தவர் மட்டுமல்ல, தினமும் பல விஷயங்களையும், பல வளர்ச்சிகளையும் பல புத்தகங்களினின்றும், நாள், வார இதழ்களினின்றும் படித்துத் தனது அறிவை நாளுக்கு நாள் வளர்த்துக்கொள்பவரும், பலமொழிகளில் பேசவும் எழுதவும் அறிந்தவரும் படித்தவர்தான். டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் பட்டதாரியல்ல; ஆனால் படித்தவர். அதுமாதிரி அறிவாற்றல் உள்ள யாரையும் கட்சியின் தலைமைத்துவத்தை அடையும் வளர்ச்சிப் பாதையில் நின்று தடுக்க முடியாது. அதற்கான முயற்சியில் யார் ஈடுபட்டாலும் வெற்றி காணவும் முடியாது. எனவே, படித்தவர்களைப் பட்டதாரிகள் என்று மட்டும் தப்பபிப்பிராயம் கொள்ளக் கூடாது.

இன்னொரு உண்மையையும் மக்கள் உணரவேண்டும். படித்தவர்கள் இன்று கட்சியின் மேல்மட்டத்தில் உள்ளவர்கள் எல்லாம் ஆரம்பத்தில் சாதாரணக் குடும்பத்திலும், தோட்டப்புறத்திலும் இருந்து வந்தவர்கள்தான். அவர்கள் பிறந்த பூர்விகம் படாடோபமான, வசதியான பின்னணியைக் கொண்டதல்ல. இது உண்மை. உண்மையில் அம்மாதிரியான மேற்குறிப்பிட்ட வசதி படைத்த குழ்நிலையிலுள்ள இளைஞர்கள் இன்று ம. இ. கா.விற்காகவும், இந்திய சமூகத்திற்காகவும் தங்கள் சக்தியையும், வசதியையும் அர்ப்பணித்து சேவை செய்ய முன்வந்ததில்லை; இனியும் வருவார்கள் என எதிர்பார்க்கமுடியாது. இப்போது கட்சியில் உள்ள பட்டதாரிகள் பணக்காரர்களல்ல. அவர்கள் சாதாரண இந்திய சமூகத்தின் பிரதிநிதியை ஏமாற்றும் நோக்கம் கொண்ட வேடதாரிகள் அல்ல. அப்படி நோக்கமுள்ளவர்கள் கட்சியில் தங்கள் நலன்களை விட்டுவந்து சேவையாற்ற வேண்டியதில்லை.

வளர்ந்துவரும் நமது சமுதாயத்தைச் சிறப்பாக வளரவைக்கவேண்டிய சக்தியையும் ஆற்றலையும் கொண்ட படித்த இளைஞர்களின் ஈடுபாட்டை மேலும் உயர்த்த முயல வேண்டுமே ஒழிய, அவர்களை ஒடுக்கவும், விலக்கவும் முயலக்கூடாது. அத்தகு நடவடிக்கைகள் நமது எதிர்காலச் சந்ததியினரின் வேகத்தையும் மேம்பாட்டையும் இப்பொழுதே நிறுத்திவிடும்.

இனிவரும் எந்தத்தேர்தல் பிரச்சாரங்களிலும் குறுகிய மனப்பான்மையுடன் எந்த அரசியல்கர்த்தாவும் படித்தவர் — படிக்காதவர் என்ற பகடைக்காயை உருட்டிவிட்டு வேடிக்கை பார்க்க முயல வேண்டாம். எழுச்சிபெற்ற இளைஞர்கள் கட்சியின், சமூகத்தின் வளர்ச்சி பற்றி சிந்திக்கவும் செயல்படவும் முதியவர்கள் ஒத்துழைக்க வேண்டும். சாதாரண இந்தியனை மட்டும் பிரதிநிதிக்கும் கட்சியாக ம. இ. கா. இருக்கமுடியாது; இருக்கவும் கூடாது. அதனைவிட கட்சி இருப்பதே தேவையில்லை. ம. இ.கா. இந்திய சமூகத்தின் சொத்து. அதில் அனைவர்க்கும் வாய்ப்பு வழங்கப்படவேண்டும். எனவே, படித்தவர்களை முடிந்தவரை ஆதரித்து. அவர்களின் நல்ல சேவைகளையும் தகுதிகளையும் சமூகத்தின் நல்வாழ்விற்காகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இப்பொழுதெல்லாம் பட்டதாரிகள் மிகச் சாதாரணமாக, பரவலாக மலேசியச் சமுதாயத்தில் தோன்றியுள்ளார்கள். ஆனால் இந்திய சமுதாயத்தில் மட்டும் அப்படியல்ல. மற்ற சமூகத்தில் அவர்களின் எல்லா சமூக நடவடிக்கைகளிலும் ஊடுருவி அந்தந்தச் சமூகத்தின் உருப்படியான உறுப்பினர்களாகச் சேவையாற்றுகின்றார்கள். இன்றைய நாட்டின் முக்கியத் தலைவர்களில் பெரும்பாலோர் பட்டதாரிகள். அந்தஅந்தஸ்தையும் அந்தத் தரத்தையும் ம. இ. கா. தலைமைத்துவமும் கொண்டிருக்கவேண்டும். அதே வேளை, படித்த பட்டதாரிகளை மட்டும் அந்த அளவு கொண்டு செல்லவேண்டிய அவசியமுமில்லை. அவர்களுடன் படித்தவர்கள் யார் விவேகமான தலைவராக முன் வந்தாலும் அவருக்கும் அங்கு வாய்ப்பு வழங்கப்படவேண்டும்.

—ஆர். மாசிலாமணி
ம. இ. கா. தேசிய
இளைஞர்பகுதிச் செயலாளர்

தேவை: $50

மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் 29-5-77இல் நடத்திய மாதாந்திரச் சிறுகதைக் கருத்தரங்கில் புதிய சமுதாயம் (25-4-77) இதழில் பிரசுரமான "தேவை" சிறுகதை பரிசு பெற்றது. இக்கதையை எழுதியவர் திரு. மா. இராமையா ஆவார்.

அக்கருத்தரங்கில் "தேவை" கதையோடு 10-4-77 புதிய சமுதாயத்தில் வெளிவந்த திரு. சி. வடிவேலுவின் "பிள்ளை வரம்" கதையும், தமிழ் மலரில் பி. கே. சரோஜா மணியம் எழுதியிருந்த "அட அயோக்கியா..." கதையும் இறுதித் தேர்வுக்கு வந்தன.

கலைவிருந்து



இயக்குநர் சிகரம் கே. பாலச்சந்தர் தலைமையில் நட்சத்திரக் கலைக்குழு ஒன்று சிங்கப்பூர்–மலேசியாவுக்கு விஜயம் செய்ய இருக்கிறது.

ஜெமினி கணேசன், கமலஹாசன், ஜெயசித்ரா, ஸ்ரீதேவி, "ஒருவிரல்" கிருஷ்ணாராவ், ஜெமினி மகாலிங்கம் ஆகியவர்கள் இந்த நட்சத்திரக்கலைக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

அவர்களுடன் கோபு-பாபு இசைக்குழுவினரும் வருகைதருவர். பாலச்சந்தர் வெளிநாட்டிற்கு வருவது இதுதான் முதல்தடவையாகும். அவருடைய மேற்பார்வையில் அவருடைய நாடகங்களும் மற்றும் கலைநிகழ்ச்சிகளும் வெளிநாட்டு மேடைகளில் முதன்முறையாக இப்பொழுதுதான் அரங்கேற இருக்கின்றன.

இந்த நட்சத்திரக் கலைக்குழு வருகிற ஜூன் 23ஆம் தேதி சிங்கப்பூர் விமானம் மூலமாக சென்னையிலிருந்து புறப்பட்டுச் சிங்கப்பூருக்கு வருகின்றது. மறுதினம் ஜூன் 24ஆம்தேதி கோலாலம்பூரில் நெகரா அரங்கில் இவர்களின் முதல் கலைநிகழ்ச்சி தொடங்கவிருக்கிறது.

கண்களுக்கு நல்விருந்தளிக்கும் நடனநிகழ்ச்சிகளையும், ஓரங்க நாடகங்களையும், செவிக்கினிமை தரும் இசை நிகழ்ச்சிகளையும் அளித்து சிங்கப்பூர்–மலேசியா ரசிகப் பெருமக்களின் பேராதரவையும், பெருமதிப்பையும் பெறவேண்டுமென்பது இந்தக் கலைக்குழுவின் முக்கிய நோக்கமாகும்.

சிங்கப்பூர் —மலேசியாவிலுள்ள முக்கிய நகரங்களில் மொத்தம் 14 கலைநிகழ்ச்சிகளை நடத்த இந்த நட்சத்திரக் கலைக்குழு திட்டமிட்டிருக்கிறது.

மீன் பொரியல்

தேவையானவை:–

வௌவால் மீன்: 1
தக்காளி சாஸ்: 3 மேசைக் கரண்டி.
மிளகாய் சாஸ்: 2 மேசைக் கரண்டி.
காடி (சுக்கா): 1 தேக்கரண்டி.
உப்பு: தேவையான அளவு.
சமையலெண்ணெய்: தேவையான அளவு.

செய்யும் முறை:

1. மீனைத் துண்டுகளாக நறுக்காமல் முழுதாகவே சுத்தம் செய்து எண்ணெய்யில் பொரித்து எடுத்துக் கொள்ளவும்.

2. தக்காளி சாஸ், மிளகாய் சாஸ், காடி, உப்பு போன்றவற்றைக் கொஞ்சம் தண்ணீரோடு ஒன்றாகக் கலந்து கொதிக்க விடவும்.

3. கொதித்ததும், அக்கலவையைப் பொரித்த மீனின்மேல் ஊற்றவும்.

4. வெள்ளரிக்காய், தக்காளிப் பழம் போன்றவற்றை வட்டமான துண்டுகளாக நறுக்கி மீனின்மேல் தூவலாம்.

–திருமதி
தெய்வானை மருதன்,
கோலாலம்பூர்.



மலேசியமொழித் தேர்வில் வெற்றி பெற (4)

அஙந்தா. படிப்பது?

வெ. ஆறுமுகம்

தரப்படும் கட்டுரைப்பகுதியைப் படித்துப் புரிந்துகொண்டு அதிலிருந்து எழும் வினக்களுக்கு விடையெழுதக் கோரும் கேள்வ, S.P.M./M.C.E. மலேசியமொழி வினுத் தாளினுடைய இரண்டாவது தாளின் இரண்டாவது கேள்வியாக இடம்பெறும். இது கட்டாயக் கேள்வியல்ல.

இக்கேள்விக்காகத் தரப்படும் கட்டுரைப்பகுதி 200 சொற்களுக்குள் இருக்கும். நன்கு படித்துப் புரிந்துகொண்ட பின்னரே விடையெழுத முனையவேண்டும். மேலோட்டமாகப் படித்துத் தவருகப் புரிந்துகொண்டால் விடைகள் திசைமாறிப் போய்விடும்.

கேள்விகள் பொதுவாக இரண்டு வகையாக அமைந்திருக்கும். குறிப்பிட்ட சொற்களின் பொருளை எழுதுதலும் சொற்ருெடர்களை (rangkaikata) விளக்கி எழுதுதலும் ஒருவகை; கேள்விகளுக்கு விடையெழுதுதல் மற்ருெரு வகை.

சரியான பொருள்

தரப்படும் சொற்களுக்கு ஒரே சொல்லில் பொருள் எழுதுவது நல்லது. ஒரே சொல்லில் சரியான பொருளைத் தர இயலாது போகுமானுல் சிறு சொற்ருெடர்களால் பொருளை விளக்கலாம். சொற்ருெடர்களைச் சொற்ருெடர்களாலேயே விளக்குவது உசிதமானது.

குறிப்பிட்ட சொற்களும் சொற்ருெடர்களும் கட்டுரைப்பகுதியில் எந்தப் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளனவோ, அந்தப் பொருளைத்தான் நீங்கள் எழுத வேண்டும். நீங்கள் தரும் பொருள் கட்டுரைப்பகுதியில் உள்ள வாக்கியங்களோடு ஒட்டவேண்டும்; பொருந்த வேண்டும்.

ஒரு சொல்லுக்குப் பல பொருள் இருக்கலாம்; ஏதாவது ஒரு பொருளை எழுதிவிட்டால் போதுமா? போதாது! எடுத்துக்காட்டாக reban என்னும் சொல்லைக் கவனியுங்கள். இது kandang untuk ayam atau itik என்றும் runtuh என்றும் பொருள்படும். கோழி, வாத்து போன்றவற்றைக் கட்டுரைப்பகுதி குறிப்பிடுமானுல் முதலாவது பொருளையும், மரம், வீடு போன்றவை சாய்வதை — விழ்வதைக் குறிப்பிடுமானுல் இரண்டாவது பொருளையும் எழுதவேண்டும்.

வாக்கியங்களைக் கவனிக்காமல் பொருள் எழுதினுல் ஏறுக்குமாருக அமைந்தாலும் அமைந்துவிடும். Cahaya mata என்பதற்குக் கண்ணெளி, அன்புக்குரியவர், பிள்ளை என்னும் மூன்று பொருள்களில் எதைச் சரி என்று நினைத்து எழுதுவது? தனியாகப் பார்த்தால் மூன்றும் சரியே! ஆனுல் கட்டுரைப்பகுதியில் பொருத்திப் பார்த்தால் ஒன்றுதான் சரியாக இருக்கும். இப்படி மிகச் சரியான ஒன்றைக் கண்டு பிடித்து எழுதுவதுதான் உங்கள் வேலை!

ஏற்ற விடை

கட்டுரைப்பகுதியிலிருந்து தரப்படும் வினுக்களுக்கு விடையெழுதுவது குறித்து நீங்கள் சில முக்கியமான ஒழுங்குமுறைகளைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

அ) உங்களுடைய விடைகள் முழு வாக்கியங்களாக அமையவேண்டும். அரைகுறையாக, முடிவு பெருமல் எழுதப்படும் வாக்கியங்களுக்கு மதிப்பில்லை; மதிப்பில்லையெனில் மதிப்பெண்களும் இல்லை.


ஆ) விடைகளை மட்டும் எழுதினுல் போதும். கேள்விகளை மீண்டும் எழுதவேண்டியதில்லை; அவற்றை எழுதுவதனுல் கூடுதல் மதிப்பெண்கள் கிடைக்கப்போவதில்லை; நேரந்தான் இழப்பாகும். ஆனுல், விடைக்கு முன்னுல் கேள்வியின் எண்ணையும், துணையெண்ணையும், குறிப்பெழுத்தையும் [எடுத்துக்காட்டு: Soalan 2 — (b); (i)] அவசியம் குறிப்பிடவேண்டும்.

இ) கேள்வியின் ஒரு பகுதியை, விடையின் துவக்கத்தில் அப்படியே எழுதுவதைப் பெரும்பாலும் தவிர்த்து விடுங்கள். எடுத்துக்காட்டு: Bagaimanakah hubungan raja dengan rakyatnya yang digambarkan oleh penulis-penulis kesusasteraan lama (1975) என்னும் கேள்விக்கு விடையாக Hubungan raja dengan rakyatnya yang digambarkan oleh penulis-penulis kesusasteraan lama ialah என்று ஆரம்பித்து எழுதவேண்டியதில்லை. Dalam kesusasteraan lama என்ருே, வேறு வகையாகவோ விடையை நேரடியாகத் துவக்கி விடுவது நல்லது. கேள்வியின் ஒரு பகுதியை அப்படியே எழுதுவது படிப்பவர்க்குச் சலிப்பூட்டும். ஆயினும் மிக அவசியம் என்று நீங்கள் கருதுவீர்களாயின் ஓரிரு கேள்விகளின் பகுதியைச் சிறு மாற்றங்களோடு மீண்டும் எழுதி விடையைத் துவக்கலாம். ஆனுல் இதையே வழக்கமாக்கிக் கொள்ளாதீர்கள்.

ஈ) ஒவ்வொரு கேள்விக்கும் என்ன விடை என்று தீர்மானித்துக் கொண்ட பின்னரே எழுதத் துவங்க வேண்டும். சில சமயங்களில் ஒரு கேள்விக்கு விடையெழுதிவிட்டு மறு கேள்வியைப் பார்த்தால், முதலில் எழுதிய விடையின் ஒரு பகுதியையே இதற்கும் விடையாக எழுதவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருப்பது தெரிய வரும். ஒரே கருத்தை இரண்டு முறை எழுதுவது சரியன்று. எனவே. எழுதுவதற்கு முன், கருத்துகளைப் பங்கிட்டு விடைகளை நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டும்.

உ) இயன்றமட்டும் சொந்தச் சொற்களைக் கொண்டு சொந்த நடையில் விடையெழுத வேண்டும். கட்டுரைப் பகுதியில் உள்ள வாக்கியங்களை அப்படியே எடுத்து விடையாக எழுதிவிடுவது சுலபம் என்பதால் நீங்கள் ஒருவேளை அதை விரும்பலாம்; ஆனுல் விடைத்தாள் திருத்துபவர் நிச்சயம் விரும்பமாட்டார். தரப்படும் பகுதியில் உள்ள சொற்ருெடர்களையோ, வாக்கியங்களையோ தவிர்க்க இயலாத இடங்களில் மட்டும் நீங்கள் பயன்படுத்தலாம்; தவறில்லை.

எம். கே. ஞானசேகரன்



சமூக வீதியிலே—நான்
தத்தி நடந்துவந்தேன்
இமைக்கும் பொழுதினிலே—பல
இடர்கள் கண்டுவிட்டேன்
நிமிர்ந்து நடந்திடவே — நான்
நினைத்த பொழுதெல்லாம்
அமிதப் பிரச்சினைகள்—எனை
அடக்கி விட்டனவே!

நடந்து வந்த பாதை

சமுக்கெனும் சேற்றினிலே — நான்
தடுக்கியும் எழுந்துவிட்டேன்
வழுக்கி விழுவதில்லை — என
மனத்தில் கொண்டுவிட்டேன்!
இழிவை வென்றுவிட்டேன்—என்
எண்ண உறுதியினுல்!
பழிகள் எதிர்ப்பட்டால் — உடன்
அழிக்கத் துணிந்திடுவேன்!

குறுக்கு வழியினிலே — என்
கொள்கை செல்வதில்லை
சறுக்கி விழச்செய்யும் — அதை
வெறுத்து விடுகின்றேன்
திருப்பம் கண்டுவிட்டேன் — விழி
திறந்து விட்டதனுல்!
உறுத்தும் துயர்களையும் — இனி
உடைத்து விடுபடுவேன்!

சொந்தச் சொற்களில் எழுதுவதாக எண்ணிக்கொண்டு, கட்டுரைப்பகுதியின் கருத்தையும் நோக்கத்தையும் மாற்றி எழுதுவீர்களாயின் முற்றாக மதிப்பெண்களை இழந்து விடுவீர்கள். அதைவிட, கட்டுரைப்பகுதியிலுள்ள வாக்கியங்களின் அமைப்பை ஓரளவு மாற்றி விடையாக எழுதி விடுவது பாதுகாப்பானது; இதன்வழி ஓரளவாவது மதிப்பெண்கள் கிடைக்க வாய்ப்புண்டு. மொழியறிவு குறைவாக உள்ளவர்கள் மட்டும் இந்தக் குறுக்குவழியைப் பின்பற்றுங்கள்! மற்றவர்கள் நேர்வழியில், சரியான வழியில் செல்லுவதே நல்லது.

சொந்தக் கருத்து

ஊ) உங்கள் சொந்தக் கருத்துகளை விடையில் புகுத்தக்கூடாது. தரப்படும் கட்டுரைப்பகுதியில் உள்ள கருத்துக்களை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களோ, இல்லையோ கவலையில்லை; நூற்றுக்கு நூறு கட்டுரைப்பகுதியை அடிப்படையாகக் கொண்டுதான் உங்கள் விடை இருக்க வேண்டும். Dengan berpandukan petikan di atas, jawab soalan-soalan yang berikut என்னும் கட்டளையைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.

"ஆசிய நாடுகள் ஏன் இன்னும் தொழில்துறையில் பின்தங்கி உள்ளன" என்று ஒரு கேள்வி இருப்பதாக வைத்துக் கொள்வோம். அதற்கான காரணங்களைக் கட்டுரைப்பகுதியில் தேடிப்பிடித்து எழுதவேண்டும். அதை விட்டுவிட்டு "ஆசிய நாடுகள் தொழில் துறையில் பின் தங்கி உள்ளனவா? யாரையா சொன்னார்கள் அப்படி? ஜப்பானைப் பாருங்கள்! எந்த மேல்நாட்டுக்கு இளைத்து விட்டது ஜப்பான்? இன்னும் சீனா, இந்தியா, தைவான் போன்ற நாடுகளும் எவ்வளவோ முன்னேற்றம் கண்டுள்ளன. எனவே மேலேயுள்ள கூற்றை எள்ளளவும் ஏற்றுக்கொள்ள முடியாது" என்னும் தோரணையில் விடை எழுதுவீர்களாயின் விடைத்தாள் திருத்துபவர் தலைசுற்றிக் கிறுகிறுத்துப் போய்விடுவார்!

எ) கட்டுரைப்பகுதியிலிருந்து விலகி, உங்களின் சொந்தக் கருத்துகளை எழுதுவதற்கு வாய்ப்பளிக்கும் கேள்விகளும் வினாத்தாளில் இடம்பெறுவது உண்டு. ஆனால் அப்படிப்பட்ட கேள்விகளின் அமைப்பே வேறு மாதிரி இருக்கும். சில எடுத்துக்காட்டுகளைப் பாருங்கள்.

i) Sebutkan apa-apa yang kamu fikir boleh menarik pelancung-pelancung datang ke negara Malaysia ini. (1969)

ii) Mengikut pendapat kamu, apakah sebabnya Hasnah bersyukur kepada Tuhan bila ia melihat orang kapal itu seorang pun tiada lagi? (1970)

iii) Mengikut pendapat kamu, apakah sebabnya orang yang berempat itu tidak mahu makan roti yang empat biji lagi itu? (1973)

iv) Pada pendapat kamu, adakah persiapan seperti yang dijalankan oleh orang-orang kampung itu ujud hari ini, dan kenapa? (1974)

மேற்கண்டவாறு உள்ள கேள்விகளுக்கு விடையாக முழுக்க முழுக்கச் சொந்தக் கருத்துகளையோ, கட்டுரைப் பகுதியை ஓரளவு ஆதாரமாகக் கொண்ட கருத்துகளையோ எழுதலாம்; உங்களுக்குச் சரி என்று படுவதை உசிதப்படி எழுதலாம். ஆனால் கட்டுரைப்பகுதியின் கருத்துகளை மறுக்க வேண்டியிருந்தால் ஒரேயடியாகக் கடுமையாகத் தூக்கி எறிந்து எழுதிவிடாதீர்கள். மறுத்தாலும் சரி, எதிர்த்தாலும் சரி, அதில் அடக்கமும் நயமும் இருக்க வேண்டும்.

சொற்களுக்கும், சொற்றொடர்களுக்கும் பொருள் எழுதுதல், கேள்விகளுக்கு விடையெழுதுதல் ஆகிய இரு வகையைத் தவிர்த்து வேறு முறைகளிலும் கேள்விகள் அமையலாம். 1970-ஆம் ஆண்டுக்கான வினாத்தாளில் எட்டுக் கூற்றுகள் தரப்பட்டிருந்தன; அவற்றுள் எவை தரப்பட்ட பகுதியின் பொருளிலிருந்து முரண்படுகின்றன, ஏன் அவை முரண்படுவதாகக் கருதப்படுகின்றன (Ada beberapa keterangan di bawah ini berlawanan dengan yang tersebut dalam cerita di atas. Pilihlah mana-mana yang tidak betul itu dan sebutkan apa sebabnya ia dikatakan tidak betul) என்று வினவப்பட்டிருந்தது. இவ்வாறான கேள்விகள் உங்களின் மொழியறிவை மட்டுமல்லாமல் நுண்ணறிவையும் சோதிக்கக்கூடியவை. நன்கு சிந்தித்து எழுதவேண்டும்.

மலேசியமொழி வினாத்தாளில் இருக்கும் இந்த இரண்டாவது கேள்வி, படிப்பதை எந்த அளவிற்குப் புரிந்து கொள்கிறீர்கள் என்று கணிக்கும் அளவுகோல் ஆகும். நிறையப் படிப்பதுதான் இக்கேள்வியைச் சிறப்பாகச் செய்வதற்குச் சரியான பயிற்சி. ஆகவே அளந்து அளந்து படிக்காமல் அதிகமாகவே படியுங்கள்! முயன்று உயருங்கள்!

சிந்தனை மேடை 'கதிர்'



தேர்தல் என்று வந்துவிட்டாலே ஒரு சில அரசியல்வாதிகளுக்கு மனம் ஏன் இப்படிக் கெட்டுப் போகிறது என்று தெரியவில்லை. அவர்கள் எண்ணுவதெல்லாம் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதுதான். அதற்காக நாகரிகமாக நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றிய நினைப்பெல்லாம் எங்கோ ஓடிப் பதுங்கிவிடுகின்றன போலும்.

மேடையில் பேசும்போது மட்டும் "சாதிகள் இல்லையடி பாப்பா" என்று பாடுகிறார்கள். கீழே இறங்கியதுமே "நாங்கள் சாதியில் உயர்ந்த சாதி பாப்பா" என்று பாடத் தொடங்கிவிடுகின்றார்கள்.

வீடு வீடாக வாக்குப் பேரம் பேசப் போகும் இவர்களும் இவர்களின் தொண்டர்களும் சாதியை முன்வைத்தும், இனத்தை முன்வைத்தும் வாக்கைத் திரட்ட முற்படுகிறார்கள். இதுபோன்ற நடவடிக்கைகளைப் பார்த்தால் ம. இ. கா. எதிர்காலத்தில் நிலைத்திருக்குமா என்கிற ஐயமே உண்டாகிறது.

ம. இ. கா. வின் உயர்ந்த இலட்சியங்களைப் பதவி மோகங் கொண்டவர்கள் குலைத்துக் கொண்டிருப்பதைத் தலைமைத்துவம் அனுமதிக்கக் கூடாது. ஏனெனில் இப்போதெல்லாம் வேட்பாளர்களை விட சாதிகளே போட்டியிடுகின்றன. இனவாதமே பிரச்சார சாதனமாகப் பயன்படுத்தப்படுகின்றது. இது நல்லவர்களையும் பொல்லாதவர்களாக்கும்; ம. இ. கா. வின்பால், சமூக சேவையின்பால் ஆர்வத்தோடும் உண்மையோடும் ஈடுபட்டுச் செயற்படுவோரை தூரவிலகிப் போகுமாறு செய்துவிடும்.

நல்ல தொண்டர்களை இழந்துவிட்டு புலிகளையும், நரிகளையும், புற்றடையும் நாகங்களையும் வைத்துக் கொண்டு நாகரிகமான சேவைகளைப் பெற முடியாது. சூதும், சூழ்ச்சியும், சுரண்டலும், சுயநலமுமே பொதுவாழ்க்கையின் உத்தி என்றாகிவிட்டபின் அந்தக் கொடிய நோயைத் தீர்க்க எந்த டாக்டராலும் முடியாமற்போய்விடும்.

சமூகத்தில் சாதிபேதமற்ற ஒருமைப்பாட்டு உணர்வு மெள்ள மெள்ள உயிரைவிட்டுக் கொண்டிருக்கிறது. உண்மையும், ஒழுக்கமும், நேர்மையும் சித்திரவதைப் பட்டுக்கொண்டிருக்கின்றன. அரசியல் நாகரிகமும் சமூகப் பண்பாடும் கொடுஞ்சிறைவாசத்தில் நலிந்துகொண்டிருக்கின்றன.

ம. இ. கா. வின் தலைமைத்துவம் இவற்றிற்கெல்லாம் ஒரு முடிவைக் கட்டுவதன் வழி ம. இ. கா. வைப் பயன் தரக்கூடிய தருவாகப் பாதுகாக்க முடியும்.

புதிய சமுதாயத்தில் இடம்பெறும் கதை, கட்டுரை, கவிதைகளில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே.



ஊருக்கு உழைப்பவன்



இளமையமான "எதிர்காலம்" படத்தில் ஸ்ரீப்ரியா

"இன்று நம் திருமண நாள்; உங்கள் வரவை மிக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். நீங்கள் வரும்வரை ஒரு சொட்டுத் தண்ணீர்கூட அருந்தமாட்டேன்" என்று கூறி அவனை அனுப்பி வைக்கிருள். அவன் வரவை எதற்காக அவள் எதிர்பார்க்கிருள் என்பதை நாசுக்காக உணர்த்திவிட்டாள்.

அவனே நள்ளிரவுக்குத்தான் வருகிறன். என்ருலும் அவள் ஏக்கத்தை அவன் போக்கவில்லே. விலகிப் போகிறன் இது இப்போது மட்டும் நடக்கவில்லே. கொஞ்ச நாட்களாகவே நடந்துவருகிறது.

இதற்குக் காரணம் தெரிய வேண்டுமென்ருல் "ஊருக்கு உழைப்பவன்" படத்தைப் பார்க்கவேண்டும்.

நாட்டுக்குத் தீங்கு செய்யும் கயவர்களைக் கண்டுபிடிக்கும் கதை இது. தீயவர்களைக் கண்டுபிடிக்கும் போலீஸ் அதிகாரியாக வரும் எம். ஜி. ஆருக்கு இரட்டை வேடம்.

வெண்ணிற ஆடை நிர்மலா பணக்காரப் பெண்ணுகை வந்து எப்படி ஜொலிக்கிருர்? இந்தப் பணக்காரப் பெண் எம்.ஜி.ஆரின் மனைவியாக வந்து இளம் உள்ளங்களை ஆட்டிப் படைக்கிருர்.

எம்.ஜி. ஆரின் மற்ருெரு ஜோடியாக வாணிஸ்ரீ வருகிருர்.

இப்படத்தில் வரும் ஹெலிகாப்டர் சண்டை பார்த்து ரசிக்கத் தக்கது.

ரசித்துப் பார்க்கத்தக்க வண்ணத்தில் உருவாகியுள்ள இம்படத்தை மலேசியாவில் "ராமா பிலிம்ஸ்" வெளியிடுகிறது.

—பமன்



"காற்றினிலே வரும் கீதம்" படத்தில் கவிதா



முத்துராமன்-சுமித்ரா -படம்: "வாழவேண்டும்"